விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 21 ஞாயிற்றுக்கிழமை (05.01.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 017

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## மன்னார் மனிதப் புதைகுழியில் நேற்றும் 3 எலும்புக் கூடுகள் மீட்பு

### சிறுவர்களின் பற்களும் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

திருக்கேதீஸ்வரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியில் இருந்து நேற்று சனிக்கிழமையும் மேலும் 3 மனித எலும்புக் கூடுகளும், சிறுவர்களின் பற்களும் மீட்கப்பட்டுள்ளன. இந்த மனிதப் பற்கள் சுமார் 6 வயது சிறுவர்களுடையதாக இருக்கலாம் என் அதிகாரிகள் ஊகம் வெளியிட்டுள்ளனர்.



கடந்த மாதம் 20ஆம் திகதியில் இருந்து நேற்று சனிக்கிழமை வரைக்கும் இந்த மனிதப் புதைகுழியில் இருந்து 18 மனித எலும்பு கூடுகளும், மனித எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணத்தின் பணிபுக் கமைய அநுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல். வைத்தியரெட்ன முன்னிலையில் நேற்று காலை 8 மணிமுதல் மாலை 2.15 மணிவரைக்கும் இந்த மனிதப் புதைகுழி தோண்டப்பட்டது. இந்நிலையில், இந்த மனிதப் புதைகுழி தோண்டும் பணி மீண்டும் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இதனிடையே, இந்த மனிதப் புதைகுழியை தோண்டும் பணி நேற்று முன்தினம் இடம் பெற்ற போது, 23-ம் பக்கம் பார்க்க


### சிறிதரன் வீட்டில் மர்ம மனிதர்கள்

(கிளிநொச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் வீட்டிற்கு இலக்கத் தகடுகளற்ற மோட்டார் சைக்கிளில் நேற்று முன்தினம் மாலை சென்ற இருவர் குடும்பத்தினரிடம் எம்.பி தொடர்பில் மிரட்டல் பாணியில் விசாரித்துச் சென்றுள்ளனர் என முறையிடப்பட்டது.

பின் ஒருசில மணிநேரத்தின் பின் மீண்டும் அதே பாணியில் அச்சுறுத்தும் வகையில் எம்.பியின் கௌரவத்துக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் வார்த்தைப் பிரயோகங்களையும் செய்து விசாரித்துவிட்டு அருகில் உள்ள 23-ம் பக்கம் பார்க்க!

### பொறுப்புக் கூறல் விவகாரம் ஆராய அமெரிக்க தூதுவர் வருகை



(கொழும்பு)

போர்க்குற்ற விவகாரங்களை கையாளும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்மட்டத் தூதுவர் ஸ்டீபன் ராப் நாளை இரண்டாவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நாளை 6ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கவுள்ள இவர், அரசாங்க அதிகாரிகளையும், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இதன் போது பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் அவர் பரந்தளவிலான கலந்துரையாடல்களை நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த இவர், இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் 23-ம் பக்கம் பார்க்க

## யுத்தத்தை நோக்கிய வடக்கு மாகாண சபை!

### மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை மீண்டுமொரு யுத்தத்தினை நோக்கி பயணிக்கின்றது என யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறு வடக்கு மாகாண சபை செயற்படக் கூடாது என்றும், மாகாண சபை அரசியல் நோக்கங்களிற்காக செயற்படக் கூடாது எனவும் அவர் அறிவுரை வழங்கியுள்ளார்.

இனிவரும் காலப்பகுதியில் எமக்குள் பிரச்சினை ஏற்பட்டால் அது பாரிய அழிவாகத்தான் இருக்கும், அவ் அழிவு இலங்கை முழுவதிலும் பாதிப்பினையேற்படுத்தும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டதனையடுத்து அவருக்கான பிரிவுபசார விழா ஒன்று இராணுவத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வசாவிளான் அலுவலர்கள் குழுவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் 2009 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் திகதியன்று யாழ். மாவட்டத்திற்கு கடமைக்கு வந்திருந்தேன்.

நான் கடமையேற்ற காலப் பகுதியுத்தம்நிறைவுற்ற காலப் 23-ம் பக்கம் பார்க்க


அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம்
செய்திகள் பக்கம் 13


2014 எப்படி?
துலாம்
இராசி பலன் பக்கம் 10


இங்கிலாந்து திணறல்
விளையாட்டு
பக்கம் 22


கொஞ்சம் சிரிக்கலாம்
வியாசகர் பதில்கள்
பக்கம் 20


பேரணி மீது எகிப்தில் சூடு
உலகம் பக்கம் 18

### துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பாதாள உலகக் குழுக்களின் தலைவர் விசேட அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியாகியுள்ளார்.

அதிரடிப்படை குழுவொன்று நேற்று தனமல்வில காட்டில் பெரிய கஞ்சா சேனை பயிரிடப்பட்டுள்ளதாக திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது, அக்காட்டில் இருந்த குழுவினர் ரி-56 ஆயுதங்களைக் கொண்டு விசேட அதிரடிப்படையினரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இருதரப்பினருக்குமிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டின் போது, பாதாள உலகக் குழுக்களின் தலைவர் படுகாயத்திற்குள்ளான நிலையில், வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் சந்தேகநபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 23-ம் பக்கம் பார்க்க

## இராணுவ அடக்குமுறையின்றி சுதந்திரமாக வாழ வேண்டும்

### மக்களின் கருத்தை வெளிப்படுத்தினார் சி.வி

(யாழ்ப்பாணம்)

இராணுவ அடக்குமுறைகள், கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட்டு ஏனைய மாகாண மக்கள் வாழ்வதைப் போல வடக்கு மக்களும் வாழ வேண்டும் என்பதனையே ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமது கோரிக்கைகள் தொடர்பில் பரிசீலிப்பதாக ஜனாதிபதி கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பொன்றினை வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கடந்த வியாழக்கிழமை மேற்கொண்டிருந்தார்.

பேச்சுவார்த்தை தொடர்பாக வினா எழுப்பிய போதே



விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண சபைக்கான நிர்வாகத்தை எவ்வித தடைகளுமின்றி செயற்படுத்தவும் வட மாகாண சபை எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கையினை முன்வைத்திருந்தோம்.

மேலும், ... 23-ம் பக்கம் பார்க்க

### கருத்துக்களை வெளியிட வேண்டாம் பிரதமருக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

மாறுபட்ட கருத்து மோதலகள் இருக்கும் போது, கருத்து வெளியிடுவதை தவிர்க்குமாறு பிரதமர் ஜயரட்னவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவுரை கூறியுள்ளார்.

அலரி மாளிகையில் அண்மையில் இடம்பெற்ற மத்திய தொழிலாளர் குழுவுக்கிடையிலான சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மிக கவனமாக தமது கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். இல்லையெனில், மக்கள் அரசாங்கத்தின் 23-ம் பக்கம் பார்க்க

### மீட்கப்பட்ட குண்டு செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மீட்கப்பட்ட குண்டு நேற்று படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

வடமராட்சிப் பிரதேசத்தில் பொலிகண்டி மேற்கு, செம்மீன் படிப்பக மைதானத்தை இளைஞர்கள் நேற்று முன்தினம் மாலை துப்புரவு செய்தபோதே மேற்படி மோட்டார் குண்டு கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டது.

குறித்த மோட்டார் குண்டு, வடமராட்சி 521வது படைப்பிரிவைச் சேர்ந்த வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் படைப்பிரிவினரால் நேற்று சனிக்கிழமை செயலிழக்கம் செய்யப்பட்டது. 23-ம் பக்கம் பார்க்க

### இந்தியாவில் சம்பந்தன்

(சென்னை)

இந்தியாவுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அக்கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன், மத்தியகுழு உறுப்பினர்களான அ.சவுந்திரராசன், 24-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண சபைக்கு புதிய இணையத்தளம்

வட மாகாணத்திற்கான இணையத்தளம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் அவரது அலுவலகத்தில் வைத்து http://www.np.gov.lk என்ற முகவரியூடாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்த இணையத்தளத்தில் வடமாகாண சபை, வடமாகாண ஆளுநர் அலுவலகம், பிரதம செயலாளர் அலுவலகம், கல்வி, கலை பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அலுவலகம், விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சின் அலுவலகம், மீன்பிடி, போக்குவரத்து மற்றும் வணிகத்துறை அமைச்சின் அலுவலகம், சுகாதார அமைச்சின் அலுவலம் ஆகியவற்றின் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்(எ-11)

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு கற்பிட்டி பொலிஸாரிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டஇந்திய மீனவர்கள் 15 பேரையும் எதிர்வரும் 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் நீதிமன்ற பதில் நீதவான் பஸால் அபுத் தாஹிர் நேற்று உத்தரவிட்டார்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த மீனவர்கள் கற்பிட்டி பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அத்துடன், மீனவர்களின் படகுகளினை கற்பிட்டி கடற்படையினரிடம் ஒப்படைக்குமாறும் பதில் நீதவான் உத்தரவிட்டார.

சட்டவிரோதமான முறையில் மீன் பிடித்துகொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மன்னார் மற்றும் கற்பிட்டி கடற் பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் 26 பேர் கடற்படையினரால் நேற்று முன்தினம்கைது செய்யப்ப ட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-11)


## உடனடியான வேலைவாய்ப்பு

புத்தாண்டில் புதிய உடனடியான வேலை வாய்ப்புகள். 20000/=, 25000/=, 32000/= சம்பளத்துடன் உண்வு+ தங்குமிடம் குறைந்த விலைகளுடன் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/ கோடியல்/water bottel/ Bettery கோழிஇறைச்சி/ ஆடை/தேயிலை/ பெயின்ட்/ விளையாட்டு பொருட்கள்/துரிகை/ குளிர்பானம் போன்ற தயாரிப்புக்களுக்கு ★உற்பத்தி ★லேபல் ★பொதியிடல் ★தரம்பிரித்தல் பிரிவுக்கு 18-50 வயது ஆண்-பெண் தேவை (நண்பர்கள்+ குழுக்களாக+ தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்)

விரைவாகதொடர்புகளுக்கு:- 0777117661

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-6107)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER


# மரண அறிவித்தல்

## ராஜநாதன் ராஜதுரை

**(முன்னாள் இலங்கை போக்குவரத்து சபை-C.T.B)**



**பிறப்பு:- 08.02.1938 இறப்பு:- 30.12.2013**

யாழ்.உடுவிலைப் பிறப்பிடமாகவும் கல்வி யங்காடு (G.P.S.Road),கனடாவை (Mon treal) வசிப்பிடமாகவும் கொண்ட ராஜ நாதன் ராஜதுரை அவர்கள் 30.12.2013 அன்று கனடாவில் (Montreal) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்ற இராசேந்திரம் நேசம்மாவின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.01.2014 ஞாயிற்றுக் கிழமை அன்று கனடாவில் (Montreal) நடைபெறும்.

இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: சி.மகேந்திரன் குடும்பத்தினர்.
(0776096993, 0779980263)

(5238)


2 மணித்தியாலத்தில்

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா?உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள். 077 908 6737

GUNAA BEST PC
52,Hospital Road,Jaffna.

இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service 2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Computer Repair Laptop and motherboard Repair

## PERSONAL / GROUP CLASSES

மானிப்பாய் பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் தரம் 6 முதல் தரம் 11 வரை கணித பாடம் தமிழ், ஆங்கில மொழி மூலம் பிரத்தியேகமாக கற்பிக்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு:
077 393 4670

(சி-6108)

## வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்.நகரில் இல.08 குருசோ வீதியில் அமைந்துள்ள சகல வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. 2 1/2 பரப்பு காணியில் 4 அறைகள், 2 Hall, கராஜ் (Garage), மேலே பல்கனி, சுற்றுமதில், நல்ல தண்ணீர் கிணறு, மோட்டார், தண்ணீர் தாங்கி யாழ்.நகரசபை இணைப்புடன் உள்ளது. கண்டி வீதியில் இருந்து 150 யார் தொலைவில் Press Road குருசோ வீதி சந்திப்புக்கு அருகாமையில் மரியன்னைபேராலயத்தில் இருந்து 100 யார் தொலைவிலும் சென்.பற்றிக்ஸ், சென்.ஜோன்ஸ், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிகள் மத்தியில் அமைந்துள்ளது.

தொடர்புகளுக்கு:- fr.paul Nadchethiram
Phone No:-222 8086
Call No:-0776913177

(5242)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நீராவியடியில் கடைச்சாமி வீதியில் 2 பரப்பு வெறும் காணி கிணற்றுடனும் சுற்று மதிலுடனும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
077 3164595

(5232)

## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

- ★ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- ★ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- ★ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- ★ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். *(Gov. Reg.No: W/A 76795)*

Tel: 0213216928, 0774842464 ,0212220393

(C-6102)


## 42ம் அகவை நிறைவில் அகமகிழ்ந்த வாழ்த்து

### வேல்விநாயகம் பரமேஸ்வரன்

(யா/அம்பன் அ.மி.த.க பாடசாலை அதிபர்)



எமது அன்னை ஸ்ரீபத்திரகாளி நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீவீரமாகாளியம்மன் வட பத்திரகாளியம்மன் திருவருள் சிறந்து பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
(B.A.Dip.in.Ed.M.A)
பிரதியதிபர் யா/அம்பன் அ.மி.த.க.பாடசாலை
ஆதீனகர்த்தா நெல்லண்டை பத்திரகாளியம்மன் கோவில்

(c-6109)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurii@yahoo.com,
valampurijaffna@gmail.com



# இலவச இணையக் கற்கைநெறி நிறுவகம்
# SERVE e-Learning Institute

T.P:- 021 225 6206 பதிவு எண்:- 1100

**கற்கைநெறி:-**

**இலவச Diploma In Information Communication Technology (ICT)**

**(4 மாதங்கள்)**

**தகைமைகள்:-**

- ★ க.பொ.த(உ/த) பரீட்சைக்கு தோற்றிப் பல்கலைக்கழக அனுமதியை எதிர் நோக்குவோர்.
- ★ க.பொ.த(உ/த) பரீட்சையில் சித்தியடைந்து வேலை தேடுவோர் or வேறு தொழில் பயிற்சிகளை மேற்கொள்வோர்.
- ★ க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றியோர்.

பாடங்கள்:-

தகவல் தொழில்நுட்பம் (ICT)
ஆங்கிலம் (English)
தட்டச்சுப் பயிற்சி (Computer Typing)

## விண்ணப்ப முடிவு திகதி:10.01.2014

மேலதிக விபரங்களுக்கு
NO.66, கட்டைப்பாலி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை. தொலைபேசி:0212256206

மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
பதிவாளர்
SERVE e-Learning Institute

(5235)

# நவாலி Y.M.C.A ஆதரவில்
# மாபெரும் கல்விக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

இடம் :- நவாலி Y.M.C.A மண்டபம்
பிரசாத் றோட், நவாலி.
காலம்:- 04.01.2014 முதல் 06.01.2014 வரை
நேரம்:- காலை 08.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

- ✦ இலங்கையின் முன்னணி புத்தக வெளியீட்டாளர்கள் அனைவரது புத்தகங்களையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
- ✦ கற்றல் செயற்பாடுகளுக்குத் தேவையான சகல விதமான அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(5239)

புத்தக அனுசரணை
அம்பிகை புத்தக நிலையம்.
ஓட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:- தி.ராஜா தொலைபேசி:- 0752972851


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதல் முறையாக ஆபரண மலிவு விற்பனைச் சந்தை யாழ்ப்பாணத்தில்

தங்க முலாம் பூசப்பட்ட நகைகள், கிளசிக் பேர்ள்ஸ், ரேடியம் முலாம் பூசப்பட்ட கொரியன் கல் பதித்த ஆபரணங்கள் முதலியனவற்றை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மகளிருக்கு ஓர் பொன்னான சந்தர்ப்பம்.

**10 இலட்சத்திற்கும் மேற்பட்ட டிசைன்களிலிருந்து தெரிவு செய்து வாங்குவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.**

**ரூபா 200/- மற்றும் ரூபாய் 400/- மட்டுமே.**

## இடம்:- வீரசிங்கம் மண்டபம்
## 12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**4 நாட்கள் மட்டும் 05,06,07 மற்றும் 08 ஆம் திகதி ஜனவரி 2014**

ஞாயிறு, திங்கள், செவ்வாய், மற்றும் புதன்கிழமை (நேரம்- காலை 10 மணி முதல் மாலை 8 மணி வரை)

ஒவ்வொன்றும் ரூபாய் 2000 முதல் ரூபாய் 4000 வரையான ஏற்றுமதி விலை கொண்ட ஆபரணங்கள் ரூபாய் 200 முதல் ரூபாய் 400 வரை மட்டும் விற்கப்படவுள்ளன.

இந்த விளம்பரத்தில் அனைத்து டிசைன்களின் பெயர்களையும் குறிப்பிட முடியாமையால் சில மட்டும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- கொரியன் ஸ்டோன் ஸ்டட்ஸ ........ Rs.200/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட ஆண்களுக்கான ப்ரேஸ்லட் ........ Rs.200/- மட்டும்
- அவுஸ்திரேலியன் டயமண்ட் மோதிரம் ........ Rs.200/- மட்டும்
- வெஸ்டன் ஸ்டைல் தோடு ........ Rs.200/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட ஆண்களுக்கான மோதிரம் ........ Rs.200/- மட்டும்
- கொரியன் ஸ்டோன் தோடு ........ Rs.200/- மட்டும்
- வெள்ளி முலாம் பூசப்பட்ட கால் கொலுசு ........ Rs.200/- மட்டும்
- ஓசன் ப்ளு டயமண்ட் மோதிரம் ........ Rs.400/- மட்டும்
- அவுஸ்திரேலியன் டயமண்ட் நெக்லஸ் செட் ........ Rs.400/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட வளையல் செட் ........ Rs.400/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட சங்கிலி ........ Rs.400/- மட்டும்
- அவுஸ்திரேலியன் டயமண்ட் சேலை பின் ........ Rs.400/- மட்டும்
- கிளசிக் பேர்ள் நெக்லஸ் செட் ........ Rs.400/- மட்டும்
- சுஹாகன் மங்கல் சூத்ரா. ........ Rs.400/- மட்டும்

**விசேட சலுகை :** திருமணம் மற்றும் விசேட வைபவங்களுக்கான ஆபரணங்கள் ரூபாய் 500/– முதல் ரூபாய் 16000/– வரையான விலைகளில் விற்கப்படும்.

**Entry Free** | **CONTACT : 0774032706** | **Sunday Open**

*Presented by : S&G International Agencies (Pvt) Ltd* (5234)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்திற்கான நீர்விநியோகம் தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் இரணைமடுக் குளத்தில் பயன் பெறும் விவசாய மக்களின் தேவைகளுக்கு மேலதிகமாகவுள்ள நீரை மட்டும் பெற்றுக் கொள்ள வேண்டும். என்றும் அவ்வாறு பெறப்படும் நீரை குடிநீராக மட்டும் பயன்படுத்த வேண்டும் என்றும் நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்திச்சங்கம் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக அதன் தலைவர் ச.லோகசிவம் தெரிவித்துள்ளார்.

இச்சங்கத்தின் நிர்வாக சபை கூட்டம் கடந்த டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி நடை பெற்ற போதே மேற்படி தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

அத்தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டம் விடயமாக ஆராயப்பட்டு தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளது.

எதிர் காலத்தில் யாழ். மாவட்டத்திற்கு ஏற்பப்போகும் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்க்கதரிசனமாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினாலும் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சினாலும் முன் மொழியப்பட்டிருக்கும் சமூகமயப்படுத்தப்பட்ட கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரதிட்டம் யாழ் மாவட்டத்திற்கு கிடைக்கப்போகும் வரப்பிரசாதமும் ஒரு வரலாற்று நிகழ்வு மாகும்.

இதற்கு நிதி முகவர்களாகிய ஜப்பான் அரசாங் கத்திற்கும் இலங்கை அரசாங்கத் திற்கும்பங்களிப்பு செய்யவிருக்கும் மக்கள் பங்களிப்பிற்கும் நன்றி தெரிவிக்க வேண்டும். அத்துடன் இத் திட்டத்தினால்கிளிநொச்சிமாவட்ட வாழ் மக்களும் பயனடையும் அதேவேளை யாழ். மாவட்ட மக்கள் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

இரணைமடு குளத்தினால் பயன் பெறும் விவசாய மக்களின் தேவைகளிற்கு மேலதிகமாகவுள்ள நீரை மட்டும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அப்படிப் பெறப்படும் நீரை குடிநீராக மட்டும் யாழ்.மாவட்ட மக்கள் பயன்படுத்த வேண்டும்.

இதற்கு மேலதிகமாக இரணைமடுக் குளத்திற்கு மகாவலி ஆற்று நீரையும் அத்துடன் வீணாக கடலில் சேரும் வேறு ஆறுகளை திசைதிருப்பி இரணைமடுக் குளத்திற்கு கொண்டு வருவதற்கான எதிர் காலத்திட்டங்களை வகுக்க வேண்டும் என வும் எமது சங்கம் தீர்மானம் மூலம் சுட்டி க்காட்ட விரும்புகிறது. எனவே கிளிநொச்சி மாவட்ட மக்களிற்கு நிறை வேற்றுநர்கள் உறுதி மொழி வழங்கி அவர் களின் சந்தே கங்களை போக்க வேண்டும் எனவும் இவ்விடயங்களை கிளி நொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்களிற்கு தெரி விக்கவும் யாழ். மாவட்ட மக்கள் இவ்விடயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ-2)

# சவுதியில் நிர்க்கதிக்குள்ளான நிலையில் இலங்கையர்கள்

சவுதி அரேபியாவிற்கு தொழில் நிமித்தம் சென்று நிர்க்கதிக்குள்ளான மேலும் சில இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் பதிவாகியுள்ளன.

நிர்க்கதிக்குள்ளான இலங்கையர்கள் சிலர், அந்த நாட்டின் தமாமில் உள்ள 91ஆம் இலக்க முகாமில் தங்கியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

உணவு தட்டுப்பாடு உள்ளிட்ட சில பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுதொடர்பாக, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக ஊடகப் பேச்சாளரும், பிரதி பொது முகாமையாளருமான மங்கல ரந்தெனிய கூறுகையில், இந்த இலங்கையர்கள குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

தூதரக உத்தியோகத்தர்களின் உதவியுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக தொடர் பாடல் பிரிவு ஆராய்ந்து பார்த்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த பணியாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படுவதற்கு முன்னதாக, அவர்கள் தங்கள் பணியிடங்களில் இருந்து வெளியேறியுள்ளமை தெரியவந்துள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக ஊடகப் பேச்சாளர் குறிப்பிடுகின்றார்.

ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய சம்பளத் தை வழங்குவதற்கு அவர்களின் எஜமானர்கள் இணக்கம் தெரிவித்திருப்பதாக சுட்டிக் காட்டிய அவர் இந்த பணியாளர்கள் விரும்பும் பட்சத்தில் மீண்டும் பணியில் அமர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என மேலும் தெரிவிக்கின்றார். (அ-2)

# இடை விலகிய மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன

(குருமன்காடு)

வவுனியா பிரதேசத்தில் வறுமை காரண மாக பாடசாலைக்குச் செல்லாமல் இடை விலகலை எதிர்நோக்கும் 168 மாணவர்களுக்கு ஓமந்தை அரசர்பதி ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய நிர்வாகத்தினரும் அகரம் கல்வி அறக்கட்டளை நிர்வாகமும் இணை ந்து உதவிகளை நேற்று முன்தினம் வெள்ளி க்கிழமை வழங்கியுள்ளது.

இந் நிகழ்வு வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா தலைமையில் இடம்பெற்றது.

எதிர்காலத்தில் இவ் ஆலயத்தினர் முதியோர் இல்லம் ,சிறுவர் இல்லம், பெற் றோரை இழந்த சிறுவர்களை பராமரி க்கும் இல்லம் போன்றவற்றை அமைத்து பல்வேறு சமூக சேவைகளில் ஈடுபடவு ள்ளன.

இவ் ஓமந்தை பகுதியில் மின்சாரம் போக்குவரத்து ஆகிய வசதிகள் இல்லாத பகுதிகளுக்கு அவ் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளுமாறு கோரிக்கை ஆலய தர்ம கர்த்தா சபையினரால் விடுக்கப்பட்டது.

அத்தோடு அகரம் கல்வி அறக்கட்டளை நிறுவனமும் வறுமையினால் கல்வியைத் தொடர முடியாமலுள்ள மாணவர்களுக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கவுள்ளது.

(அ-9-250)

# இராசி பலன்

05.01.2014
(மார்கழி 21, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 8.40 மணிவரை
சதயம் பின்னிரவு 4.14 மணிவரை
இராகுகாலம் 5.01-6.31 மணிவரை
சுபநேரம் 9.31-11.01 மணிவரை

**மேடம்** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்க வர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள் வீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**இடபம்** வாய்ப்புகள் வந்து சேரலாம், கட்டடப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும் பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் கூடும், பிரயாண பயமுண்டு, வேலையாட்களிடம் போராடி வேலையை முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படை வீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண் அபூர்வ சந்திப்புண்டு, விருந்துக ளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், ஆரோக்கியமான நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண் பீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**துலாம்** வியாபாரத்தை விரிவு படுத்தும் எண்ணம் மேலோங்கும், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பூர்வீக சொத்துகளால் ஆதாயமுண்டு.

**விருச்சிகம்** பணத் தேவைகளை நிறைவு செய்ய நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், உறவினர் வருகையுண்டு , பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு** சகோதர வழியில் ஒத்தாசைகள் கிடைக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், எடுத்த காரியங்கள் வெற்றிதரும், போசன சுகமுண்டு.

**மகரம்** புதிய முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கும்பம்** தொழில் நலன் கருதி புதிய நபர்களைச் சந்திக்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு உட்பட நேரிடலாம், பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும், பிதாசிந்தை உண்டு, சுபவிரயங்கள் கூடும்.

வளவன்

# வாரம் ஒரு தகவல்

## விஷப்பரீட்சை

“ சேர் ... உங்களுக்கு என்ன ஆச்சு ?”

“ என்ன சொல்றீங்க?”

“ கல்யாண மண்டபத்துக்கு வந்தீங்க ... சரி; முதல் பந்தியில் உட்கார்ந்து சாப்பிட்டீங்க ... சரி; சாப்பிட்டு வெற்றிலை பாக்கு போட்டீங்க .... சரி; திடீரென்று பைத்தியம் பிடித்தது மாதிரி சொல்லாமல் கொள்ளாமல் இப்படி ஓடி வாறீங்களே என்ன விடயம்?”

“ ஹி! அதுவா ? எனக்குத் தேனீயைக் கண்டால் பயம் !

கொட்டினால் வலி தாங்க முடியாது . அங்கே பந்தல் முகப்பில் நின்றுகொண்டிருந்த போது ஒரு தேனீ வந்து என் முகத்துக்கு நேராகப் பறந்ததைப் பார்த்து விட்டேன் . அது தான் பறந்து வந்து விட்டேன் .”

“ தேனீ கொட்டினால் வாத நோய்க்கு நல்லது சேர் ”

“அப்படித்தான் சொல்வது வழக்கம் . அது உண்மையா?”

“லண்டன் விஞ்ஞானிகளின் தேனீ விஷத்திலிருந்து peptide 401 என்ற மருந்தைத் தயாரித்திருக்கிறார்களே”

“ அப்படியா? ”

“ ஆமாம். மூட்டுவலிக்கு கார்டிசோன் மாதிரி சில மருந் துகளைக் கொடுப்பது வழக்கம் . அதையெல்லாம் விட இது நூறு மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கிறதாம் .”

“நீங்கள் சொல்வதெல்லாம் சரி. அதற்காக தேனீயைக் கூப் பிட்டுக் கொட்டு என்று சொல்லும் அளவுக்கு நமக்குத் துணிச்சல் கிடையாது சேர்.”

“இருந்தாலும் நீங்கள் இப்படிப் பயப்படக்கூடாது சேர் .” அங்கே கல்யாண வீட்டில் என்னமோ ஏதோ என்று எல்லோரும் பயந்து விட்டார்கள். என்ன வேகமாக ஓடி வந்துவிட்டீர்கள் ......”

“ சரி .... நான் தான் அப்படி ஓடி வந்தேன். நீங்கள் ஏன் பின்னால் இப்படி ஓடிவர வேண்டும் ?”

“நீங்கள் போட்டிருக்கும் செருப்பு என்னுடையது. அதற்காகத்தான் நான் ஓடி வந்தேன் .”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 100 |
| தக்காளி | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 20 | 20 | 40 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100-180 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 60-110 | 100 | 80 |
| பாகற்காய் | 110 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 40 |
| பயற்றங்காய் | 100 | 80 | 60 |
| லீக்ஸ் | 80 | 60 | 80 |
| பீற்றூட் | 50 | 50 | 80 |
| கறிமிளகாய் | 120 | 140 | 160 |
| முருங்கைக்காய் | - | 400 | - |
| போஞ்சி | 110 | 70 | 60 |
| கத்தரிதம்புள்ள | 60 | - | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 35 |
| தேசிக்காய் | 50 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 35-40 |
| இராசவள்ளி | 90 | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா கடன் வழங்க இணக்கம்

வீதி அபிவிருத்திக்காக இரண்டு பில்லியன் ரூபா கடன் வழங்க சீனா இணக்கம் வெளியிட்டுள்ளது.

இந்நிதியில் 93 கிலோ மீற்றர் நீளமுடைய பாதைகள் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

நாரந்தெனிய ஹக்மன, அயலகம எகலோய, மாவனல்ல ஹெம்மாத்தகம, கம்பளை வீதி, ஹற்றன்- மஸ்கெலிய டெல்ஹவுஸ் வீதிகள் இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

பெருந்தெருக்கள் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியினால் இந்த யோசனைத் திட்டம் முன் வைக்கப்பட்டதாகவும், இதனை அமைச்சரவை அங்கீகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# செய்மதி உபகரணங்கள் கடத்தி வந்த நபர் கைது

(சென்னை)

இந்தியாவின் பெங்களூரில் இருந்து செய்மதி ஏற்பிகள் (satellite receivers) மற்றும் பெரிய வெங்காய விதைகளை கடத்தி வந்த இலங்கைப் பிரஜை கட்டுநாயக்கவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

60 செய்மதி ஏற்பிகளும் (satellite receivers) அதற்குத் தேவையான 200 உபகரணங்களும், 50 கிலோ கிராம் எடையுடைய பெரிய வெங்காய விதையும் குறித்த நபர் கடத்தி வந்துள்ளார்.

தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் அனுமதியின்றி இலங்கைக்கு எடுத்துவரப்பட்டதையடுத்து, அவரிடமிருந்து அனைத்துப் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடத்தி வரப்பட்ட வெங்காய விதை களின் பெறுமதி 4 இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் கொழும்பைச் சேர்ந்தவர் எனவும், இவர் இந்தியாவிற்கு அடிக்கடி சென்று வருபவர் எனவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவருக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் சுங்கத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# உணவு ஒவ்வாமையால் 75 பேர் வைத்தியசாலையில்

ஹொரனைப் பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் உணவு விஷமடைந்ததால் 75 ஊழியர்கள் சுகயீனமுற்றுள்ளனர்.

இச் சம்பவம் நேற்றையதினம் இடம்பெற்றது. இவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாந்தி, மயக்கம், தலைவலி, போன்ற நோய் அறிகுறிகள் இவர்களிடம் தென்படுவதாகவும், மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியர் குழுவொன்றை ஈடுபடுத்தியுள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள் ளது.

உணவு விஷமடைந்ததால் ஹொரனை பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றைச் சேர்ந்த 350இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு உணவு விநியோகித்தவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர்கள் உட்கொண்ட உணவின் மாதிரிகளும் தற்போது மருத்துவ ஆய்வு நிலையத்தில் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன. (அ-2)

# விவசாயிகள் ரம்புட்டான் செய்கையில் ஆர்வம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பரீட்சார்த்த முறையில் மேற்கொள்ளப்பட்ட ரம்புட்டான் செய்கை வெற்றியளித்துள்ளது.

இதனால் அங்குள்ள விவசாயிகள் ரம்புட்டான் செய்கை மீது கூடிய ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மட்டக்களப்பு படுவான்கரை பிரதேசத் தின் போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் திக்கோடை கிராமத் திலேயே இவ்வாறு பரீட்சார்த்த முறையில் ரம்புட்டான் செய்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

திக்கோடை கிராமத்தில் விவசாயி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட ரம்புட்டான செய்கை வெற்றியளித்துள்ளதால், அந்த பிரதேசத்திலுள்ள ஏனைய விவசாயிகளும் ரம்புட்டான செய்கை மீது ஆர்வம் காட்டி வருவதாகதெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# பால்மாவை பதுக்கினால் கைது செய்யப்படுவர்

பால் மாவை பதுக்கும் வர்த்தகர்களை கைது செய்யும் நடவடிக்கை ஒருசில வர்த்தகர் களின் பதுக்கல் நடவடிக்கையே, சந்தையில் பால்மாவுக்கான தட்டுப்பாடு நிலவுவதற்கு காரணமாக அமைந்துள்ளது என நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிடுகி ன்றது.

பால்மாவை பதுக்கிவைக்கும் வர்த்தர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படு வருவதாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒருதொகை பால்மா அண்மையில் சீதுவை மற்றும் வத்தளை பகுதிகளில் இருந்து கைப்பற்றப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், பால்மாக்களின் விலையை உயர்த்துவது தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என்றும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கூறினார். (அ-2)

# இலங்கை விடயத்தை அரசியல் நலனுக்காக பயன்படுத்துகின்றனர் -நாச்சியப்பன்

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தை தமிழக அரசியல்வாதிகள் சுயலாபத்திற்காக பயன்படுத்திக் கொள்வதாக மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும், தங்களது அரசியல் தேவைகளுக்காக இலங்கை விவகாரத்தைப் பயன் படுத்திக் கொள்கின்றனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் விவகாரத்தில காங்கிரஸ் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. எவ்வாறெனினும், லோக் சபா தேர்தல்களின் போது தமிழக அரசியல் கட்சியொன்றுடன் காங்கிரஸ் கூட்டணி சேரும் எனவும், யாருடன் சேர்வது என்பது குறித்து தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற ற க்கழகம தேர்தல் காலத்தில் பிழையான தீர்மானங்களை எடுப்பதனை வழமையாகக் கொண்டது. அதன் அடிப்படையில் தற்போது பாரதீய ஜனதா கட்சியுடன் வைகோ கூட்டணி சேரத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார. (அ-2)

# வட, கிழக்கு கடற்பரப்பில் பலத்த காற்று வீசும்

## காலநிலை திணைக்களம் எச்சரிக்கை

வடக்கு மற்றும் கிழக்கு கடற்பிரதேசங்களில் கொந்தளிப்புடனான காற்று வீசக் கூடும் என காலநிலை அவதான திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. திருகோணமலைக்கு அப்பால் 250 கிலோமீற்றர் தூரத்தில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் வலுப்பெற்று வருவதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக, மன்னார் தொடக்கம் பொத்துவில், யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் இடியுடனான கடும் மழை பெய்யக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வடபகுதியிலிருந்து கிழக்கு நோக்கி வீசும் காற்று மணிக்கு முப்பது தொடக்கம் ஐம்பது கிலோமீற்றர் வரை அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, காலி மற்றும் புத்தளம் ஊடாக கொழும்பு வரையிலும், கரையோர கடற்பிராந்தியத்தில் இந்நிலை நீடிக்கும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## மலிவு விற்பனை

மிக மிக மலிவு விலையில் Sony, பனசோ னிக் T.V கள் 21" - 14000/- 29" - 15000/, DVD- 3000 ரேடியோகஸெற்-CD, DTS அம்பிளி பயர் Box வகைகள் குளிர்சாதனப் பெட்டிகள்

தொடர்பு;- 0770440570 சோனி ரேற்ட்சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்) 56, K.K.S. விதி, சுன்னாகம். )

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 4 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. விலை, பேசித் தீர்க்கலாம்.

தொடர்பு:-0776939592, 0718607327

(5222) முகவரி:- R. ரவீந்திரன் , K.R.S. வீடு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

## தேவை

தொலைபேசி, போட்டோ பிரதி, லெமனேற்றிங் இயக்கக் கூடிய அனுபவம் உள்ள பெண்கள் தேவை. நாதன் ஸ்ரோர்ஸ், பிரதான வீதி, பருத்தித்துறை. (த610)

தொடர்பு:-0770333390

## விற்பனைக்கு

கூல்பார்க்குரிய அனைத்து தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு

கண்ணாடி அலுமாரி, மேசைகள், கதிரைகள் மற்றும் கண்ணாடி பிற்றிங் கதவுகளும் உண்டு.

(5237) பிறவுண் வீதி, கொக்குவில். தொ.பேசி. 0777506488

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் பல வெற்றிடங்கள் கொழும்பு/ யாழ்/ கண்டி/ கம்பஹா மற்றும் பல பிரதேசங்களில் மேசன்/ செடலின்பாஸ்/ கம்பிபாஸ் (1200/- மேல்) கையுதவியாளர் (800-1100) தங்குமிடம் இலவசம். தினமும் கைச்செலவுண்டு. (த6105)

தொடர்பு:- 0775561883

## VACANCIES FOR IMMEDIATE APPOINTMENT
## SERVE eLearning Institute, 66, Kattapali Lane, Anaikoddai, Jaffna
## +94 21 2256206

1. REGISTRAR
- Should have Very Good skills in writing reports in English using MS Word and Excel. Skills in Office management, filing and supervision of Security Staff.
- Work hours Mon through Sat from 8AM to 5 PM with 1 hour lunch break
- Attractive remuneration will be given. Retired officers also can apply.

2. ENGLISH LECTURER
- On an hourly basis teaching to ICT Diploma students
- Should have competent in the use of computers and Internet.
- Retired English teachers will be given preference

3. COMPUTER TECHNICAL ASSISTANT
- Full time work
- Should have good knowledge in both Software and Hardware (Preferably in MS office 2010, Video editing, Local Area Network, internet, email, installation & troubleshooting)

Please forward your self-prepared application with your curriculum vitae to 66, Kattapali Lane, Anaikoddai, Jaffna, via registered post or by hand to reach the office during working hours on or before 10th of January 2014. There will be an interview for short listed suitably qualified candidates.

Director


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேறிய குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அச்சுவேலி அக்கரைக் கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்களுக்கு மீள்குடியேற்ற அமைசசினால் வாழ்வாதார உதவிகள் நேற்று வழங்கப்பட்டுள்ளன

இந்நிகழ்வு அக்கரைக் கிராமத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இந்த உதவிகளை வழங்கி வைத்தார்.

இதன் போது கடந்த வருடத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட அந்த மக்கள் வீடுகளை அமைப்பதற்காக சீமெந்துப் பைக்கற்றுக்கள் மற்றும் தகரங்கள் என்பன வழங்கப்பட்டன. அத்தோடு அக்கிராமத்திற்கு தண்ணீர் தாங்கிகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மீள்குடியேற்ற அமைச்சர் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களில் சிரமதானப் பணிகளையும் ஆரம்பித்து வைத்தார்.

கடந்த வருடத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட இந்தப் பிரதேசத்தில் குடியமர்ந்திருக்கின்ற சுமார் 48 குடும்பங்களுக்கே அரசினால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. இதே போன்று ஏனைய உதவிகளும் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலென்ரின் மற்றும் அமைச் சின் செய லாளர்கள் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)




நன்றி:- ஐலண்ட்

**சென்னை செல்லவுள்ள**

## மீனவர்களை தெரிவு செய்வது தொடர்பான கலந்துரையாடல்

(தும்பளை)

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக சென்னையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் பங்குகொள்வதற்கான உறுப்பினர்கள் தெரிவு எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை கொழு ம்பு மாளிகாவத்தையிலுள்ள தேசிய மகா சம்மேளன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றமையால் வடக்கு மாகாண மீனவர்கள் பிரச்சினைகளை அதிகம் சந்தித்து வருகின்றனர்.

இக்கலந்துரையாடலில் பங்குகொள்ள வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் உட்பட ஏனையமாவட்டங்களையும் சேர்ந்த பிரதேச உறுப்பினர்கள் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சரால் இன, மொழி பேதமின்றி தெரிவு செய்யப்படவுள்ளதாக தேசிய கடற்றொழில் மகா சம்மேளன உப தலைவர் நா.பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (அ-9-19)

# மீள்குடியேற்ற நகர்வுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

## யாழ். அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்கள் மற்றும் உறவினர்இ நண்பர்கள் வீடுகளிலுள்ள மக்களை விரைவில் மீள்குடியேற்றம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக இடம்பெயர்ந்திருந்த மக்களை அவர்களுடைய சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு இங்குள்ள அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமென்றும் வலியுறுத்தியுள்ள அரச அதிபர் இதன் மூலமாகவே விரைவான மீள்குடியேற்றத்தை மேற்கொள்ள முடியுமென்று குறிப்பிட்டார்.

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அச்சுவேலி அக்கரைக் கிராமத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தலைமை உரையாற்றுகையிலேயே மாவட்ட அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழில் நீண்டகாலமாக இடம் பெயர்ந்திருக்கின்ற மக்கள் படிப்படியாக மீள்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

இதற்கமைய இந்த மக்களும் அவர்களுடைய சொந்த இடத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில் தற்போதும் நலன்புரி நிலையங்கள் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலேயே குறிப்பிடப்பட்டளவானோர் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் யாழின் பல்வேறு இடங்களிலும் நீண்டகாலமாக இடம்பெயர்ந்திருந்தவர்களில் கடந்த வருடத்தில் மட்டும் ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

இதற்கமைய இந்தப் பிரதேசத்திலும் சுமார் ஐம்பது வரையான குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர். இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுடைய அடிப்படைத் தேவைகள் உள்ளிட்ட வாழ்வாதார உதவிகள் அரசினால் வழங்கப்பட்டுள்ளன.


இதேபோன்றே இங்கும் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுகின்றன. இதேபோன்று எதிர்காலத்திலும் பல்வேறு உதவிகள் வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நீண்டகாலமாக இடம்பெயர்ந்திருந்த மக்களை அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவதற்கு அரசினால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய இங்கு இடம்பெயர்ந்து முகாம்கள் மற்றும் நண்பர், உறவினர் வீடுகளில் தங்கி யுள்ள மக்களையும் அவர்களுடைய சொந்த இடத்தில் குடியமர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குடியமர்த்துவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கின்ற நிலையில் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி இணைந்து செயற்பட வேண்டுமென அரச அதிபர் மேலும் தெரிவித் துள்ளார். (அ-6)



யாழ். கல்வி வலயத்திலிருந்து இடமாற்றப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் கல்வி வலய நலன்புரிச்சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு இடம் பெற்றது. இதில் யாழ். கல்வி வலய பணிப்பாளர் எஸ்.உதயகுமார் மற்றும் நிதி உதவியாளர் எஸ்.செல்வமனோகரி ஆகியோர் கௌரவிக்கப்படுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என். குமார்)

## லயன்ஸ் கழகத்தின் பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரால் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி செவிப் புலனற்றோர் நிலையத்தில் கழகத் தலைவர் லயன்ஸ் எஸ். தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

லயன்ஸ் கழகத்தால் நலிவுற்றோருக்கான நிதி சேகரிப்புக்காக ஏற்பாடு செய்யப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நடைபெறவுள்ளது.

அத்தோடு வடமராட்சி வலய லயன்ஸ் கழகத் தலைவரின் வருகையும் இடம்பெற வுள்ளது. எனவே கழக உறுப்பினர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-9-10)

## வயோதிபர் மீது தாக்கு; சந்தேக நபர் கைது

கரணவாய் மண்டான் பகுதியில் புது வருட தினமன்று மறைந்து நின்று உருட்டு கட்டையால் தாக்கினார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கரணவாய் மண்டான் பகுதியில் புது வருடத் தினத்தன்று இளைஞர்கள் வெடி கொளுத்தி அப்பகுதியிலுள்ள வீடொன்றினுள் வீசியுள்ளனர். இதனால் அவ் வீட்டிலிருந்த வயோதிபர் இளைஞர்களை ஏசிவிட்டு சென்றுள்ளார்.

ஆயினும் இவர்கள் தொடர்ச்சியாக வெடியை வீசியதனால் வயோதிபர் யாரென அவதானிப்பதற்காக மறைந்து நின்று பார்த்த சமயம் பின்னால் வந்த இளைஞர்களில் ஒருவன் உடுக்கட்டையால் வயோதிபரை தாக்கியுள்ளான்.

தாக்குதலினால் தலையில் காயமடைந்த வயோதிபர் மந்திகை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு சந்தேகத்தின் பேரில் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-9-60)




## ஆன்மீக சொற்பொழிவு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலின் ஆச்சிரமத்தில் வாரந்தோறும் இடம்பெறும் ஆன்மீக சொற்பொழிவு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்வாரத்திற்கான சொற்பொழிவை தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலய அதிபர் கே.கே. யோகநாதன் சூடிக்கொடுத்த சுடர்கொடி எனும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளாரென பெரியாழ்வார் ஆச்சிரம மடாதிபதி தெரிவித்துள்ளார். (அ-9-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபை அதிகாரங்களை திருடுவதற்கே திவிநெகும திணைக்களம் அமைக்கப்பட்டுள்ளது

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கையில் அதிகார பரவலாக்கலுக்கு எதிரான அரசாங்கத்தின் வேலைத்திட்டமாகவே வாழ்வின் எழுச்சி (திவிநெகும) திணைக்களம் அமைக்கப்படுவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டுகிறது.**

அரசியல் அதிகாரத்தை மத்தியில் குவித்துக்கொள்ளும் அரசின் திட்டமே வாழ்வின் எழுச்சி சட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படுவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தமிழ்லோசை செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

கிராமங்களில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறும் அரசாங்கத்தின் சர்ச்சைக்குரிய திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் நேற்று முன்தினம் முதல் சட்டபூர்வமாக அதிகாரம் பெறுகின்றது.

"ஓரிரு நபர்கள் தங்களின் அதிகாரப் பிடியை இறுக்கிக் கொள்வதற்கு எடுத்த அரசியல் முடிவுதான் இது" என்று ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக அரசாங்கம் இந்த சட்டத்தின் ஊடாக அரசியல் ஏதேச்சாதிகாரத்தை குவித்துக்கொள்ளவே முயன்றுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது.

மாகாணசபைகளிடம் இருந்த பல அதிகாரங்கள் இந்த சட்டத்தின் ஊடாக திருடப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கிறது.

ஆனால், இதன் மூலம் சுமார் 18 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 50 இலட்சம் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்று இந்த திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறுகிறார்.

இநத திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் தனது அதிகாரமே குறைக்கப்படுவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்தத் திணைக்களம் அரச சேவை ஆணைக்குழுவின் கீழேயே வருவதால், அதன் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டே செயற்பட வேண்டியிருப்பதாகவும் அமைச்சர தெரிவித்தார்.

ஓராண்டுக்கு முன்னர் இந்த திவி நெகும சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது, பெரும் அரசியலமைப்புச் சிக்கல் ஏற்பட்டது.

இதன் பின்னணியிலேயே, அப்போது தலைமை நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்குவதற்கான நடவடிக்கைகளும் ஆளுந்தரப்பால் முன்னெடுக்கப்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## தாதியர்கள் போராட்டம்

(குருமன்காடு)

வவுனியா பொது வைத்தியசாலைக்கு போதுமான தாதியர்கள் வழங்கப்படவில்லை என வவுனியா பொது வைத்தியசாலை தாதியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2014 ஆம் ஆண்டு தாதியர் பயிற்சி பெற்று வெளியேறிய சுமார் ஆயிரத்து 800க்கும் மேறபட்ட தாதியர்களில் வவுனியா பொது வைததியசாலைக்கு 95 தாதியர்கள் கோரியிருந்த போதிலும் 12 தாதியர்கள் மாத்திரமே வழங்கப்பட்டதாகவும் அவர்களில் ஒன்பது பேரே தமது பொறுப்பை ஏற்றுள்ளனர்.

அத்தோடு வடமாகாணத்திற்கு 46 தாதியர்களே வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில 41 பேரே கடமையை பொறுப்பேற்றமையால் மாகாணத்திற்கு தேவையான தாதியர்கள் நியமிக்கப்படவில்லை எனவும் போதுமான தாதியர்கள் வழங்கப்படவேண்டும் என்றும் சகல வசதிகளும் உள்ள வவுனியா பொது வைத்தியசாலைக்கு ஒன்பது தாதியர்கள் போதுமானவர்கள் இல்லை எனவும் இனி வரும் காலங்களில் தாதியர் படிப்பை முடித்து வெளியேறுபவர்களை இவ் வைத்தியசாலைக்கு நியமிக்க வேண்டுமென ஆர்ப்பாட்டத்தின் போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

வவுனியா அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இவ் ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணி தொடககம் ஒரு மணி வரை வவுனியா பொது வைததிய சாலை முன்றலில் நடைபெற்றது. (அ-9-250)

## ஜனாதிபதிக்கு விசேட விருது

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு பலஸ்தீனத்தில் விசேட விருதொன்று வழங்கப்படவுள்ளது.

இவருக்கு 'ஸ்டார் ஓப் பலஸ்தீன்' என்ற விசேட விருது வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்றைய தினம் பலஸ்தீனத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசும் இணைந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. பலஸ்தீன சுதந்திர போராட்டத்திற்காக ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்காக வழங்கப்படும் அதி உயர் விருது இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

தலைநகர் ரமல்லாவில் உள்ள ஓர் வீதிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த விஜயத்தின் போது பலஸ்தீன ஜனாதிபதி முஹமட் அப்பாசுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இஸ்ரேலுக்கும் விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# உலக இளைஞர் மாநாடு மே மாதம் நடைபெற ஏற்பாடு

இவ்வாண்டில் இலங்கை இளைஞர்கள் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி லலித் பியும் பெரேரா தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் இளைஞர் அபிவிருத்தி என்பது சமூக நலன் என்ற மனோபாவத்துடன் பேசப்பட்டது. தேசத்தை கட்டியெழுப்பும் பணிக்கு இணையாக அரசாங்கத்தினால் இந்த மனோபாவத்தை மாற்ற முடியும்.

"அபிவிருத்தியின் முக்கியத்துவம் மிக்க பிரிவினராக இளைஞர் உள்ளனர்" என்ற மனோநிலை நாடு முழுவதும் வியாபிக்கச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக இளைஞர்கள் தொடர்பான நிகழ்ச்சி நிரல் சர்வதேச ரீதியான நற்பெயரை பெற்று குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது.

ஐ.நா. பொது செயலாளர் பான் க் மூன் 2012இல் வெளியிடப்பட்ட உலக இளைஞர் அபிவிருத்தி" தொடர்பில் சமர்ப்பித்த பத்திரத்தில் இலங்கை பற்றி 14 தடவைகள் குறிப்பிடப்பட்டிருந்தமையானது இலங்கை எவ்வளவு தூரம் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது.

உட்கட்டமைப்பு மற்றும் இளைஞர் திறன் ஆகியவற்றை பற்றாக்குறை எதுவுமின்றி நாடு கொண்டிருப்பதன் காரணமாக உலக அளவிலான எந்த ஒரு நிகழ்வையும் நடத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது .

சர்வதேச அரங்கில் இளைஞர் தொடர்பில் பேசப்படும்போது இலங்கை பற்றியும் பேசப்படும் நிலை விரைவில் உருவாகும்.

உலக இணையநாள் மாநாடு எதிர்வரும் "2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மிலேனியம் அபிவிருத்தி" என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் மேமாதம் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இதில் ஆயிரத்து 500 வெளிநாட்டு இளைஞர்கள் பிரதிநிதிகளும் 100 உள்ளூர் இளைஞர்கள் பிரதிநிதிகளும் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டிற்கு இணைவானதாக பல்வேறு தொடர் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படும் எனத் தெரிவித்த அவர் மாநாட்டுடனும் அதனுடன் இணைந்த நிகழ்வுகளுடனும் சுமார் 10 ஆயிரம் இலங்கை இளைஞர்களை தொடர்புபடுத்துவதே எமது எதிர்பார்ப்பாகும் என்றார்.

இதேவேளை, இலச்சினையொன்றை வடிவமைப்பதற்கான போட்டியொன்று ஆரம்பமாகியுள்ளது. இப்போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி முடிவடையவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# ஐ.நா. அழுத்தங்களை எதிர்நோக்கத் தயார்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அழுத்தங்களை எதிர்நோக்கத் தயார் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ் அமர்வுகளில் எதிர்நோக்கக்கூடிய அழுத்தங்களை முறியடிக்கத் தேவையான ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தனிமைப்படுத்தப்படவில்லை. அமர்வுகள் நடைபெறும் காலப் பகுதியில் பிரித்தானியா மற்றும் கனடாவில் தேர்தல் நடைபெறவுள்ளது.

பிரித்தானிய வாழ் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தமிழ் மக்களின் ஆதரவினை பிரித்தானிய பிரதமர் கமரூன் திரட்டும் முனைப்புக்களில் ஈடுபடுவார் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது.

கனடாவிலும் 2 இலட்சத்து 50 ஆயிரம் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# உலக போதைப்பொருள் மையமாக இலங்கை மாறி வருகின்றது

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

இலங்கை உலகப் போதைப் பொருள் மையமாக துரித கதியில் மாற்றமடைந்து வருகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

போதைப் பொருள் கடத்தல் மற்றும் சூதாட்டத்திற்கு ஊக்கமளிக்கும் அரசாங்கம் எவ்வாறு இளைஞர் கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்தப் போகின்றது.

இளைஞர் விரக்தி என்ற சொல்லை அகராதியிலிருந்தே இல்லாதொழிக்கப் போவதாக ஜனாதிபதி அண்மையில் அறிவித்திருந்தார்.

இதற்காக அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மது பயன்பாடு மற்றும் சூதாட்டம் ஆகியன அதிகரித்துள்ளது.

உலகில் அதிகளவில் மது அருந்தும் நாடுகளில் இலங்கை முன்னணி வகிக்கின்றது.

கடந்த ஆண்டில் மது பயன்பாடு 20 மில்லியன் லீற்றர் மதுபானம் அதிகளவில் நுகரப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டில் 65 மில்லியன் லீற்றர் மதுபானம் அருந்தப்பட்டுள்ளதாகவும், கடந்த ஆண்டில் 85 மில்லியன் லீற்றர் மதுபானம் அருந்தப்பட்டுள்ளது. இதுதான் அரசாங்கத்தின் போதைக்கு முற்றுப்புள்ளி திட்டமோ ..

வெகு விரைவில் உலகில் போதைப் பொருள் விநியோகம் செய்யப்படும் மிக முக்கியமான மையமாக இலங்கை மாற்றமடையும் .

தற்போது இலங்கை முக்கிய போதைப் பொருள் மையமாக இலங்கை மாற்றமடைந்துள்ளதாகவும், விரைவில் அது உலகின் முக்கிய வர்த்தக நிலையமாக மாற்றமடையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## இது தகுமோ!

சாதிக்கப் பிறந்த பூவையரே
கேளுங்கள்
காதல் என்ற முகமூடி
அணிந்து
காமுகர்கள் அலைகின்றனர்
கவனமடி பெண்ணே!
ஆதிக்க சக்திகளும் தமிழர்
பண்பாட்டை
சீர்குலைக்க முனைகிறது
கண்ணே
தமிழ் மண்ணுக்கு தகுமோ?
சொல்லடி
இன்றைய இளமை உணர்வுகள்
உனக்கு உற்சாகம் தரலாம்
நாளை தன்மானம் தொலைத்துவிட்டு
நடுத்தெருவில்
இழிவான பட்டப்பெயர் சூடிடவா நீ
எண்ணுகிறாய்
ஆங்கில மோகத்தை
தடுத்திங்கு
தமிழர் மானம் காத்து
நடந்திடு பெண்ணே...

**ஆ.முல்லைதிவ்யன்**

## மாற்றம்

உனக்குள் இன்று
ஏதோ ஒரு மாற்றம்
புரியவில்லையெனக்கு
ஏதென்று...!
சாலையோரமாய்– உன்
ஓரப்பார்வையில்
புரிகின்றது அதன்
ஏக்கம்...!
வளமையாகவே
தரையைப்பார்க்கும்–நீ
இன்று ஏனோ!– என்
முகம் காணத்துடிக்கின்றாய்
எனக்காகவென்று
இன்னொருத்தி
காத்திருக்கையில்...!

**கிரு.செந்தூரன்**
**பருத்தித்துறை**

## கால்கள் மிதிப்போமா

மீண்டும் எம் மண்ணை
மிதித்திட முடியுமா?
பள்ளிச் சிறுவயதில்
துள்ளிக் குதித்த மண்
அம்மா மடி இருந்து
அகரம் எழுதிய மண்
இடி, மின்னல், மழையுடன்– நான்
இணைந்து கூட்டணியான மண்
காதலிக்காக கடற்கரையோரம்
காத்துக் கிடந்த மண்
சூழ் லாம்பு கொளுத்தி மீன்
பிடித்து மகிழ்ந்த மண்
தம்பியும் நானும் பட்டங்களை விட்டுப்
பார்த்து மகிழ்ந்த மண்
இளையையா வீசி வந்த
வீச்சு மீன் சினைக்காக
விழித்திருந்து பார்த்த மண்
நடிக மணியின் நாடகமேடை முன்
விடியும் வரை அண்ணார்ந்து இருந்த மண்
கம்பி வேலிக்குள் எங்கள்
சொந்தமண்
கால்கள் மிதிப்போமா
கட்டையிலே போகமுன்னர்

**ஆர்.எஸ்.ஆனந்தன்**
**தும்பளை**

## இமயம் தொட...

நீ...
அண்ணார்ந்துபார்க்கும்
அந்த உயரத்தை அடைந்துவிட
உன்னால் முடியும் என்ற
எண்ணம் இருந்திட்டால்
எந்த உயரமும் – உன்
எண்சாண் உடம்பின்
கீழ் போல் தோன்றும்
எண்ணுதல் ஒன்று
நீ எண்சாண் தான் – உன்
எண்ணம் இமயமாகட்டும்

மாவை. நா. கஜேந்திரன்

## கவிதை

கற்பனைக் கனவுகளுக்கு
இதயம் கொடுக்கும் ஊமைப்பதில்
**கண்ணீர்**
வலிகளை மறந்து விட்டு
இன்பத்துக்கும் துன்பத்துக்கும்
இடை இடையே சொரியும்
மழைத்துளி
**இதயம்**
வலிகளை சுகங்களாகவும்
நினைவுகளை மருந்தாகவும்
மனதுக்குள்ளே மறைந்திருக்கும்
மர்மப்பொருள்

**எஸ். பாஸ்கரன்**
**சண்டிலிப்பாய் வடக்கு**



## மனிதப் பண்பு

குந்தியிருந்து குடை விரித்து
தன்னோடு தன் நாயையும்
மழையில் நனைய விடாது
காக்கின்றாள் இச்சிறுமி
உயிர்களில் வைக்கும் அன்பு
மானிட வாழ்வின் பண்பு
மனிதம் மண்ணில் இன்னும்
மரணிக்கவில்லை உண்மை

துரை
தென்மட்டுவில்

## அன்பு

நாய் மழையில்
நனைந்து நடுங்குகிறது
இரு பெண்கள் நாய் நனையாமல்
குடை பிடிக்கின்றார்கள்
இந்தச் சிறுமிகளுக்கு
இருக்கும் அன்பைப் போன்று
பெரியவர்களுக்கு
அன்பு இல்லையே!

ஜெ.தர்சிந்தன்
மயிலங்காடு

## நன்றி

அநாதையாய் திரியும்
நம் இனத்தை விசம் வைத்து
கொல்லும் மானிடர் மத்தியில்
இயற்கை அனர்த்தத்தில் இருந்து
என்னைப் பாதுகாக்கும் பெண்களே
நீங்கள் வாழ்க வளமுடன்

ம.குணாளினி
மயிலிட்டி

# மௌனத்தின் தேடல் – 185

## நன்றியுரை

குறைகேள்
அதிகாரிகள் கூட
மழை நின்ற பின்னரே
இங்கு வருவர்
இத்தருணத்தில்
திக்கற்றோருக்கு
தோன்றாத் துணையாகி
வேண்டியன தரும்
தெய்வமே முன்வந்து
பாரிவள்ளல் போல்
காரியமாற்றும்
மனிதநேய மிக்க
இதயங்களை அனுப்பும்

க.நாகராசா
நுணாவில்

## உறவு

முள்ளிவாய்க்கால் போரில்
பெற்றோர்கள் தான் என்னை
விட்டுப் பிரிந்தார்கள்
நான் அநாதை இல்லாமல்
இருக்க நீ மட்டும்
உறவே

இரா.ஜெ. துஷ்யந்த்
அளவாவோடை

## காவல்

அதர்மங்கள் மலிந்த தேசமிது
தர்மங்கள் நிலைபெற
வழியில்லை-ஆயினும்
அந்த பிரமன் படைப்பில்
இதுவும் ஒன்று
அதை நீ காவல் செய் நிச்சயம்
அது உன்னை காவல்
செய்யும் தயங்காதே...

உதயரூபன்
நயினை

## காவல்

காவலுக்கு யாருமில்லை
காவல் காக்கும்
உனைத்தவிர-பாது
காவல் நிலையமுமில்லை
ஆதலால்- எமக்கு நீ
உமக்கு நாம்
மழையில் நனையும் நாய்
குடைபிடிக்கும் சிறுமிகள்
எதிர்காலம் தெரிகின்றது
இன்னுமிரு விளக்கேந்திய
பெருமாட்டிகள்
நாட்டிலே உதயமாகின்றனர்

இணுவில்
வாகீசன்

## தமிழ் தாரகையே!

சொந்த இடத்தையே
பறிக்கும்
நொந்த நாட்டினிலே
இடமின்றி மழையில்
இடறித் திரியும்
குட்டிக்கு
இல்லமாக
உன் குடையை
இரந்த தங்க
தமிழ் தாரகையே
வாழ்க உன் புகழ்
வளர்க உன் இனம்

த.மோகனரூபன்
சுழிபுரம்

## ஒரு குடையின் கீழ்

கள்ளமற்ற உள்ளமிது
காட்டி நிற்கும் செய்தி என்ன
ஏகாட்டும் மழையென்ன
கொளுத்தும் வெயிலென்ன
நின்றால் ஒரு குடையின் கீழ்
நீயென்ன நானென்ன
நிச்சயம் விடியும்


சி.ரவிக்குமார்
திருமுறிகண்டி

## உலக பாசம்

அஃறிணை உயர்திணை
பாகுபாடு அன்பு பிணைப்புக்குள்
இல்லையென துணையாக வந்த
நாய்க்கும் குடை பிடித்து
ஈடு இணையற்ற உலக பாசம்

க.அபர்ணா, வட்டுக்கோட்டை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –186



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 09 .01.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திர நாயகன் மாமனிதர் குமார் பொன்னம்பலம்



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்துக்கும் ஸ்ரீலங்கா ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்குமிடையே நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பல்வேறுபட்ட நிகழ்வுகளின் மாற்றங்கள் ஈழத் தமிழர் வாழ்வில் ஏற்பட்டுவிட்டன.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் இந்த வேளையில் இருந்திருந்தால் இன்னும் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கும் இளைஞர்களைத் தொடர்ந்தும் அங்கே அடைபட்டுக் கொண்டிருக்க அனுமதித்திருக்கமாட்டார். சிறைபட்ட இளைஞர்களுக்குத் தான் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் நேரடியான சேவையை அனுபவிக்கும் சந்தர்ப்பம் அதிகம் கிடைத்தது.

நானும் இலங்கை அரசின் கொடும் சிறையில் வாடி, வதங்கி வாழ்வே வெறுமையாகிப் போன ஒரு பொழுதுதனில் அந்த மாமனிதர் அவர்களுடாகவே விடுதலை பெற்று வெளியே வந்து சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முயன்றேன். முடியவில்லை. தப்பியோடி இந்த சுவிஸ் தேசம் வந்து தஞ்சம் பெற்றேன்.

"அள்ளி அணைத்துக் கொஞ்ச வேண்டாம், ஒரேயொரு கருணைப்பார்வை பார்த்தாலே போதும் நொருங்கிக் கிடந்த இதயத் துண்டங்கள் தானாகச் சேர்ந்து போகும்" இந்த நிலையில் தான் சிறைக் கம்பிகளுக்குப் பின்னே ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களில் ஒருவனாக நானும் கிடந்தேன்.

உலகில் மிக அரிதாக மட்டுமே ஒரு சில நாடுகளில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் எனும் கொடூரமான சட்டத்தின் கீழ் எனக்கெதிராகவும் அரசு குற்றம் சாட்டியிருந்தது. ஒருவர் விடு தலை இயக்கமொன்றில் இருக்கின்றாரென்று தெரிந்திருந்தும் காட்டிக் கொடுக்கத் தவறினால், அவருக்கெதிராகக் குற்றம் சாட்டக் கூடியதாகவே இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது.

அதைவிட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவர்கள் விரும்பிய எதை வேண்டுமானாலும் சிங்களத்தில் எழுதிவிட்டு எம்மிடம் கையெழுத்துக்களைப் பெற்றுக்கொள்வார்கள். அந்தக் கையெழுத்து எமது தலையெழுத்தை நிர்ணயிப்பதாக நீதிமன்றத்தில் எமக்கெதிரான குற்றச் சாட்டுக்களாக, சாட்சிகளாக கொடுக்கப்படுகின்றன. இப்படி நிர்க்கதியாகி, வாழ்விழந்து, படியிழந்து, பாதையிழந்து, வாழ்வே இருளுக்குள் மூழ்கிப் போன எமக்காக, இலங்கையிலே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஒருவரும் மிகப்பெரிய பரிஸ்டருமான குமார் பொன்னம்பலம் இலவசமாக நீதிமன்றத்தில் ஆஜராக வருகின்றார் என்றால் அந்த நிலையில் எமக்கு அவரின் சேவை எத்தனை மன அமைதியை, எதிர்கால நம்பிக்கையை ஏற்படுத்தித் தந்திருக்கும் என்பதனை நினைத்துப் பாருங்கள். என்னைப்போல் ஆயிரக்கணக்கான இளைஞர்களாக வழக்காடி கொண்டிருப்பவரை நேரிலேயே பார்த்துக் கதைப்பது அப்பொழுது எமக்குக் கடினமான விடயமாக இருந்தது. அதனால் சற்று வேதனையுடன் நானும் எனது சிறை நண்பனொருவரும் உருக்கமான கடிதமொன்றை குமாருக்கு எழுதினோம். என்ன ஆச்சரியம் கடிதம் கிடைக்கப்பெற்ற அதே தினமே வெலிக்கடை மகசீன் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த எங்கள் இருவரையும் சந்திக்கச் சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் வந்திருந்தார்.

நீங்கள் இதுவரை எம்மை வந்து பார்க்காததனால்தான் அப்படி எழுதினோம் என்று நாங்கள் கூறினோம். "ராசா! நானொருவனாக எத்தனை வேலையய்யா செய்வது? என்னுடைய தந்தையார் விட்டுச் சென்ற அரசியல் கடமைகளைப் பார்க்க வேண்டும். வயசாகிப் போன என்னுடைய எண்பது வயதுத் தாயாரைப் பார்க்க வேண்டும்! அத்துடன் நூற்றுக்கணக்கான உங்களின் வழக்குகளைப் பார்க்க வேண்டும். இந்த நிலையில் என்னை என்ன செய்யச் சொல்கின்றீர்கள்.... ராசா" என்று மிகவும் அன்பாக ,உருக்கமாக அவருடைய மழலைத் தமிழில் கேட்டபொழுது அந்தக் கணங்களில் பதில் சொல்லச் சிரமப்பட்டுத்தான் போனோம். நீதிமன்றம் தொடங்கியது. பல வழக்குகள் நடைபெற்றன. சரியாக 33 மாதங்களின் பின்னர் சிறையைவிட்டு வெளியேவந்து சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கப் போகின்றேன் எனும் கட்டுங்கடங்கா ஆவலுடன் எனது பெயரை எப்போது அழைப்பார்களென்று நெஞ்சம் திக்திக்கென அடிக்க எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

## இவரின் 14 ஆவது நினைவு தினம் இன்று

அப்பொழுது எனது பெயரை அழைத்தார்கள். உடனே மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் எழுந்து, ஏதோ, நீதிபதியுடன் கதைத்தார். நீதிபதியும் ஏதோ கூறினார். எனக்கு எதுவுமே புரியவில்லை. என்னை அமரச் சொல்லி விட்டார்கள். வேறு வழக்குகள் நடைபெற்றன.

நீதிமன்றம் கலைந்தது. நீதிபதியும் சென்று விட்டார். என்னைத்தான் விடுதலை செய்யவில்லை. அந்தக் கணங்கள் இருக்கின்றதே விடுதலையை எதிர்பார்த்துக் கிடைக்காமல் ஏங்கிப்போகும் அந்தப் பொழுது இருக்கிறதே! பழுக்கக் காய்ச்சிய இரும்பை உடலில் வைப்பதைவிடக் கொடுமையானது.

இப்படி நான் வேதனைப்படுவேனென்று தெரிந்திருக்கலாம், அந்த மாமனிதருக்கு. உடனே என் அருகே ஓடிவந்து பயப்பட வேண்டாம், உங்களை விடுதலை செய்வார்கள். உங்களுடைய விசாரணை, நீதிபதியின் தனியறையில் நடைபெறவுள்ளது என்று கூறினார்.

அதேபோல் என்னை சேம்பர் என அழைக்கப்படும் நீதிபதியின் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். நீதிபதியுடன் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் நீண்ட நேரம் கதைத்தார். அப்பொழுது அதிர்ஷ்டவசமாக எனக்குக் கிடைத்த நீதிபதியும் தமிழரான சுந்தரலிங்கம் என்பதனால் ஏற்கனவே நான் சிறை நிர்வாகத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் உரையாற்றியிருந்தேன் என்பதனாலும் எனது பாதுகாப்பை முன்னிட்டு என்னைத் தனியாக விடுதலை செய்ய நீதிபதி விரும்ப வில்லையென்று தெரிவித்து என்னை அழைத்துச் செல்ல யாராவது வந்துள்ளார்களா? என்று மாமனிதர் என்னைவினவியபோது நான் ஆம், எனது தந்தையார் வந்து காத்து நிற்கிறார் என்று சொன்னேன்.

அப்பொழுது அந்த அற்புத மனிதரின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சி இருக்கிறதே. சிறைப்பட்ட ஒரு தமிழ் இளைஞனை விடுதலையடைய வைக்க வேண்டும் என்று அந்த மாமனிதர் ஓடிய ஓட்டம் இருக்கிறதே! அது இன்னும் என் கண்ணுக்குள் நிற்கின்றது. ஓடிய மாமனிதர் எனது தந்தையையும் அழைத்துக் கொண்டு சேம்பருக்குள் வந்தார். அதன்பின்னர் இப்பொழுது இளைஞர்களெல்லாம் மட்டக்களப்பு பகுதிகளிலும் கொலை செய்யப்படுகின்றார்கள். எனவே உங்களின் மகனை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் எனும் அன்பு வேண்டுகோளுடன் எனது தந்தையிடம் என்னை நீதிமன்றமும் மாமனிதர் அவர்களும் ஒப்படைத்தார்கள்.

அதன் பின்னர் 3 தடவைகள் குமார் பொன்னம்பலத்தை அவர்களுடைய இல்லத்திற்குச் சென்று சந்தித்தேன். அப்பொழுது எனது குற்றப் பத்திரிகையின் அசல் பிரதியைத் தாருங்கள் என்று கேட்டேன். அவர்களுடைய முன் வெளியில் என் தோள் மேலே கையைப் போட்டுக் கொண்டு ராசா இதுஉன்னுடைய தனிப்பட்ட பிரச்சினைக்காக வழங்கப்பட்ட குற்றப் பத்திரம் அல்ல. ஒரு இனத்திற்கெதிராக வழங்கப்பட்ட குற்றப்பத்திரம். எனவே அவைகள் என்னிடம் இருப்பது தான் நல்லது என்று தனது அறை யொன்றிற்குள் அழைத்துச் சென்று அங்கே அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பல நூற்றுக் கணக்கான குற்றப் பத்திரிகைகளைக் காட்டினார். இது நான் வழக்குப் பேசிய ஒவ்வொரு இளைஞருக்கும் எதிராகவும் வழங்கப்பட்டது. எமது தமிழினத்திற்கெதிராக வழங்கப்பட்ட குற்றப்பத்திரம் என்று சொன்னார்.

அதை எனக்குப் புரியவைப்பதற்கு எத்தனை அன்பாக நடந்து கொண்டார். அந்த மாமனிதர் மிகச் சாதாரண சிறுவனான என்னிடமே இப்படிப் பண்போடு நடந்து கொண்ட அந்த மாமனித மாணிக்கத்தின் அற்புத மனிதரின் மறைவுச் செய்தி வானலை வழியே எனது செவிகளைத் தொட்ட போது நான் மீள முடியாத சோகத்திற்குள் மூழ்கிப் போனேன்.

தமிழ் உலகமே கதறிக் கண்ணீர் விட்ட காட்சிகள் வானொலிகள் பலவற்றில் நடந்தன. தமிழ் இனத்திற்காக ஓடி, ஓடி உழைத்த ஒரு அற்புத மனிதர், தமிழ் இனத்திடமிருந்து வாழும்போது சாதனையுமே பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அவரின் மறைவின் பின்னர் பெற்றுக் கொண்டதோ அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்ந்த மனிதர்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய பெரும்பேறு.

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம்என்பதனை தனது உயிர்போனாலும் பரவாயில்லை என்று பயன்படுத்த எத்தனை பேரால் முடியும்? எதிரி எமது கண்களின் முன்னே நடமாடுகிறான் என்று எரித்த கையோடு, எமனாக வந்து எமது தமிழ்க் காவலனை அழித்த கைகள் இனி என்றுமே புனிதமாகப் போவதில்லை. ஆயுதமேந்தாதமனிதரை சுட்ட கோழை வாழ்ந்தும் மரணித்தவனாகிறான். நீங்களோ மரணித்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் மாமனிதர் ஆனீர்கள்.

தமிழ் இனம் இருக்கும்வரை தங்கள் சேவைகள் வரலாறாகப் படிக்கப்படும். சரித்திரம் மனிதர்களைப் பிரசவிக்கிறது. ஆனால் வரலாறுதான் மனிதர்களை உருவாக்குகிறது.

இன்று தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் சர்வதேசத்தின் மத்தியில் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் கொழும்பிலிருந்து சிங்கத்துக்கே சவால் விட்ட தமிழன் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் இல்லையே என்னும் கவலை ஒவ்வொரு தமிழரின் நெஞ்சிலும் சுமையாகக் கனத்துக் கொண்டிருக்கிறது.

அந்த ஆளுமை மிக்க கரங்கள் இன்றுகொழும்பிலிருந்து குரல் கொடுத்தால் நிச்சயமாக எமது தமிழினத்திற்கு ஆதரவாக ஆஜராக வல்லமையுள்ள ஒரு பெரும் சக்தி எம்மிடம் உள்ளது என்று நாம் பெருமிதம் கொண்டிருக்கலாம். அதை உணர்ந்து பேடித்தனமாக எமது நீதிபதியின் குரலை அணைத்த அந்தக் கோழைகளுக்கு விடியல் இனி இல்லையென்பதை வரலாறு காட்டிக்கொண்டிருக்கின்றது.

மாமனிதர் அவர்களின் புதல்வர் கஜேந்திரகுமார் அவர்கள் விளம்பரமின்றி தந்தையைப் போலவே துணிவுடனும் தாத்தாவைப்போல் நுண்ணறிவுடனும் இன்று எமது இனத்திற்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் இறந்து 13 வருடங்கள் கடந்தவேளையில்தமிழினம் மாமனிதர் குடும்பத்தினருக்கு தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

**சுவிஸிலிருந்து கல்லாறு**
**சதீஷ்-2013**

# தேசத்துக்கு மகுடம் கண்காட்சி குறித்து ஜனாதிபதி ஆராய்வு

(கொழும்பு)

தேசத்திற்கு மகுடம்" தேசிய அபிவிருத்தி கண்காட்சிக்கு சமகாலத்தில் மேற்கொள்ளப்படும் சகல அபிவிருத்தித் திட்டங்களும் தரமானதாக அமைவதுடன் உரிய காலத்தில் அவற்றை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

2014 தேசத்திற்கு மகுடம தேசிய அபிவிருத்திக் கண்காட்சியின் ஏற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் பேச்சுவார்த்தையொனறு நடைபெற்றது. இந்நிகழ்வின் போதே ஜனாதிபதி மேற்படி பணிப்புரையை விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"தேசத்திற்கு மகுடம்" தேசிய அபிவிருத்திக் கண்காட்சி நாட்டின் பிரதான அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

அதன் பிரதி பலன்கள் எதிர்கால சந்ததிகள் பயன் பெறக்கூடியதாக அமைய வேண்டும் என்பதில் முக்கிய கவனம் செலுத்துவது அவசியம்.

தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி மற்றும் இலங்கையின் சுதந்திரதின வைபவம் ஆகியன இம்முறை குளியாப்பிட்டியவில் நடைபெறவுள்ளன. (அ-2)

# குவைத்தில் கசிப்பு காய்ச்சி விற்ற இலங்கையர் கைது

குவைத் நாட்டில் கசிப்பு காய்ச்சிய இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச்சென்ற ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 121 போத்தல் சட்டவிரோத மதுபானம் மீட்கப்பட்டுள்ளது.

கடுமையான இஸ்லாமிய சட்டம் அமுல்படுத்தப்பட்டு வரும் குவைத்தில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் உற்பத்தி செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

முபாரக் அல் கபீர் பொலிஸார் குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

புத்தாண்டை கொண்டாடும் நோக்கில் கசிப்பு காய்ச்சியிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (அ-2)

# சுற்றுலா விசாவில் வருபவர்கள் இங்கு அரசியலில் ஈடுபடுகின்றனர்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் சிலர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அரசாங்கதுக்கு தகவல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையின் குடிவரவு குடியகல்வு சட்ட விதிமுறைகளை மீறி இவ்வாறு செயற்படுவோரை அதிகாரிகள் விசாரணை செய்யும் பட்சத்தில் அது மனித உரிமை மீறல் என அவர்கள் கூறுவதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய சூழலில் மேற்குலக நாடுகளுக்கு, குறிப்பாக கனடா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு விசா பெற்றுக்கொள்வதில் சிரமம் உள்ளது.

ஆனால் எந்தவொரு வெளிநாட்டவருக்கும் இலங் கைக்கு வருகை தருவதற்கு நாம் பூரண சுதந்திரம் அளித்துள்ளோம்.

புலம்பெயர் தமிழர்கள் சிலர் இதனை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறார்கள். எவ்வாறாயினும் இலங்கையின் குடிவரவு குடியகல்வு சட்டதிட்டங்களை மீறுவதற்கு நாம் ஒரு போதும இடமளிக்க மாட்டோம்.

பயங்கரவாதத்தில் ஈடுபடுவோர் மனித உரிமைகள் பற்றிப் பேசுகிறார்கள். அவர்களுக்கு மனித உரிமைகள் என்றால் என்னவென்று கூடத் தெரியாது.

எமது நாடு தொடர்பில் சர்வதேசத்தின் மத்தியில் தவறான அபிப்பிராயத்தை உண்டு பண்ணுவதே அவர்களுடைய நோக்கமாக இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014 புதுவருட பலன்கள்

## துலாம்



**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**விலகப் போகிறது ஜென்மச் சனி!**

**ஒப்பனை செய்துகொள்வதிலேயே எப்பொழுதும் விருப்பம் கொள்ளும் துலாம் இராசிநேயர்களே!**

இப்பொழுது வந்திருக்கிற புதுவருடம் உங்களுக்கு ஏராளமான நற்பலன்களை வழங்கப்போகின்றன. காரணம், சனியின் ஆதிக்கம் வருடக்கடைசியில் விலகுகிறது. ஜென்மராகுவும் 12-ம் இடத்தை நோக்கிச் செல்கிறது. சப்தம கேது 6-ல் சஞ்சரிக்கப் போகிறார். இதற்கிடையில் 10-ல குரு பெயர்ச்சியானாலும்கூட அதன் பாரவை பலம் உங்களுக்கு பக்கபலமாக இருககப் போகிறது. எனவே, இந்தப் புதுவருடம் பொன் கொழிக்கும் ஆண்டாக அமையப் போகிறது.

ஜென்மச் சனியின் ஆதிக்கமும் விரய ஸ்தானத்தில் செவ்வாயின் பலமும் கூடுதலாக உள்ளது. தனாதிபதி செவ்வாய் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ராசிநாதன் சுக்ரன் வக்ரம் பெற்றிருக்கிறார். ஜென்மத்

**சிவல்புரி சிங்காரம்**

தில் ராகுவும், 7-ல் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள்.

பொதுவாக உங்கள் ராசிநாதன் சுக்ரன என்பதால் உடலை அலங்கரித்துக்கொள்வதிலும், உன்னதமாகப் பேசி மற்றவர்கள் மனதைக் கவர்வதிலும் கெட்டிக்காரராக விளங்குவீர்கள். நல்ல சந்தர்ப்பங்களை விடக்கூடாது என்று நினைப்பீர்கள். எதையும் மேலோட்டமாக பார்க்காமல், ஆழ்ந்து பார்ப்பது உங்கள் அதிசய குணம். அடிமைத் தொழில் உங்களுக்குப் பிடிக்காது. மற்றவர்கள் உங்களை அடக்கிவைக்க நினைத்தால் அவர்களை இரண்டில் ஒன்று பார்த்து விடுவீர்கள்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த 2014 புதுவருடம் எப்படிப்பட்ட பலன் தரும் என்பதை பார்க்கலாம்.

**1.1.2014 முதல் 12.6.2014 வரை**

புதுவருடத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சுக்ரன் வக்ரம் பெறுகிறார். எனவே, ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்குமா என்பது சந்தேகம் தான். உழைப்புக் கேற்ற பலன் கிடைக்க வேண்டுமானால் ராசிநாதன் பலம் பெற்றிருக்க வேண்டும். அதேநேரத்தில் குரு வக்ரம் பெற்று உங்கள் ராசியைப் பார்ப்பது ஒரு வழிக்கு நன்மைதான்.

வழக்குகளில் வெற்றி கிட்டும். வளர்ச்சிக்கு வித்திட உறவினர்களும், உடன் பிறப்புகளும் ஒத்துழைப்புச் செய்வர். வீடு மாற்றம், இடமாற்றங்களில் ஆர்வம் காட்டுவர்கள். சர்ப்ப கிரகத்தின் ஆதிக்கம் உங்கள ராசியிலும், 7-ம் இடத்திலும் இருப்பதால் எதையும் தீர்க்கமாக முடிவெடுக்க இயலாது. எனவே, வருடத் தொடக்கத்தில் கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

மற்றவர்களின் பேச்சை நம்பி செயற்பட்டு வீண் விரயங்களையும் ஒருசிலர் சந்திக்க நேரிடும்.


**விருச்சிக சனியின் சஞ்சாரம்!**

இதுவரை உங்கள் ராசியிலேயே சஞ்சரித்து வந்த சனிபகவான் இந்த ஆண்டு கடைசியில் விருச்சிக ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இது உங்களுக்கு மிகுந்த நன்மையை வழங்கும். பொதுவாக ஏழரைச் சனியில் குடும்பச் சனி நடைபெறும் பொழுது, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வசதி வாய்ப்புகள் பெருகும். வளமான தொழில் அமைய நண்பர்கள் வழிகாட்டுவர். உறவினர் பகை அகல எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஊர் மாற்றம், நாடு மாற்றம் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். இடம், பூமி வாங்கி வீடு கட்டும் யோகம் ஒரு சிலருக்கு உண்டு. இல்லத்தில் நீண்ட நாட்களாக நடைபெற வேண்டிய சுபகாரிய நிகழ்வுகள் படிப்படியாக நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும்.

ஆரோக்கியத்திற்காக ஒரு சிறு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சனிக் கவசம் பாடி சனிபகவானை வழிபடுவது நல்லது.

**குரு மற்றும் சனியின் வக்ர காலம்!**

இந்தப் புதுவருடத்தில் குருவின் வக்ரமும், சனியின் வக்ரமும் நிகழவிருக்கிறது. பொதுவாகவே ஒரு சில கிரகங்கள் வக்ரம் பெறும்பொழுது நன்மையே செய்யும். ஒரு சில கிரகங்கள் வக்ர இயக்கத்தின்போது செயற்பாடுகளில் கொஞ்சம் தாமதத்தை ஏற்படுத்தும். குறிப்பாக உங்கள் ராசியைப் பொறுத்தவரை குருவின் வக்ரமும் உங்களுக்கு நன்மை தரும் விதத்திலேயே இருக்கும்.



அதே நேரத்தில் சனியின் வக்ர காலத்தில் சஞ்சலங்கள் குடிகொள்ளும். விரயம் கூடுதலாக இருக்கும். உடல் ஆரோக்கியத்திலும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும். பிள்ளைகள் வழியிலும் ஏற்பாடு செய்த முயற்சிக்கு இடையூறுகள் வந்துஅகலும்.

**துலாம் ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

துலாம் ராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தப் புதுவருடம் புதிய வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுக்கப் போகிறது. ஜென்மச் சனி விலகப் போகிற நேரம் என்பதால், நன்மையை அதிகம் எதிர் பார்க்கலாம். 10-ல் சஞ்சரிக்கும் குரு பலம் பெறுவதால், முத்தாய்ப்பாக தொடங்கும் தொழிலுக்கு மூலதனம் கிடைக்கும். முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். உத்தியோகம், தொழிலில் உள்ளவர்களுக்கு ஊர் மாற்றம், இலாகா மாற்றம் உருவாகலாம். வெற்றிக்குரிய செய்திகள் வருடக் கடைசியில் வந்து சேரும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகன்று கனிவு கூடும். குடும்ப உறவில் குழப்பத்தை உருவாக்கியவர்கள் விலகிச் செல்வர். ராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக ஒரு சிலருக்கு தூர தேசங்களிலிருந்து அழைப்புகள் வரலாம். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய திருமால், திருமகள், ஆஞ்சநேயர் வழிபாட்டோடு ராகு-கேது பரிகாரமும் செய்வது நல்லது.

**நலம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

இதுவரை உங்கள் ராசியில் ராகுவும், 7-ல் கேதுவும் சஞ்சரித்து வந்தார்கள். இந்தப் புத்தாண்டில் ராகு-கேது பெயர்ச்சி ஜூன் 21-ம் திகதி நிகழவிருக்கிறது. 12-ல ராகுவும், 6-ல் கேதுவும் மாறப் போகிறார்கள். இதன் விளைவாக வருடத்தொடக்கத்திலேயே நற்பலன்கள் வந்துசேர, யோக பலம்பெற்ற நாளில் சர்ப்ப சாந்தியை செய்வது நல்லது.

மறைந்த கேதுவால் நிறைந்த தன லாபம் கிடைக்கும் என்றாலும், விரயங்களும் கூடுதலாகவே இருக்கும். ஊர் மாற்றம் பற்றிய சிந்தனைகள் மேலோங்கும். ஒருசிலருக்கு அந்நிய நாடு, அந்நிய மாநிலங்களுக்கு உத்தியோக ரீதியாக செல்லும் வாய்ப்பு கிட்டும். எதிரிகளின் பலம் குறையும். தொழில் கூட்டாளிகளை மாற்ற முன்வருவீர்கள். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பை உருவாக்கிக் கொள்பவர்களுக்கு வங்கிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்தோடு குதூகலப் பயணங்களை மேற்கொள்வீர்கள். [illegible] முதல்வர்களால் உதிரி வருமானங்கள் வந்து சேரும். குழந்தைகளின் திருமணத்தை முன்னிட்டு ஆபரணங்களை வாங்க முன்வருவீர்கள். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது.

**குருப் பெயர்ச்சி பலன்கள்!**

புதுவருடத்தில் குரு உச்சம் பெறப் போகிறார். இதுவரை 9-ம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது 10-ம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இந்த நிகழ்வு ஜூன் 13-ம் திகதி நிகழவிருக்கிறது. 10-ல் குரு வந்தால் பதவி மாற்றங்கள், இடமாற்றங்கள் உருவாகும் என்பது ஒரு நியதி. அவரவர் சுய ஜாதகத்தைப் பொறுத்தும், திசாபுத்தி அடிப்படையிலும் அது நிகழலாம்.

3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. கடன்களை வாங்க வைப்பவரும் குருதான். அதேநேரத்தில் கடன்களை நிவர்த்தி செய்ய வைப்பவரும் குருதான். எதிர்ப்புகளை உருவாக்குவதும் குருதான். அந்த எதிரிகளை சம்ஹாரம் செய்ய வைப்பவரும் குருதான். 10-ல் வந்த குருவை வரவேற்றுக் கொண்டாடி, பதிகம் பாடி வழிபட்டால் முத்தான வாழ்க்கைக்கு முன்னேற்றத்தை வழங்குவார்.

பொதுவாக குரு இருக்குமிடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்கு பலன் அதிகமல்லவா? எனவே அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, குருவின் பார்வை பதியுமிடங்களான 2, 4, 6 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. எனவே கொடிகட்டிப் பறந்த குடும்பப் பிரச்சினைகள் தீரும்.



கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். சேமிப்பின் மூலம் தங்கம், வெள்ளி ஆபரணங்களையோ, இடம், பூமிகளையோ வாங்க முன்வருவீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலும்.

தாய்வழி ஆதரவு தக்கவிதத்தில் கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர் உங்களுக்கு ஒத்துழைப்பு செய்வர். நடந்துவரும் தொழிலில் ஈடுபாடு குறையலாம். நாகரீக தொழில்களில் மோகம அதிகரிக்கும். கடந்து வந்த பாதைகளிலிருந்த குறுக்கீடுகள் அகலும். காலம், காலமாக பகைமை உணர்வோடு விலகியிருந்த உறவினர்கள் இப்பொழுது உங்களை தேடி வந்து ஆச்சரியப்பட வைப்பர். ரேஸ் குதிரையைப் போல உங்கள் மனவேகம் அதிகரிக்கும். செயல் வேகம் கூடும். திறமை பளிச்சிடும். திசைமாறிய தென்முகக் கடவுளை முறையாக வழிபடுவது முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு!**

உங்கள் ராசிநாதன் சுக்ரன் என்பதால் வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டையும் பிறந்த திகதி மற்றும் கூட்டுத் தொகைக்குரிய எண்களின் ஆதிக்கநாளில் யோகபலம் பெற்ற நட்சத்திரமும் சேரும் நேரத்தில் சிறப்பு வழிபாடுகளையும் மேற்கொண்டு பொருள் வளம் பெருகும் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள்.

**இப்புதுவருடம் பொன்கொழிக்கும் வருடமாக உங்களுக்கு அமைகிறது!**

நாளை விருச்சிகம்....

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

679

## புத்தி சாதுரியம் மிக்க கொக்கு

ஒரு குளக்கரையில் ஒரு கொக்கு இருந்தது. அது ஒரு கிழட்டுக்கொக்கு. சிரமமில்லாமல் மீன்களைப் பிடித்துத் தின்பதற்கு என்ன வழி என்று அது யோசித்தது.


குளக்கரையருகில் போய் நின்று கொண்டது. கிட்டநெருங்கிய மீன்களைக்கூட இது கொத்தாமலே இருந்தது. மீன்களைத் தின்ன தனக்கு ஆசை எதுவும் இல்லாததுபோல் பாசாங்கு செய்தது.

அந்த மீன்கள் மத்தியிலே ஒரு நண்டும் இருந்து வந்தது. இது நெருங்கி வந்து "மாமா! வழக்கத்திற்கு மாறாக எதையும் தின்னாமல், விளையாடாமல் இன்றைக்கு இருக்கிறீர்களே ஏன்" என்று கேட்டது.

"மீன்களைத் தின்கிறவரை நான் புஷ்டியாகவும் ஆரோக்கியமாகவும் இருந்துவந்தேன். உங்களை ருசி பார்த்துச் சுகமாகக் காலம் கழித்து வந்தேன்.

ஆனால், உங்களுக்கெல்லாம் பேராபத்து ஒன்று வரப்போகிறது. அதனால் கிழப்பருவத்தில் என் சுக ஜீவனத்துக்கும் கேடு வரும். அதை நினைந்து மனம் சோர்ந்து நிற்கிறேன்" என்றது கொக்கு.

"அதென்ன ஆபத்து மாமா? குளக்கரையோரமாய் மீனவர்கள் பலபேர் பேசிக் கொண்டு போனதைக் கேட்டேன்: 'இது பெரிய குளம். மீன்கள் நிறைய இருக்கின்றன. நாளைக்கோ மறுநாளைக்கோ வந்து வலை வீசுவோம். இன்றைக்கு நகரத்தின் அருகிலுள்ள ஏரிக்குப் போகலாம்' என்று பேசிக்கொண்டார்கள். அதனால் நீங்களும் சாகப்போகிறீர்கள். நானும் உணவில்லாமல் சாகப்போகிறேன். அதை நினைக்க நினைக்க எனக்கு வருத்தமாயிருக்கிறது. சாப்பாட்டில் இன்று மனம் செல்லவில்லை" என்றது கொக்கு.



அந்த வஞ்சகனின் சொற்களைக் கேட்டு ஜலராசிகள் எல்லாம் உயிருக்குப் பயந்துபோயின. எல்லோரும் கூடி, "மாமா! அப்பா! அண்ணா! நண்பா! மதிவாணா! அபாயத்தைக்கேட்ட நீ உபாயமும் அறிந்திருப்பாய். சாவின் வாயிலிருந்து எங்களைக் காப்பாற்று!" என்று கேட்டுக் கொண்டன.

"நான் ஒரு பறவை. மனிதனோடு என்னால் சண்டைபோட முடியாது. ஆனால், ஒன்று செய்ய முடியும். உங்களையெல்லாம் இந்தக் குளத்திலிருந்து வேறொரு ஆழங்காணாத குளத்துக்கு மாற்றிவிட முடியும்" என்றது கொக்கு.

இந்தச் சாகஸப் பேச்சில் அவை எல்லாம் மதிமோசம்போய், "மாமா! நண்பா! சுயநலமில்லாத பந்துவே! முதலில் என்னைக் கொண்டுபோ! இல்லை. என்னைக்கொண்டுபோ! இந்தப் பழமொழியை நீ கேட்டதில்லையா?"

தன்னல மறுப்புடன் உதவி செய்வதில் திடச்சித்தமுடையவர்கள் எதற்கும் தயங்கமாட்டார்கள் உயிர் போனாலும் போகட்டும். நண்பனுக்கு நன்மை செய்தால்சரி என்று கருதுகின்றனர்.

என்று ஒரே சமயத்தில் நான் முந்தி, நீ முந்தி என்று கேட்டுக் கொள்ளத் தொடங்கின..........

தொடரும்

01.2014
05

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1477 - பேர்கண்டி இளவரசன் சார்ல்ஸ் கொல்லப்பட்டான். பேர்கண்டி பிரான்சின் பகுதியானது.
- 1655 - கோ-சாய் என்பவன் ஜப்பானின் மன்னனானான்.
- 1896 - வில்ஹெம் ரொண்ட்ஜென் ஒரு வகைக் கதிர்வீச்சைக் கண்டுபிடித்ததாக ஆஸ்திரியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இது பின்னர் எக்ஸ் கதிர் எனப் பெயரிடப்பட்டது.
- 1900 - ஐரிஷ் தலைவர் ஜோன் எட்வர்ட் ரெட்மண்ட் பிரித்தானியாவின் ஆட்சிக்கெதிராகக் குரல் எழுப்பினார்.
- 1905 - யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான மோர்னிங் ஸ்டார, வாரப் பத்திரிகையாக பெரிய அளவில் வெளிவர ஆரம்பித்தது.
- 1918 - ஜேர்மன் தொழிலாளர்களின் அமைதிக்கான சுதந்திரக் குழு (நாசிக் கட்சி) அமைக்கப்பட்டது.
- 1940 - பண்பலை வானொலி முதற்தடவையாக காட்சிப்படுத்தப்பட்டது.
- 1945 - போலந்தின் புதிய சோவியத் சார்பு அரசை சோவியத் ஒன்றியம் அங்கீகரித்தது.
- 1967 - இலங்கை வானொலி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1971 - உலகின் முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் மெல்பேர்ணில் நடைபெற்றது.
- 2000 - இலங்கையின் தமிழ் அரசியற் தலைவர் குமார் பொன்னம்பலம் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டார்.
- 2005 - ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த மைக்கல் பிரவுண் தலைமையிலான வானியல் ஆராய்ச்சிக் குழுவினர் சூரியக் குடும்பத்தில் ஏரிஸ் என்ற புதிய குறுங்கோள் (dwarf planet) ஒன்றைக் கண்டுபிடித்தனர்.

### பிறப்புகள்

- 1592 - ஷாஜஹான், முகாலயப் பேரரசர் (இ. 1666)
- 1846 - ருடோல்ஃப் இயூக்கென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய எழுத்தாளர (இ. 1926)
- 1874 - ஜோசப் ஏர்லாங்கர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1965)
- 1902 - ரா. கிருஷ்ணசாமி நாயுடு, தமிழக அரசியல்வாதி (இ. 1973)
- 1927 - சிவாய சுப்ரமணியசுவாமி, இந்து அமெரிக்க ஆன்மகவாதி (இ. 2001)
- 1928 - சுல்பிக்கார் அலி பூட்டோ, பாகிஸ்தானின் ஜனாதிபதி (இ. 1979)
- 1932 - லலிதா, நாட்டிய நடிகை
- 1937 - சித்தி அமரசிங்கம், ஈழத்துக் கலைஞர், பதிப்பாளர் (இ. 2007)

### இறப்புகள்

- 1933 - கால்வின் கூலிட்ஜ், ஐக்கிய அமெரிக்காவின் 30ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1872)
- 1970 - மாக்ஸ் போர்ன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (பி. 1882)
- 1981 - ஹரோல்ட் உரே, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (பி. 1893)

## முகலாய மன்னர்- ஷாஜஹான்



ஷாஜகான், பாகிஸ்தானின் லாஹூரில் 1592 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி இளவரசர் குர்ராம் ஷஹாபுதீன் ஆகப் பிறந்தார. அவர் பேரரசர் ஜஹாங்கிரின் தனி அன்புக்குரியவரும் அவருடைய மூன்றாவது மகனுமாவார், அவருடைய தாய் ஒரு ராத்தோர் இரஜபுத இளவரசியாவார்,

ஷாஜகான் என்னும் பெயர் பெர்ஷிய மொழியின் "உலகத்தின் அரசன்" என்னும் பொருளிலிருந்து வருகிறது.

1627 ஆம் ஆண்டில் தன்னுடைய தந்தை இறந்ததைத் தொடர்ந்து 1658 ஆம் ஆண்டு வரையில் இந்தியாவில் முகலாய சாம்ராஜ்யத்தின் மன்னராக இருந்தார்.

இவர் இளமையாக இருக்கும்போது அக்பரின் அன்புக்கு உரியவராக இருந்தார். அக்பரைப் போலவே அவர் தன்னுடைய இராஜ்ஜியத்தை விரிவுபடுத்த ஆர்வமாக இருந்தார்.

1607 ஆம் ஆண்டில் தன்னுடைய பதினைந்தாவது வயதில் குர்ராம் ஒரு பெர்சிய பிரபுவின் 14 வயதுடைய பேத்தி அர்ஜுமண்ட் பானு பேகமைத திருமணம் செய்தார். அவர்களுடைய திருமணக் கொண்டாட்டத்தில் இருந்த அனைத்துப் பெண்களைவிடவும் தோற்றத்திலும் பண்புநலனிலும் மேம்பட்டவராக இருப்பதைக் கண்டதும்" குர்ராம் -அவருக்கு மும்தாஜ் மஹால் (அரண்மனையின் மணிக்கல்) என்ற பட்டத்தை வழங்கினார்.

முகலாய மன்னர் ஷாஜகான், அரசாட்சி காலம் முகலாய கட்டடக் கலையின் பொற்காலமாக இருந்தது. ஷாஜகான் பல அருமையான நினைவுச சின்னாங்களை எழுப்பினார், அவற்றில் மிகப் பிரபலமாக இருப்பது, தாஜ்மஹால. இது இப்போது உலக அதிசயங்களில் ஒன்றாக இருக்கிறது, இது அவர் மும்தாஜ் மஹால் மீது கொண்ட காதலுக்காக கட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதிய வயது உயர்வுக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

**இலங்கையில் விவசாயிகளுக்கான ஓய்வூதியம் கொடுக்கும் வயதை அதிகரிக்கும் அரசாங்கத்தின் முடிவை இரத்து செய்யுமாறு கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.**

அகில இலங்கை விவசாயிகள் சங்கத்தினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கும் விவசாய காப்புறுதிச் சபைக்கும் இடையே கைச்சாத்தான உடன்படிக்கைக்கு முரணாக அரசாங்கம் ஓய்வூதிய வயதை உயர்த்தியுள்ளதாக அகில இலங்கை விவசாயிகள் சங்கத்தின் தலைவர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

"அந்த ஒப்பந்தத்தின்படி, 60 வயதானதும் விவசாயிகளின் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடங்கப்பட வேண்டும்.

ஆனால் ,தற்போது அரசாங்கம் அந்த வயதை 63 ஆக உயர்த்தியுள்ளமை தவறு" என்று நாமல் கருணாரத்ன கூறினார்.

இதனால் சுமார் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்றும் அகில இலங்கை விவசாயிகள் சங்கம் சுட்டிக்காட்டுகின்றது.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துவரும் விவசாயிகளுக்கு அரசாங்கம் அநீதி இழைத்துள்ளதாகவும் சங்கம் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நிறுத்தப்பட்டுள்ள விவசாய ஓய்வூதிய கொடுப்பனவை செலுத்துவதற்கு, அரசாங்கம் இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் 100 கோடி ரூபா பணத்தை மட்டுமே ஒதுக்கியுள்ளமையும் விவசாயிகளின் அதிருப்திக்கு காரணமாகியுள்ளது.

"ஒரு மாதத்துக்கான விவசாய ஓய்வூதியக் கொடுப்பனவுக்கு சுமார் 12 கோடி ரூபாவுக்கும் அதிக பணம் தேவைப்படுகிறது.

ஆனால் அரசாங்கம் ஒதுக்கியுள்ள பணத்தைக் கொண்டு 7 மாதங்களுக்கு மட்டுமே ஓய்வூதியம் வழங்க முடியும்" என்று விவசாயிகள் சங்கத்தின் தலைவர் கூறினார்.

ஏழு மாதங்களுக்குப் பின்னர் இந்த ஓய்வூதியக் கொடுப்பனவு நிறுத்தப்படும் அபாயம் உள்ளதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர். (அ-2)

## தோட்டம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

ஒரு மில்லியன் ரூபாய் மதிப்புள்ள கஞ்சா தோட்டமொன்றை எம்பிலிபிட்டிய உடவளவை தேசிய பூங்கா அருகே இந்த கஞ்சாத் தோட்டம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து விடுதலை செய்யப்பட்டார்.

(அ-2)



சங்குவேலி ஸ்ரீ காளியம்பாள் சனசமூக நிலைய போரூட் சேமிப்புத் திட்டத்தில் சேமிப்பாளர்களாகவுள்ள பிள்ளைகளுக்கும் சனசமூக நிலைய அங்கத்தவர்களின் தரம் 5 இல் சித்தியடைந்த பிள்ளைகளுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்ட போது...

(படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

## தமிழக மீனவர்கள் 30 பேருக்கும் 6 ஆவது முறையாக விளக்கமறியல்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மற்றும் புதுக்கோட்டையைச் சேர்ந்த 30 தமிழக மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 13 மீனவர்களும், புதுக்கோட்டையைச் சேர்ந்த 17 மீனவர்களும் கடந்த நவம்பர் 5ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களது விளக்கமறியல்நேற்று முன்தினத்துடன் நிறைவு பெற்றதை அடுத்து, இவர்களது விளக்கமறியலை 17ஆம்திகதி வரை நீடித்து மல்லாகம நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

6ஆவது முறையாக இவர்களது விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## இலத்திரனியல் அ.அட்டை தரவுகள் பெறும் நடவடிக்கைகள் ஆரம்பம்

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகள் வழங்குவதற்காக தரவுகள் திரட்டும் பணிகள் எதிர்வரும் மார்ச் மாதத்தில் நாடுபூராகவும் அமைக்கப்பட்டுள்ள 331 நிலையங்களினூடாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் ஆர்.எம்.எஸ். சரத் குமார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு இறுதியில் சகலருக்கும் சர்வதேச தரத்திலான இலத்திரனியல் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை மார்ச் மாதத் திலிருந்து கையினால் எழுதப்பட்ட அடையாள அட்டைக்குப் பதிலாக அச்சிடப்பட்ட அடையாள அட்டை களே விநியோகிக்கபபடும்.

வரலாற்றில் முதற் தடவையாக கடந்த வருடத்தில் சகல பாடசாலை மாணவர்களுக்கும் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் கருத்துத் தெரிவிக்கையில்,

இலத்திரனியல் அடையாள அட்டை வழங்குவதற்காக தரவுகள் திரட்டும் பணி மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்டு வருட இறுதியில் பூர்த்தி செய்யப்படும். இதற்காக 331 இணைப்பு அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கான தலா இரு முகாமைத்துவ உதவியாளர்கள் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தவிர சர்வதேச தரத்திலான புகைப்படம் பிடிப்பதற்காக புகைப்படப், பிடிப்பாளர்கள் பதிவு செய்யப்படவுள்ளனர்.

பிரதேச செயலாளர்களின் கண்காணிப்புடன் இணைப்பு அலுவலக பணிகள் முன்னெடுக்கப்படும்.

ஒருவரது தரவு பெறும் போது முழுக்குடும்பத்தினதும் தரவுகள் திரட்டப்படும். 16 வயதுக்கு மேற்பட்ட சகல ரதும் தரவுகள் இதன் போது திரட்டிட உள்ளோம். விரல் அடையாளங்களும் திரட்டப்படும்.

16 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் அடையாள அட்டை பெறும் போது அதற்காக விண்ணப்பித்தால் மட்டுமே போதுமானது. வேறு தரவுகள் வழங்க வேண்டி ஏற்படாது.

மும்மொழிகளிலும் இலத்திரனியல் அடையாள அட்டை தயாரிக்கப்படவுள்ளது. இதனால் திருட்டுத்தனமாக அடையாள அட்டை பெறுவது தடுக்கப்படும் என்றார். (அ-2)

## பிரதமரின் மகனிடம் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

பிரதமர் டி.எம். ஜயரட்னவின் மகன் அனுராத ஜயரட்னவிடம் பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

அண்மையில் மீட்கப்பட்ட பாரியளவிலான ஹெரோயின் அடங்கிய கொள்கலன் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது,

இரண்டரை மணித்தியாலங்கள விசாரணை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போதைப் பொருள் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் இந்த விசாரணைகளை நடத்தியுளளனர்.

அனுராத ஜயரட்னவின் தேர்தல் பிரசாரப் பணிகளுக்கு போதைப் பொருள கடத்தலுடன் தொடர்புடையதாக குற்றம் சுமத்தப்படும் பாகிஸ்தானியர பணம் வழங்கியதாக தெரிவிக் கப்பட்டிருந்தது.

இதேவேளை, போதைப் பொருள வர்த்தகர் ஒருவர் பிரதமருடன் இருந்து புகைப்படம் எடுத்துக் கொணடமை தொடர்பிலும் ஹெரோயின் கொள்கலனை விடுவிப்பதற்கு கடிதம் அனுப்பி வைத்தமை தொடர் பிலும் விசாரணை நடத்தப்பட உள்ள தாக தெரிவிக் கப்படுகிறது. (2)

# பிரதமர் ஜயரட்ன மன்னிப்பு கோராவிட்டால் வழக்கு தாக்கல்

## ஹெலஉறுமய தெரிவிப்பு

ஓமல்பே சோபித தேரரை விமர்சித்தமைக்கு பிரதமர் டி.எம். ஜயரத்ன மன்னிப்பு கோராவிடின் பிரதமருக்கு எதிராக ஒரு பில்லியன ரூபா நட்டஈடு கோரி நீதி மன்றத்தில் மானநட்ட ஈடு வழக்கு தாக்கல் செய்யப்படும் என ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்திய நாட்டவர்கள் இலங்கை வருவதற்கான விசா தளர்வுகளை கடுமையாக்க வேண்டுமென்றும் அக் கட்சி தெரிவித்தது.

பத்தரமுல்லையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் உரையாற்றுகையில்,

262 கிலோ போதைப் பொருள் கொள்கலனை விடுவிக்குமாறு பிரதமரின் இணைப்புச் செயலாளர் பிரதமரின் உத்தியோக பூர்வ கடிதத் தலைமையகத்தில் கடிதம் வழங்கிய சம்பவம் தொடர்பில் நாட்டுக்கு அம்பலப்படுத்திய எமது தலைவர் ஓமல்பே சோபித தேரர் ஆவார்.

எனவே, எமது தலைவர் ஓமல்பே சோபித தேரரின் நற்பெயருக்குக் களங்கம் கற்பிக்கும் விதத்திலான விமர்சனங்களை பிரதமர் வாபஸ் பெறவேண்டும். இல்லாவிடடால் பிரதமரு க்கு எதிராக ஒரு பில்லியன் ரூபா நட்ட ஈடு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவோம்.

போதைவஸ்துக்கள் பாகிஸதான், பங்களாதேஷ், இந்தியா ஊடாகத்தான் இலங்கைக்கு வருகிறது. இந்நாடுகளிலிருந்து இங்கு வருவோருக்கான விசா வழங்குவதில் தளர்வுகளை ஏற்படுத்தியதுடன் இங்கு வந்த பின்னர் விசா பெறும் நடவடிக்கையும் மேற்கொண்டமையால் தான் இந்நிலை உருவானது.

எனவே, மீண்டும் விசா வழங்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் கடுமையாக்க வேண்டும். போதைவஸ்துப் பழக்கம் இன்று பாடசாலை மாணவர்களிடமும் பரவி வருகிறது. கம்பஹா மாவட்டத்தில் பெருமளவான பாடசாலையில் மாணவர்கள் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். இவ்வாறான நிலையில் எமது எதிர்காலம என்னவாகும என்று கேள்வி எழுப்பினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழி அமுலாக்கலால் மனவேதனையடையாது அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுங்கள்

## அமைச்சர் வாசுக்கு மனோ கடிதம்



(கொழும்பு)

**தமிழ்மொழி அமுலாக்கல், தமிழ்ச்சங்க ஒழுங்கை பெயரிடல், ஆனையிறவு புகையிரத நிலையம் பெயர் மாற்ற முயற்சி ஆகிய விடயங்கள் தொடர்பாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மனவேதனை அடைவதிலோ, தனது இயலாமையை எண்ணி இந்த அரசுக்குள் இருந்தபடி ஒப்பாரி வைத்து வருத்தப் படுவதிலோ பயனில்லை. இதைவிட தனது அரசாங்கத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க முடியுமா என சிந்திக்க வேண்டும். அது என்ன அதிர்ச்சி வைத்தியம் என்பதை நீங்கள் முடிவு செய்து கொள்ளுங்கள் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.**

மனோகணேசன் வாசுதேவ நாணயக்காரவுக்கு அனுப்பியுள்ள மின்னஞ்சல் கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஆனையிறவு புகையிரத நிலையத்துக்கு சிங்கள பெயரை வைப்பது மொழியுரிமையை மீறும் செயல என்றும், ஆகவே அதை எதிர்க்கிறேன் என்றும் சொல்கிறீர்கள். அது போல் தமிழ் மொழி அமுலாக்கல் என்ற பாரதூரமான விடயம் தொடர்பான முயற்சிகளும் எதிர்பார்த்த வெற்றியை தரவில்லை என்கிறீர்கள்.

இதைவிட எங்கள் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர்களால் முன்னெடுக்கப் பட்ட, கொழும்பு தமிழ் சங்கம் அமைந்துள்ள வீதிக்கு அந்த நிறுவனத்தின் பெயரை சூட்டும் செயற்பாட்டை கூட உங்களால் சாதகமாக முடித்து வைக்கமுடியவில்லை.

இந்நிலையில் இந்த அரசாங்கத்தில் இனியும் இருந்து இந்த இனவாத அரசாங்கத்துக்கு, ஒரு இடதுசாரி நிறத்தை தருவதை தவிர உங்களால் என்ன செய்ய முடிந்துள்ளது என்ற கேள்வி இன்று எங்கள் மனங்களில் எழுந்துள்ளது.

2012ஆம் ஆண்டு கொழும்பு மாநகரசபையில் உங்கள் கட்சி உட்பட அனைத்து கட்சிகளினாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்ட பிரேரணையின் மூலம் எங்கள் மாநகரசபை உறுப் பினர் வேலணை வேணியன், கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச்சங்க வீதியை பெயரிடும் முயற்சியை ஆரம்பித்தார்.

இதற்கு மாநகரசபை முதல்வர் முசம்மில், மேல்மாகாண முதல்வர் பிரசன்னா ரணதுங்க, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோர் ஒப்புதல் அளித்தனர்.

வதிமுறைகளின்படி முன்னெடுக்கப்பட்ட இந்த தீர்மானம் அரச வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டது. இந்நிலையில் மாநகரசபை ஆணையாளர் பத்ராணி ஜயவர்த்தனவால், 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திகதி குறிக்கப்பட்டு இந்த வீதியின் புதிய பெயர் பலகை திறந்து வைக்கப்படயிருந்தது.

இந்நிலையில் அதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் இந்நடவடிக்கை மேல்மாகாண முதல்வர் பிரசன்னா ரணதுங்கவினால் இடை நிறுத்தப்பட்டது.

எனினும் இந்த சின்ன விடயம் கூட உங்களால் சுமுகமாக முடித்து கொடுக்க முடியாத நிலைமை உங்கள் அரசுக்குள் நிலவுகிறது. அந்த அளவுக்கு இனவாதம் உங்கள் அரசுக்குள் தலைவிரித்து ஆடுகிறது.


வடக்கில் ஒரே இரவில் தமிழ் கிராமங்களின் பெயர்களை, வீதிகளின் பெயர்களை மாற்றுகிறீர்கள். இன்று வடக்கின் பிரபலமான ஒரு புகையிரத நிலையத்தின் பெயரை சிங்கள பெயராக மாற்ற முயல்கிறீர்கள்.

தலைநகர் கொழும்பில் மிக பாரம்பரியம் மிக்க நீங்களும் பல முறை வந்து உரையாற்றி செல்லும் கொழும்பு தமிழ் சங்கத்தை கௌரவித்து, கொழும்பில் வாழும் தமிழர்களின் தலைமை கட்சியான எங்கள் கட்சி, சட்டப்படி எடுத்த ஒரு முயற்சி கூட இன்று உங்கள் அரசாங்கத்தின் இனவாத போக்கினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பை எங்கள் தலைநகர் என்று நாங்கள் கருதக்கூடாதா? அப்படியானால் எங்கள் சொந்த நாட்டையும்,தலைநகரையும் அமைத்துக் கொள்ளும்படி தமி ழர்களுக்கு உங்கள் அரசாங்கம் சொல்கிறதா?

நீங்கள் உங்களது, இயலாமையை எண்ணி இந்த அரசுக்குள் இருந்தபடி ஒப்பாரி வைத்து வருத்தப்படாமல், இந்த இனவாத அரசாங்கத்தில் இருந்து அதற்கு ஒரு இடதுசாரி நிறத்தை தராமல், உங்கள் அரசாங்கத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க முடியுமா என நீங்கள் இனியாவது சிந்திக்க வேண்டும்.

அது என்ன அதிர்ச்சி வைத்தியம் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள் என அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



வடமாகாண ஆளுநர் பணிமனையில் நேற்று முன்தினம் வடமாகாண பாடசாலைகளில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றி சிறந்த பெறுபேற்றை பெற்றவர்கள், ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியினால் கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் ஆளுநருடன் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:-என்.குமார்)

## கனடா எம்.பியின் வருகை இலங்கைக்கு பாரிய சவால்

கனடா நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசனின் இலங்கை வருகையால், ஜெனீவாவில் பாரிய சவால்களை இலங்கை எதிர்நோக்க வேண்டியேற்படும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கனடாவில் குடியேறியுள்ள தமிழர்களிடம் வாக்கு சேகரிக்கும் நோக்கிலேயே ராதிகா சிற்சபேசன் இலங்கை வந்துள்ளார்.

கனடாவில் வடமாகாணத்தைச் சேர்ந்த மக்கள் பலர் குடியேறியுள்ளதாகவும் அவர்களின் வாக்குகளைப் பெறவே ராதிகா வடக்கு பகுதிக்கு விஜயம் செய்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இவ்வாண்டு இலங்கைக்கு ஜெனீவாவில் பாரிய சவால்கள் காணப்படுவதாகவும் அவற்றை எதிர்கொள்ள தயார் நிலையில் இருப்பதாகவும் கெஹலிய ரம்புக் வெல்ல கூறினார்.

ஜெனீவாவில் இலங்கைக்கு பல நாடுகள் ஆதரவு தருகின்றமை பெருமைக்குரியது என அவர் குறிப பிட்டுள்ளார். (அ-2)

## பேராதனை பல்கலைக்கழகத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தோர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பேராதனைப் பல்கலைக் கழக பி.ஏ.பட்ட இறுதிப் பரீட்சையில் (வெளிவாரி 2012) சித்தியடைந்த மாணவர்களின் விபரங்கள் பல் கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இவ் இறுதிப் பரீட்சைக்கு யாழ்ப்பாண உயர் கலைக்கல்லூரியிலிருந்து தோற்றி சித்தியடைந்துள்ள மாணவர்கள் விப ரம் வருமாறு:

ப.ஜனார்த்தனன் (இணுவில்), தெ.ரஜீவன் (மிருசுவில்), செ.லிங்கநாதன் (மானிப்பாய்), அ.ஜசிகரன் (கோண்டாவில்), சு.வரதராசா (கைதடி), செ.பகீரதகுமார் (ஏழாலை), லோ.ரஜீவன் (மானிப்பாய்), பொ.சசிரூபன் (புத்தூர்), இ.கருணாகரன் (யாழ்ப்பாணம்), வ.யசோதன் (கொடிகாமம்), ர.வாகீசன் (நீர்வேலி), சி.ரணீசன் (கொக்குவில்), அ.தினேஷ் (கொக்குவில்), த.தர்ஷிகன் (சங்கானை), நா.ஜெயகாந்தன் (இளவாலை), வ.சசிகரன் (ஆனைக்கோட்டை), ர.ருசிபன் (ஆனைக்கோட்டை), ஜெ.ஜெயதீஸ்வரன் (மானிப்பாய்), சி.ரவிசாந் (கரணவாய்), ம.கிருஸ்ணகுமார் (வல்வெட்டித்துறை), ச.ஜெசிந்தன் (காரைநகர்), சி.மேனகதீபன் (மானிப்பாய்), அ.மதன்ராஜ் (சாவகச்சேரி, சி.சிவநிறோசன் (சாவகச்சேரி), ம.சந்திரமோகன் (கரணவாய்), வ.சதீஸ்கரன் (கரவெட்டி), நா.துர்க்காலினி (கொக்குவில்), சி.தனுஷியா (கோண்டாவில்), கு.றினோயா (கோப்பாய்), பா.சுஜிதா (கோண்டாவில்), பு.தினேஸ்கௌரி (மானிப்பாய்), மு.சுபாஜினி (அச்சுவேலி), ஜெ.தர்மிதா (யாழ்ப்பாணம்), ந.சபிதா (பண்டத்தரிப்பு), த.சிந்துஜா (மானிப்பாய்), ப.தனரஞ்சினி (சுழிபுரம்), சி.விஜிதா (மானிப்பாய்), சி.சிவதாரணி (மானிப்பாய்), த.சுகன்யா (கரவெட்டி, செ.சதினி (உடுப்பிட்டி), க.நித்தியா (கரவெட்டி, ம.ரஜித்தா (உடுப்பிட்டி), சி.பிரதீபா (கரவெட்டி), சி.கிருஸ்ணவேணி (புலோலி), தி.வானிதி (புலோலி), ர.பிரதயானி (நல்லூர்), ந.யாழினி (உரும்பிராய்), [illegible]தினி (யாழ்ப்பாணம்), [illegible] (புங்குடுதீவு), ஜீ.துஷ் யந்தி (கோண்டாவில்), அ.அமிர்தினி (யாழ்ப்பாணம்), அ.மயூரதி (நீர்வேலி), க.ராதிகா (யாழ்ப்பாணம்), சி.மனோகரி (யாழ்ப்பாணம்), ர.டிலானி (அல்வாய்), தி.அருணா (புலோலி), மா.தர்ஷிகா (கோண்டாவில்), ந.பிரபாவதி (கொக்குவில்), ஜெ.சுதர்சினி (மானிப்பாய்), க.லோகேஸ்வரி (நயினாதீவு), வா.திரியாம்பிகை (நயினாதீவு), ப.சர்ஷினி (மிருசுவில்), க.சுகந்தினி (சாவகச்சேரி), த.கவிதா (சாவகச்சேரி), எம்.செல்வரதி (வட்டுக் கோட்டை), தெ.ரூபிகா (கோண்டாவில்), சி.சிவஜிக்கா (உடுப்பிட்டி), த.கலைமகள் (சுன்னா கம்), ஸ்ரீ.ஸ்ரீவித்யா (கொடிகாமம்) த.சகிலா (ஆனைக் கோட்டை), கா.நிறஞ்சினி (திருநெல்வேலி), தி.நிஷாந்தினி (கைதடி), க.செலிசியா டெல்வின் (புதுக்குடியிருப்பு), கே.கான்சிரூபி (யாழ்ப்பாணம்) எஸ்.கலைவாணி [illegible] (அ)

## மாகாணசபைத் தேர்தலில் இளைஞர்களுக்கு வாய்ப்பு

மாகாணசபைத் தேர்தலில் இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரசிறி தொடங்கொடவின் மகனுக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.

1993ஆம் ஆண்டு தென்மாகாண சபையை பலவந்தமாகவே நிறுவினோம். ஆளுநர் பாகீர் மாகார் கடிதத்தில் கையொப்பமிடவில்லை.

பலவந்தமாகவே தென் மாகாண சபையின் ஆட்சியை கைப்பற்றினோம். அமரசிறி தொடங்கொட முதலமைச்சராக பதவியை பொறுப் பேற்றுக் கொண்டார்.

மாகாணசபை நிறுவுதல் தொடர்பான பிரகடனத்தை நானே வாசித்தேன் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் காலிக்கு சென்றிருந்த போது முதலமைச்சர் சான் விஜயலாலிடம் இதனைத் தெரிவித்துள்ளார். (அ-2)

### கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க காலநீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்பு பீடத்தினால் நடத்தப்படும் சைவசித்தாந்த முதுகலை மாணிப்பட்டக் கற்கை நெறியினைக் கற்க விரும்புகின்றவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என்று உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி, பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீனத்தின் "லட்சியம்" எல்லை மீறுகிறது

ஜப்பானியச் சக்கரவர்த்தி அகிஹிடோ புதுடெல்லிக்கு வந்ததும், சம்பிரதாயத்தை மீறிய நல்லெண்ண நடவடிக்கையாக பிரதமர் மன்மோகன் சிங்கே அவரை நேரில் சென்று வரவேற்றதும் பெய்ஜிங்கிலும் இதர ஆசிய நாடுகளின் தலைநகரங்களிலும் கவனிக்கப்படாமல் போயிருக்காது.

தன்னுடைய எல்லைகளுக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களையும் தனக்குரிய 'வான் தற்காப்புப் பகுதியாக' இதுவரை இருந்திராத வகையில் அறிவித்து, ஜப்பான், தென்கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளின் இறையாண்மை உரிமைகளுக்கு சீனா சவால்விட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், அகிஹிடோவின் இந்தியப் பயணம் அமைந்திருந்தது. ஜப்பான், தென்கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளின் தீவுகளையும் கடல் பாறைகளையும் தனக்குரிய பகுதி என்று சீனா உரிமை கொண்டாடிவருகிறது.

தங்களுடைய 'வான் தற்காப்புப் பகுதியில் பிரவேசிக்கும் சிவில் விமானங்களும், இராணுவ விமானங்களும் தங்கள் நாட்டு விமானப்படை விமானங்களால் பின் தொடரப்பட்டு, சுட்டு வீழ்த்தப்படாமல் இருக்க வேண்டுமானால், முன்கூட்டியே தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

**அச்சமூட்டும் உரிமைக்கோரல்கள**

ஆண்டுக்கணக்காகத் தங்களுக்குள் பேசி ஆலோசனை நடத்தி, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு எடுத்த முடிவுக்கேற்ப இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சீன அதிபர் சி ஜின்பிங்கின் தலைமையைக் கேள்வி கேட்க எவருமில்லை என்பதை உறுதிப்படுத்துவதுதான் பெய்ஜிங்கில் அண்மையில் நடந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு.

ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தைதான் என்கிற கட்டுப்பாடு நீக்கம், தவறு செய்கிறவர்களுக்கான கடின உடலுழைப்பு முகாம்கள் கலைப்பு, வேலை தேடி இடம்பெயரும் தொழிலாளர்களுக்கு நிவாரணம், ஊழல்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள், நாட்டின் இயற்கை வளங்களைத் தொழில்வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதில் அரசின் கட்டுப்பாடுகளை விலக்கிக்கொள்வது என்று பல்வேறு வெகுஜன மயக்கு நடவடிக்கைகள் மாநாட்டில் எடுக்கப்பட்டன.

அவற்றைவிட முக்கியமானது ஜனாதிபதி சி தலைமையில், 'உச்சபட்ச தேசியப் பாதுகாப்பு கமிட்டி' (Apex National Security Committee) அமைக்கப்பட்டிருப்பதுதான். டெங் சியோபிங் அவருடைய பதவிக காலத்தில் செயற்பட்டதைப் போல, தேசியப் பாதுகாப்பு தொடர்பானவற்றில் ஜனாதிபதி சி ஜின்பிங் செயற்பட இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் சீனா மிகவும் பலம் குறைந்திருந்த சமயத்தில், டெங்குக்கு இந்த அதிகாரம் தேவைப்பட்டது. "வலிமையை மறைத்துக்கொள்ளுங்கள், தகுந்த சமயம் வரும் வரை காத்திருங்கள்" என்ற ஆலோசனையை அவர்தான் சீனத்துக்கு அளித்தார். டெங் சகாப்தம் முடிந்த பிறகு, சீனா இப்போது பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலமாகத் திகழ்கிறது. எனவே தான் பக்கத்து நாடுகளைப் பார்த்து முண்டா தட்டுகிறது.

விமானந்தாங்கிக் கப்பல் ஒன்றைத் தன்னுடைய கடற்படையில் புதிதாகச் சேர்த்த பிறகு, பசுபிக் பெருங்கடலிலும் இந்தியப் பெருங்கடலிலும் தன்னுடைய எல்லையை விரிவுபடுத்த விரும்புகிறது. தென் சீனக் கடலில் தான் வைத்த ஒன்பது புள்ளிகளை இணைத்துத் தன்னுடைய கடலாதிக்கத்தை நிறுவ முயற்சிக்கிறது.

வியட்நாமிடமிருந்து பராசெல் தீவுகளை இராணுவ பலத்தைக்கொண்டு கைப்பற்றியது. பிலிப்பைன்ஸ், புரூணை, மலேசியா, தாய்வான், வியட்நாம் ஆகியவற்றின் எதிர்ப்புகளை எல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு, ஸ்பிராட்லி தீவுகளும் எங்களுக்கே சொந்தம் என்று உரிமை பாராட்டுகிறது.

ஹைனான் தீவிலிருந்து 590 கிலோ மீற்றர் தொலைவிலும் பிலிப்பைன்ஸிலிருந்து 51 கிலோ மீற்றர் தொலைவிலும் இருக்கும் குறும்புப் பாறையைக் கைப்பற்ற இப்படித் தான் பலத்தின் மூலம் பிடித்துக்கொண்டது.

கடற்பரப்பு, தீவுகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள் எதையும் சீனா மதிப்பதில்லை. அவற்றுக்குப் புறம்பாகவே அது கடற் பரப்புக்கும் தீவுகளுக்கும் உரிமை கோருகிறது.

சீனத்தின் 'வான் பாதுகாப்பு எல்லை' அறிவிப்பை ஜப்பான், தென்கொரியா, தாய்வான் ஆகியவை கடுமையாக எதிர்த்துள்ளன. சீனத்தின் அறிவிப்புக்கு சட்டபூர்வ அங்கீகாரம் இல்லை என்பதைக் காட்ட, தன்னுடைய 'பி-52' ரக குண்டுவீச்சு விமானங்களை, ஆயுதங்கள் ஏதும் இல்லாமல் சீனா அறிவித்த வான் பாதுகாப்பு எல்லை மீது பறக்கவைத்தது அமெரிக்கா. அதே சமயம், "சீனா அறிவித்துள்ள வான் பாதுகாப்பு எல்லை மீது பறக்கும்போது, எச்சரிக்கையாக இருக்கவும்" என்று தன்னுடைய நாட்டு சிவில விமானத் துறைக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

சீனத்தின் அறிவிப்பை ஏற்க ஜப்பானும் தென்கொரியாவும் மறுத்துவிட்டன. சர்ச்சைக்குரிய செனகாகு தீவுகளுக்கு மேல் பறக்க சீன விமானங்கள் வந்தபோது, ஜப்பானியப் போர் விமானங்கள் உடனடியாக விண்ணில் சீறிப்பாய்ந்து, சீன விமானங்களை எச்சரித்தன.

"லியோடோ என்ற கடலில் மூழ்கிய பாறைப் பகுதியைச் சுற்றியுள்ள கடற்பரப்பு எங்களுடையது தான். சீனா அதைத் தங்களுடைய பகுதி என்று அறிவித்திருப்பது குறித்து வருந்துகிறோம், சட்டப்படி அது எங்களுடைய இடம்தான்" என்று தென் கொரியா அறிவித்துள்ளது.

சீனத்தின் இந்த அறிவிப்பால், மஞ்சள் கடலில் மீன்பிடிப்பதில்கூட தென் கொரியாவுக்கும் அதற்கும் மோதல் போக்கு ஏற்பட்டிருக்கிறது. சமீபத்தில் டோக்கியோவுக்கும் சியோலுக்கும் சென்ற அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜோ பிடேன், சீனாவின் அறிவிப்பை எதிர்க்கும் ஜப்பானுக்கும் தென்கொரியாவுக்கும் அமெரிக்க ஆதரவு உண்டு என்பதைத் தெரிவித்துள்ளார். தங்களுடைய 'பி-8' என்கிற பொசைடன் கடல்கண்காணிப்பு விமானத்தை இந்த நோக்கிலேயே ஜப்பானுக்கு அனுப்பிவைத்தது அமெரிக்கா.

செனகாகு தீவுகள் சர்ச்சைக்குரிய பகுதி என்பதை ஜப்பான் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதுதான் சீனாவின் நோக்கம். பசுபிக் பெருங்கடலில் தனக்குத் தடையற்ற உரிமை வேண்டும் என்று சீனா விரும்புகிறது. அதற்காகவே ஜப்பானின் தென்கோடி முனை, தாய்வானின் கிழக்குக் கடலோரம், தென் சீனக் கடல் ஆகியவற்றில் தனது எல்லைகள் இருப்பதாகக் கூறுகிறது.

அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் கடற்பகுதி கடற்படைத் தளபதி அட்மிரல் டிமோதி கீட்டிங் என்பவர், 2009-ல் இந்திய உயரதிகாரிகளுடன் பேசிக்கொண்டிருந்தார். அவரைச் சந்தித்த சீனக் கடற்படைத் தளபதியொருவர், "நாங்கள் விமானந்தாங்கிக் கப்பலை வாங்கிவிட்டால், பசுபிக் பெருங்கடலின் மேற்குப் பகுதியையும் இந்தியக் கடலோரப் பகுதியையும் எங்கள் வசம் விட்டுவிட்டு, கிழக்கு பசுபிக் பெருங்கடலை மட்டும் நீங்கள் பார்த்துக்கொள்ளுங்களேன்" என்று கூறினாராம்.

**வலிமைபற்ற தரப்பு**

சீனாவிடமிருந்து இராணுவ ரீதியான அச்சுறுத்தலைச் சந்திக்கும் ஜப்பான், தென் கொரியா, தாய்வான் போன்ற நாடுகள் அனைத்தும் தங்களுடைய இராணுவ வலிமையை அதிகப்படுத்தும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடுகின்றன. இந்தியாவுடைய தற்காப்பு மிகவும் வலுக்குறைவாக இருக்கிறது. நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் (ஜி.டி.பி.) வெறும் 1.7% மட்டுமே இராணு வத்துக்காகச் செலவிடப்படுகிறது.

இந்தியாவுடனான தனது நிலை எல்லை நெடுகிலும் சீனா தகவல் தொடர்பு கட்டமைப்புகளை அமைத்துவருகிறது. பாகிஸ்தானில் உள்ள கில்ஜித்- பல்டிஸ்தான் பகுதியிலும்கூட அது தகவல்தொடர்பு வசதிகளைச் செய்து கொண்டிருக்கிறது. நம்முடைய இராணுவப் படைகளோ சீன அத்துமீறல் குறித்துத் தகவல் கிடைத்தால்கூட எல்லைக்குச் செல்லவே சில நாட்கள் பிடிக்கின்றன.

இந்திய இராணுவத்திடம் மலைப் பகுதிகளில் பயன்படுத்தக்கூடிய பீரங்கிகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. பல்வேறு பணிகளையும் ஒருங்கே செய்யக்கூடிய விமானங்கள் இந்திய விமானப்படைக்கு மிக அவசரமாகத் தேவைப்படுகின்றன. கடற்படையிடமோ வாங்கி பல ஆண்டுகளான - இப்போதைய போர்த் தொழில் நுட்பங்களுக்கு ஏற்ப பயன்படுத்த முடியாத பழைய நீர்மூழ்கிக் கப்பல்களே இருக்கின்றன.

இந்திய இராணுவத்துக்கு உடனடியாகத் தேவைப்படும் ஆயுதங்களையும் கருவிகளையும் இதர சாதனங்களையும் வாங்க, நரேஷ் சந்திரா என்பவர் தலைமையில் அரசு நியமித்த பணிக்குழு தனது பரிந்துரைகளை வழங்கியே 18 மாதங்கள் (ஒன்றரை ஆண்டுகள்) ஆகிவிட்டன. அரசு அதை இன்னமும் அமுல்படுத்தவில்லை. சீனாவின் நடவடிக்கைகளைப் பெரிதுபடுத்த வேண்டாம், அவற்றால் ஆபத்து இல்லை என்று வக்காலத்து வாங்கும் அதிகாரிகளுக்கு சௌத் பிளாக்கில் பஞ்சமே இல்லை. லடாக் பகுதியல் சுமார் என்ற இடத்தில் அத்துமீறி இந்திய நில எல்லைக்குள் நுழைந்து கொடிநாட்டி உரிமை கொண்டாடிய சீன இராணுவத்தின் செயலைக்கூட, ஒன்றுமில்லை என்று ஒதுக்கித் தள்ளத் தயாராக இருக்கின்றனர்.

இப்படி எல்லைமீறும் சீன நடவடிக்கைகள் சீனத்தையும் இந்தியத் துணைக் கண்டத்தையும் பிரிக்கும் காரகோரம் மலைத்தொடர் பகுதியையும் கடந்துவிட்டன. அதுடன் நில்லாமல், அருணாசலப் பிரதேசமே எங்களுடையதுதான் என்று மீண்டும் கூறும் அளவுக்குச் சென்றுவிட்டது. அதுவும் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, அருணாசலப் பிரதேசத்துக்குச் சமீபத்தில் சென்றபோது இது நடந்திருக்கிறது.

லடாக் பகுதியில் சீனா அத்துமீறி நுழைவதை அந்தப் பகுதியைச் சேர்ந்த பி. ஸ்டோப்டன் என்பவர் வரலாற்று ஆதாரங்களோடு கண்டித்துப் பேசியிருக்கிறார், 1684-ல் எப்படி லடாக் - திபெத் உடன்படிக்கை ஏற்பட்டது, லடாக் - திபெத் எல்லைகள் எப்படி நிர்ணயிக்கப்பட்டன என்று அவர் விளக்கினார். 1956 முதல சீனம் எப்படி லடாக் பகுதிக்கு உரிமை கோரத தொடங்கியது என்று அவர் விவரித்தார்.

இந்தியாவுடன் மட்டுமல்ல, பிற மத்திய ஆசிய நாடுகளுடனும் எப்படி சீனா இதே போல நிலப்பகுதியில் உரிமைகேட்டு சண்டை போட்டு வந்தது. பேச்சுவார்த்தைக்கு அழைத்து ஏதோ சலுகை காட்டுவதைப்போலக் காட்டிக்கொண்டு, ஓரங்குல நிலத்தைக்கூட விட்டுக் கொடுக்காமல், தனக்கு உரிமையல்லாத பகுதிகளை அது கைப்பற்ற முயலும. முதலில் பெருநிலப்பரப்பைத் தன்னுடையது என்று கூறித் தகராறு செய்யும். பிறகு, பேச்சுக்குப் பிறகு கணிசமான இடத்தை எழுதிவாங்கிக்கொண்டு, 'இருதரப்புக்கும் பேச்சில் வெற்றி' என்று அறிவிக்கும். உண்மையில், தனக்கு உரிமையே இல்லாத இடத்தைச் சிறு நாடுகளை அச்சுறுத்திக் கைப்பற்றிவிடும் என்று விளக்கியிருக்கிறார்.

சோவியத் யூனியன் சிதறுண்ட பிறகு, கஸகஸ்தான் நாட்டுடன் இதேபோல எல்லைத் தகராறை சீனா துவக்கியது. தான் கோரிய நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கை கஸகஸ்தான் விட்டுத்தர சம்மதித்ததும் சமரசம் செய்துகொள்வது போல புதிய உடன்படிக்கையைச் செய்துகொண்டது. கஸகஸ்தானும் சீனத்தின் இராணுவ வலிமையைக் கண்டு அஞ்சி, அது கோரியவாறே உடன் படிக்கையைச் செய்துகொண்டது. கஸகஸ்தான் நிலப்பரப்பில் சீன எதிர்ப்பு நடவடிக்கைகள் எதற்கும் இடம் கொடுக்கக் கூடாது, கஸகஸ்தானின் எண்ணெய் வளத்தில் 60%-ஐ சீனாவுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று எழுதி வாங்கிக்கொண்டது. இதற்கு ஈடாக சீனா, கஸகஸ்தானுடன் என்றும் 'நண்பனாக' இருக்கும்! இதையும் ஸ்னோவ்டன்தான் தெரிவிக்கிறார்.

"போரிடாமலேயே எதிரியைப் பணிய வைப்பதுதான் சிறந்த இராஜதந்திரம்" என்று சீன அறிஞர் சுன் சூ சொல்லியிருக்கிறார். அதை சீனா அப்படியே கடைப்பிடிக்கிறது.

"சீனா இந்திய நிலத்தில் அத்துமீறி நுழைகிறது, ஆக்கிரமிக்கிறது" என்று குரல் எழுப்பும்போதெல்லாம், "அப்படியெல்லாம் ஏதுமில்லை" என்று சீனாவுக்காக வரிந்து கட்டிப் பேசும் இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகள், ராஜநீதி என்றால் என்னவென்று அறிந்துகொள்ள இனியாவது சாணக்கியரின் அர்த்த சாஸ்திரத்தைப் படித்துப்பார்ப்பது நாட்டுக்கு நல்லது.

(இணையம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்குள்...! ஒரு பிரபஞ்சம் !

ஒரு கணவனும் மனைவியும் காரில் பயணம் செய்து கொண்டிருந்தனர். அமைதியாக போய்க் கொண்டிருந்த பயணத்தில் கணவன் பேச ஆரம்பித்தான்.

"மேரி, நமக்கு திருமணமாகி 20 வருடம் ஆகிவிட்டது. உன்னால் முடிந்தவரை ஒரு நல்ல மனைவியாக நீ இருந்திருக்கிறாய். ஆனாலும் எனக்கு விவாகரத்து வேண்டும்" அவள் ஒன்றுமே சொல்லவில்லை.

60 கி.மீ வேகத்தில் போய்க் கொண்டிருந்தவள், 80 கி.மீக்கு வேகத்தை கூட்டினாள். அவள் மிகவும் அமைதியாகவே இருப்பதை கவனித்த கணவன், "மேரி, எனக்கு விவாகரத்தோடு நம் வீடும் என் சொந்தமாக வேண்டும். ஏனென்றால் உன் ஆருயிர் சினேகிதியுடன் நான் கள்ளத் தொடர்பு வைத்திருக்கிறேன். அவளுக்கு நம் வீடு பிடித்திருக்கிறது" என்றான்.

மேரி ஒன்றும் பேசவில்லை. வண்டியின் வேகத்தை 100 கி.மீக்கு கூட்டினாள்.

சரி எல்லாம் நன்றாகத்தான் எடுத்துக் கொள்கிறாள் என்று நினைத்த கணவன் "மேரி, எனக்கு இந்த காரும் வேண்டும். எனக்கு இது மிகவும் பிடிக்கும் என்று உனக்கு தெரியுமே!" என்றான்.


மீண்டும் மௌனம். வண்டியின் வேகம் மட்டும் 110 கி.மீக்கு கூடியது.

இதுதான் சரியான சமயம் என்று நினைத்து அவன் மேரி வங்கியில் உள்ள பணத்திலும் உனக்கு பங்கு எதுவும் என்னால் கொடுக்க முடியாது. பத்து வருடம் முன்பே நம் இருவர் பெயரிலும் இருந்த கணக்கை என் பெயருக்கு மட்டும் மாற்றி விட்டேன்" என்றான்.

காரின் வேகத்தை 135 கி.மீக்கு கூட்டினாள்.

"மேரி உனக்கு எதுவுமே வேண்டாமா?" என்று கேட்டான். வண்டியை ரோட்டருகே உள்ள ஒரு பாலத்தை நோக்கி திருப்பிவிட்டு "எனக்கு தேவையானது கிடைத்து விட்டது" என்றாள் மேரி.

"என்ன கிடைத்தது உனக்கு?" என்றான் கணவன். "நான் காரை திசை திருப்பி விட்டுவிட்டேன். என் இருக்கையில் விபத்து நடந்தால் காயமின்றி காப்பாற்றக்கூடிய ஏர்பேக் உள்ளது. உங்கள் இருக்கையில் இல்லை" என்றாள் அவள்!





## ஆன்மீகம் 84

எனவே, இது தப்பிக்கவே முடியாத அளவிற்கு நீங்கள் சரிசெய்து கொள்ள வேண்டும்.

எனவேதான் காலையில் சாதனா, காலையில் சாதனா, காலையில் சாதனா, என்ன நடந்தாலும், காலையில் சாதனா ஒரு சிறிய ஓட்டைகூட இல்லாத அளவிற்கு நீங்கள் இதை சரிசெய்ய வேண்டும்.

சிறிய ஓட்டை இருந்தால்கூட இது தப்பித்து அந்தக் கூட்டத்தோடு சேர்ந்துவிடும். அங்கே பெரிய கூட்டம் என்பதால் அதை பிடிப்பது கடினமாகிவிடும். விக்கிரமாதித்யன் கதைகள் படித்திருப்பீர்களே. அது எங்கிருக்கிறது என்று தெரியாது. ஆனால், சதாசர்வகாலமும் எங்கோ இருந்துகொண்டுதான் இருக்கிறது.

-சத்குரு ஜக்கி வாசுதேவ்-




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்




கதை, வசனகர்த்தா- இளங்கோவன்

05

புன்னகை மலர்ந்தது செவ்வாயில்!

அடுத்த நாள் என்னிடம் மூன்று பைல்களைக் கொடுத்து... "இது ராஜராஜன் பைல். வீட்டுக்குக் கொண்டு போய் படியும். நாளைக்கு மற்றதைப் பேசலாம்..." என்றார்.

நான் எடுத்து வந்ததைப் புரட்டினேன்.



எம்.ஜி.ஆர்-சிவாஜிகணேசன்-சிவாஜியின் தாயார் ராஜமணி

பைலில் ஏதுமில்லை. சில காட்சி வசனங்கள் தொடர்பற்று இருந்தன. பைலில் உள்ள தாள்களில் பொம்மைகள் வரையப்பட்டும், தணிகாசலம் என்ற பெயரும் எழுதப்பட்டிருந்தன.

பைல் ஏதோ மாறியிருக்கும் என்ற எண்ணத்தில் மறுநாள் காலையில் எடுத்துச் சென்றேன். கேட்டார். பார்த்ததை சொல்லி "யார் இந்த தணிகாசலம்?" எனக் கேட்டேன்.

"அவர்தான் உம் மானசீக குரு. ராஜராஜனுக்கு வசனம் எழுத மூணு மாசம் கன்னியாகுமாரியில் உட்கார வைத்தார்கள். அவர் எழுதியது இவ்வளவுதான். இனி நீர் அதற்கு வசனம் எழுதுறீர். இதுலே திரைக் கதை..." என்று கொடுத்து அதன் இயக்குநர் டி.பி. சுந்தரத்தையும் அறிமுகம் செய்து வைத்தார்.

படம் முடிந்து யார் பெயர் போடுவது என்ற கேள்வி எழுந்தது. என்னிடம் செம்மல்கேட்டார்.

"இளங்கோவனால்தான் சினிமாவுக்கு வசனம் முக்கியமென்ற நிலை வந்தது. காலக் கொடுமை, அவரால் இப்ப எழுத முடியவில்லை. உமது

## கண்ணாடிச் சட்டம்

குரு என்கிறீர். குரு காணிக்கையாக நீர் உம் பெயரை விட்டுக் கொடுக்கிறீரா?" என்று கேட்டார்.

"அதுதான் என் எண்ணமும். அவருக்குக் கீழ் உதவி என்று என் பெயரைப் போடுங்கள்" என்றேன்.

"இந்த மனப்பான்மைதான் வேணும். நல்லா இருப்பீங்க" என்று ஆசி கூறினார்.

நான் அவரது சொல்லுக்குப் படிந்ததால்தான் எனக்குப் படிப்படியாக உயர்வு கிடைத்தது.

**கண்ணாடிச்சட்டம்**

மேனிக்கு ஆடை, நாட்டுக்கு மேடை!

ஆடை... மானத்தை காக்கும்- மதிப்பை உயர்த்தும். மக்களை மாற்ற மேடை முக்கியம்...

இதை உணர்ந்தே டால்ஸ்டாய், லெனினிடம்... "பல்லாயிரம் மைல் சுற்றிய நாட்டை நீ ஆளு. எனக்கு இருபதடி சதுர மேடை போதும். உன் ஆட்சிக்கு தக்கபடி மக்களை மாற்றித் தருகிறேன்" என்றார்.

இந்த கொள்கை செம்மலுக்கு உண்டு.

கலைவாணரும் டி.ஏ.மதுரமும் உள்ளத்தில் இணைந்தவர்கள். திரையிலும் வாழ்விலும் கணவன்- மனைவி...

ஆனால், மதுரம் அவர்களின் கழுத்தில் தாலி ஏறவில்லை.

மதுரம் அவர்களின் தங்கையை கலைவாணர் சட்டப்படி மணந்திருந்தார். சொத்துப் பிரச்சினை வந்தது. தாலி கட்டியவருக்கே சொத்து. வெறுங்கழுத்தோடு எவ்வளவு ஒட்டி வாழ்ந்திருந்தாலும் சொத்தில்லை என்று தீர்ப்பானது.

அதைச் சொன்ன நீதிபதி அவர்கள், கலைவாணர் குடும்பத்துக்கு மிகவும் வேண்டியவர். மதுரம்மாள் அண்ணா என்றுதான் அவரைக் கூப்பிடுவார். இருந்தும் நீதிக்குப் பின்தான் பாசம் என்பதைக் காட்ட வேண்டிய நிர்ப்பந்த நிலை அவருக்கு. மதுரத்தம்மாள் எம்.ஜி.ஆரிடம் இதைச் சொல்லி வருத்தப்பட்டார். செம்மல் ஆறுதல் சொன்னார்.

அடுத்த நாடகத்துக்கு கரு கிடைத்துவிட்டதாகச் சொல்லி இந்த தீர்ப்பை மாற்றும் அளவுக்கு ஒரு நாடகத்தை எழுதச் சொன்னார்.

அதுதான் அட்வகேட் அமரர்!....

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநகர் ப.நோ.கூ. சங்க கிளை இயங்கவில்லை

(கிளிநொச்சி)

கரைச்சி தெற்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கி வந்த சிவநகர் கிராமத்திற்கான ப.நோ.கூட்டுறவுச் சங்கக் கிளை இயங்காமையால் இப்பகுதி மக்கள் பல சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

குறித்த கிளை கடந்த இரண்டு மாதங்களாக இயங்காமையால் சிவநகர் பகுதியிலுள்ள மக்கள் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக தனியார் கடைகளையும் உருத்திரபுர கூழாவடி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தையும் நாட வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இயங்காமலுள்ள சிவநகர் கிளைக்கான அங்கத்தவர்கள், உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு இயங்கி வந்த நிலையில் திடீரென சேவையை நிறுத்தியமை ஏன் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எனவே குறித்த கிளையை மீண்டும் இயங்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-254)

# கிளி.சந்தைக்கு கடைத்தொகுதிகள் போதுமானதாக இல்லை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையில் அனைத்து வியாபாரிகளுக்கும் கடைத்தொகுதிகள் அமைத்துக்கொடுக்கப்படவில்லையென வியாபாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பொதுச்சந்தைக் கட்டடம் அமைப்பதற்காக அடிக்கல் கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி நாட்டப்பட்டு 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மீன், மரக்கறி ஆகியவற்றுக்கு மாத்திரமே கடைத் தொகுதிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

இதனால் பொதுச்சந்தையினுள் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் ஏனைய வியாபாரிகள் தமது சொந்த முயற்சியினூடாக தற்காலிக கடைகளை அமைத்து இன்றுவரை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறாக வியாபாரத்தில் ஈடுபடும் ஏனைய வியாபாரிகளுக்கு கடைத்தொகுதிகள் அமைத்துக் கொடுப்பதில் பாரபட்சம் ஏன் என பாதிக்கப்பட்டவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

எனவே பொதுச்சந்தையினுள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் அனைவருக்கும் கடைத்தொகுதிகளை அமைத்துத் தருமாறு பாதிக்கப்பட்ட வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9)

# தர்மபுரம் பிரதேசத்தில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(கண்டாவளை)

தர்மபுரம் பிரதேசத்தில் ஒரு இரவில் மூன்று வீடுகளில் கொள்ளைச் சம்பவங்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, தர்மபுரம் கிழக்கில் இரண்டு வீடுகளிலும் பெரியகுளம் பகுதியில் ஒரு வீட்டிலுமாக மூன்று வீடுகளில் திருடர்கள் நுழைந்துள்ளனர்.

இதில் ஒரு வீட்டின் பின்பக்க கதவை திருடர்கள் உடைத்துக்கொண்டிருந்த போது வீட்டார் உறக்கத்திலிருந்து எழும்பி அயலிலுள்ளவர்களை உதவிக்கு அழைத்ததனால் திருடர்கள் தப்பியோடிவிட்டனர்.

ஆயினும் ஏனைய இரு வீடுகளில் தற்காலிக வீடு ஒன்றில் வசிக்கும் குடும்பமொன்றுக்கு மயக்க மருந்தைப்போட்டு அங்கிருந்து பொருட்களை வெளியே வீசியதுடன் சிறிய தொகைப் பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

மற்றைய வீடொன்றின் கதவு உடைத்து நுழைந்த திருடர்கள் ஒன்றரைப் பவுண் பெறுமதியான சங்கிலியை திருடிச் சென்றுள்ளதாக வீட்டார் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு சம்பவ தினம் பகல் வேளையும் திருட்டு ஒன்று இடம்பெற்றுள்ளது. வீட்டில் ஆட்கள் இல்லாத நேரம் பார்த்து ஓட்டைப்பிரித்து உள்நுழைந்த திருடர்கள் 40 ஆயிரம் ரூபா பணத்தை சூறையாடியுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இப்பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதனால் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளை இப்பகுதியில் அதிகரிக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-263)

# குமார் பொன்னம்பலத்தின் 14 ஆம் ஆண்டு நிறைவு

(குருமன்காடு)



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 14 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு வவுனியா நகர சபை மண்டபத்தில் சி.கஜேந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சிவில் அமைப்பின் தலைவரும் மன்னார் மாவட்ட ஆயருமான அதிவணபிதா இராயப்பு ஜோசப்ஆண்டகை, சிறப்பு அதிதியாக வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றிய செயலாளர் நா.பிரபாகரக்குருக்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் **தமிழர்களும் அனைத்துலக சமூகமும்** என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளரும் கவிஞருமான நிலாந்தனின் நினைவு பேருரை நடைபெறவுள்ளது. அதனை தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட செயலாளர் சி.கோபாலகிருஷ்ணனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெறவுள்ளது. (அ-9-250)

# சிறுவர் இல்லங்களின் புதுவருட விளையாட்டு போட்டி முடிவுகள்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு முள்ளியவளை பாரதி இல்லம், முல்லைத்தீவு முத்தையன் கட்டு அன்பு இல்லம், கிளிநொச்சி செஞ்சோலை சிறுவர் இல்லம் ஆகிய இல்லங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கான புதுவருட விளையாட்டு நிகழ்வுகள் முல்லைத்தீவு முத்தையன் கட்டு அன்பு இல்ல விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இவ்விளையாட்டு நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளன, இதன்படி முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் விபரங்கள் வருமாறு,

**கயிறு அடித்தல்**

கி. வக்சனா (செஞ்சோலை சிறுவர் இல்லம்), ச.சண்முகப்பிரியா (பாரதி இல்லம்), நே. அனுசிகா (பாரதி இல்லம்)

**பணிஸ் சாப்பிடுதல்**

ர. கிந்துசா (நெஞ்சோலை சிறுவர் இல்லம்), அ.ஜெனித் (அன்பு இல்லம்), அ. ஜெனஸ்ரீபன் (அன்பு இல்லம்)

**பலூன் ஊதுதல்**

பு. ரகுபரன் (அன்பு இல்லம்), வி. நர்மதா (பாரதி இல்லம்), க. கஜீபன் (அன்பு இல்லம்)

**பந்து வாளியினுள் எறிதல்**

கி.கிசாந்தன் (அன்பு இல்லம்), த.நிலவன் (அன்பு இல்லம்), த. சோதிகா (செஞ்சோலை சிறுவர் இல்லம்).

**தொப்பி மாற்றுதல்**

க. கலைமதி (செஞ்சோலை சிறுவர் இல்லம்), சு. நித்தியலட்சுமி (பாரதி இல்லம்), உ. கோபிகா (பாரதி இல்லம்)

**மாவு ஊதுதல்**

சொ. சுகிந்தன் (அன்பு இல்லம்), வி. பிரியங்கா (பாரதி இல்லம்), கு.குயின்றன் (அன்பு இல்லம்)

**வளையம் எறிதல்**

உ. சயந்தா (பாரதி இல்லம்), கு. பவிதா (செஞ்சோலை இல்லம்), ம.கோபி (அன்பு இல்லம்)

**பந்து மாற்றல்**

நிசாந்தினி (செஞ்சோலை சிறுவர் இல்லம்), நிரோஜினி (பாரதி இல்லம்), தர்சிகா (பாரதி இல்லம்)

**நீர்நிரப்புதல்**

அன்பு இல்லம்,செஞ்சோலை சிறுவர் இல்லம், பாரதி இல்லம்

**யானைக்குக்கண் வைத்தல்**

கமல் சுதா (அன்பு இல்லம்), கயல்விழி அலோசியா (செஞ்சோலை சிறுவர் இல்லம்), ஆகிய மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். (அ-9-21)












வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆறுமுகத்தான் புதுக்குளம் மரை அடித்த குளம் பகுதியில் இரண்டு இலட்சத்து 15 ஆயிரம் ரூபா செலவில் நல்லபிள்ளை முன்பள்ளி அமைக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கட்டடம் திரை நீக்கம் செய்யப்படுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா - திரைவிமர்சனம்




**நடிகர் : மாஸ்டர் மகேந்திரன்**
**நடிகை : மாளவிகா மேனன்**
**இயக்குநர் : பாரதி பாலகுமாரன்**
**இசை : ஜேம்ஸ் வசந்தன்**
**ஒளிப்பதிவு : யு.கே.செந்தில்குமார்**

மதுரை அருகே ஒரு கிராமத்து பெரியவர் திடீரென இறந்துபோகிறார். ஊருக்கு பலவித நன்மைகளை செய்து தருகிறேன் என்று சொல்லியிருந்த அந்த பெரியவர் திடீரென இறந்துபோனதால் அந்த கிராமமே அதிர்ச்சியில் உறைந்து போய் நிற்கிறது.

அவரது மனைவியான ஜெயலட்சுமி, அவர் சொன்ன வாக்குறுதிகளை காப்பாற்றுவார் என்று பார்த்தால், அவரோ தன் கணவன் ஊருக்கு செய்வதாக சொன்னதை தன்னால் செய்துகொடுக்க முடியாது என பிடிவாதம் பிடிக்கிறார்.

அதே ஊரில் வசிக்கும் நாயகன் மகேந்திரன் சாவு வீட்டில் தப்பு அடிக்கிறவர். நாயகி மாளவிகா மேனனின் பாட்டி சாவு வீட்டில் ஒப்பாரி பாடல் பாடுகிறவர். பாட்டிக்கு வயதாகிவிட்டதால் நாயகி அந்த பொறுப்பை ஏற்று சாவு வீடுகளில் ஒப்பாரி பாடுகிறார்.

அப்படி ஒருநாள் நாயகி ஒப்பாரி பாடும் போது அவரைப் பார்க்கும் நாயகன் அவள்மீது காதல் கொள்கிறார். அதன்பிறகு இருவரும் ஒருவருக்கொருவர் தங்கள் காதலை பரிமாறிக்கொண்டு காதலிக்க தொடங்குகின்றனர்.

வெளிநாட்டில் படித்துவிட்டு அந்த ஊருக்கு வந்திருந்த ஜெயலட்சுமியின் பேரன், நாயகன் மற்றும் அவரது நண்பர்களுடன் சுற்றித் திரிகிறார். அதே ஊரில் இருக்கும் தாழ்ந்த சாதி பெண்ணையும் காதலிக்கிறார். இது அந்த பெண்ணின் அண்ணனுக்கு தெரியவரவே, உன்னுடைய பாட்டியை இந்த ஊருக்கு நல்லது செய்யச் சொல், அதன்பிறகு தனது தங்கையை அவனுக்கு திருமணம் செய்துகொடுப்பதாக கூறுகின்றார்.

ஆனால், பாட்டியோ பேரனுக்கு அவனது மாமன் மகளைத்தான் திருமணம் முடித்துக் கொடுக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறாள். தனது விருப்பத்தை பேரனிடம் அவள் கூற, அவனோ இந்த ஊருக்கு தாத்தா செய்வதாக உறுதியளித்த கடமைகளை செய்து கொடுப்பதாக என்னிடம் உறுதிமொழி எடுத்தால் தான் அவளுடைய விருப்பத்தை ஏற்பதாக கூறுகிறான். அவளும் அதற்கு ஒப்புக் கொண்டு ஊர் மக்களுக்கு பணத்தை கொடுக்கிறாள்.

இதற்கிடையில் நண்பர்கள், ஜெயலட்சுமியின் பேரனுக்கும், தாழ்ந்த சாதி பெண்ணுக்கும் யாருக்கும் தெரியாமல் கல்யாணம் முடித்து வைத்துவிடுகின்றனர். இதனால் ஜெயலட்சுமி பாட்டி கொதித்து எழுகிறார். தன்னுடைய பேரனுக்கு கல்யாணம் செய்து வைத்த மகேந்திரன் மற்றும் அவரது நண்பர்களை தேடி பிடித்து தன்னுடைய வீட்டில் அடைத்து வைக்கிறார்.

மறுமுனையில் தன்னுடைய காதலியான மாளவிகா மேனனுக்கும், யுகேந்திரனுக்கும் திருமணம் செய்து வைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. மாளவிகா மேனனின் விருப்பம் இல்லாமலேயே நிச்சயதார்த்தமும் நடந்து விடுகிறது.

கடைசியில், நாயகன் ஜெயலட்சுமியின் பிடியில் இருந்து தப்பித்தாரா? வேறு ஒருவருடன் நிச்சயதார்த்தம் முடிந்த நிலையில் தனது காதலியான நாயகியை மீட்டு நாயகன் கரம் பிடித்தாரா? என்பதே மீதிக்கதை.

நாயகன் மகேந்திரன் சிறுவயதிலிருந்தே நடிப்பதால் நடிப்பு என்பது இவருக்கு சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. படம் முழுக்க செமத்தியாக நடித்திருக்கிறார். தப்பு அடிப்பதை நேர்த்தியாகவும், லாவகமாகவும் கையாண்டுள்ளார். படத்தின் ஒவ்வொரு காட்சிகளிலும் ஒன்றி நடித்திருக்கிறார். மாளவிகா மேனனை வலிய வலிய காதலிப்பதில் நவரசங்களையும் காட்டியுள்ளார்.

மாளவிகா மேனன் திரையில் பார்க்க



மிக அழகாக இருக்கிறார். ஏற்கனவே ஒரு படத்தில் இரண்டாவது நாயகியாக நடித்தவருக்கு இந்த படத்தில் மெயின் ரோல் கொடுத்ததை அழகாக பயன்படுத்திக் கொண்டுள்ளார். கிராமத்து பெண் வேடத்துக்கு கச்சிதமாக பொருந்தியிருக்கிறார். ராக்கம்மா என்ற கதாபாத்திரமாகவே வாழ்ந்திருக்கிறார் என்று சொல்லலாம். இவர் ஒப்பாரி பாடும் அழகே தனிதான்.

பாட்டியாக வரும் பிள்ளையார்பட்டி ஜெயலட்சுமிக்கு ரொம்பவும் வலுவான கதாபாத்திரம். பெண் வில்லியாக படம் முழுக்க மிரட்டியிருக்கிறார். நாயகனின் நண்பர்களாக வரும் 'கல்லூரி' வினோத் மற்றும் கோபால், ஸ்மைல் செல்வா ஆகியோர் தங்களது கதாபாத்திரத்தில் கச்சிதமாக பொருந்தியுள்ளனர்.

நாயகனும்இ நாயகியும் சந்திக்க வேண்டுமென்றால் ஒரு சாவு வீட்டில் தான் சந்திக்க வேண்டும். ஒருவருடைய சாவில் தான் இவர்களுடைய காதலே வளர்ந்து வருகிறது. இப்படி ஒரு காதலை வித்தியாசமான கோணத்தில் சிந்தித்த இயக்குநருக்கு பாராட்டுக்கள்.

படம் முழுவதும் நகைச்சுவையாக கொண்டு போயிருக்கிறார். எதிர்பாராத கிளைமாக்ஸை கொடுத்து அசத்தியிருக்கிறார். சினிமா பிரபலங்களின் பாராட்டுதல்களை பெற்ற ஒரு குறும்படத்தை இரண்டே கால் மணி நேரம் சொல்வதற்காக படத்தின் பெரும்பாலான காட்சிகள் ரொம்பவும் நீளமாக எடுத்திருக்கிறார்கள். அது கொஞ்சம் போரடிக்க வைத்திருக்கிறது.

அந்த காட்சிகளின் நீளங்களை குறைத்துக் கொண்டால் படம் இன்னும் கொஞ்சம் பலம் கொண்டு எழுந்திருக்கும்.

யு.கே.செந்தில்குமார் ஒளிப்பதிவு படத்திற்கு மேலும் ஒரு பலம். ஜேம்ஸ் வசந்தன் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்கும் ரகம். குறிப்பாக ஒப்பாரி பாடல்கள் ரொம்பவும் கவர்கின்றன. மதன் கார்க்கி எழுதிய 'செத்துப்போ செத்துப்போ' பாடல் வரிகள் மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும் ரகம்.

மொத்தத்தில் 'விழா' கொண்டாட்டம்.

# இசைப்புயலின் அழைப்பிதழ்



என்னுடைய கே. எம் இசைப் பள்ளியில் கேரளாவைச் சேர்ந்த மாணவர்களும் பங்கேற்கலாம் என்று கூறியுள்ளார்இசைப் புயல் ஏ. ஆர். ரஹ்மான்.

கேரள மாநிலம் கோழிக்கோடு அருகே உள்ள அரசு மகளிர் பள்ளிக்கூடத்தில் நடந்த நிகழ்ச்சியில் ஏ.ஆர்.ரஹ்மான் கலந்து கொண்டார்.

அப்போது பேசிய அவர், கேரளத்தினரும என்னுடைய இசைப் பள்ளியில் சேரலாம். ஏ.ஆர். ரஹ்மான் இசை என்பது உலகளாவிய ஒரு மொழியாகும்.

எனவே, அதை தழுவிக்கொள்ள ஒவ்வொரு இசைப் பிரியர்களுக்கும் உரிமை உண்டு.

இந்த பள்ளியின் சர்வதேச நிர்வாகிகளிடம் கலந்துபேசி ஆலோசித்து, இங்கு கல்வி பயிலும் மாணவிகள் சென்னையில் உள்ள கே.எம்.இசைப பள்ளியில் சேரந்து இசையினை பயில தேவையான அனைத்தையும் செய்வேன் என்று கூறியுள்ளார்.

# போருக்கு பயிற்சி எடுக்கும் கார்த்திகா



புறம்போக்கு படத்திற்காக சண்டைப்பயிற்சி எடுத்து வருகிறாராம் கார்த்திகா.

இயற்கை, ஈ, பேராண்மை படங்களை இயக்கிய எஸ்.பி.ஜனநாதன் இயக்கும் புதிய படம் புறம்போக்கு.

சமூக நோக்கத்துடன் அவர் இயக்கும் இந்த படத்தில் ஆர்யா-விஜயசேதுபதி நடிக்கிறார்கள்.

இப்படத்தில் ஒரு முக்கிய பொலிஸ் அதிகாரி வேடத்துக்கான நடிகர் தேடி வந்த ஜனநாதன், இப்போது தனது இயற்கை படத்தில் இரண்டு ஹீரோக்களில் ஒருவராக நடித்த ஷாமை அந்த வேடத்துக்கு செலக்ட் பண்ணியிருக்கிறார்.

மேலும் இப்படத்தில் ஹீரோயினாக கார்த்திகா தெரிவாகியுள்ளார், அவர் வழக்கமான கதாநாயகிகளைப்போல் இல்லாமல் ஒரு ஆக்சன் ரோலில் நடிக்கிறாராம்.

இதனால் அவருக்கு தற்போது தீவிர சண்டை பயிற்சி அளித்து வருகிறார்கள். மொத்தத்தில் கதைப்படி எந்த நடிகர்களுக்கும் ஜோடியாக இல்லாமல், கார்த்திகாவும் ஒரு மாறுபட்ட கரக்டரில் நடிக்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோர்சியின் ஆதரவாளர்கள் போராட்டம் பேரணி மீது பொலிஸார் துப்பாக்கி சூடு

## 13 பேர் உயிரிழப்பு

(கெய்ரோ)

**எகிப்தில் பதவி நீக்கப்பட்ட ஜனாதிபதி முகமது மோர்சியின் ஆதரவாளர்கள் நடத்திய போராட்டம் வன்முறையாக மாறியதில் 13 பேர் உயிரிழந்தனர். எகிப்தில் முன்னாள் ஜனாதிபதி முகமது மோர்சியை மீண்டும் பதவியில் அமர்த்தக் கோரியும் புதிய அரசியலமைப்பு சட்டம் குறித்த வாக்கெடுப்பை இரத்து செய்யவும் வலியுறுத்தி அவரது ஆதரவாளர்கள் நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.**



குறிப்பாக, வாரத்தின் வெள்ளிக்கிழமை 'ஜு'ம்மா' தொழுகைக்கு பிறகு அவர்கள் சாலைகளில் பேரணியாக சென்று மீண்டும் எகிப்தின் ஜனாதிபதியாக மோர்சியை அமர்த்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், வழக்கம் போல் வெள்ளிக்கிழமையான நேற்றுமுன்தினம் தொழுகைக்கு பின்னர் ஆயிரக்கணக்கான மோர்சியின் ஆதரவாளர்கள் தலைநகர் கெய்ரோ, அலெக்ஸாண்ட்ரியா, ஃபயும், மின்யா, சுயஸ் கால்வாய் பாயும் இஸ்மாய்லியா உள்ளிட்ட நகரங்களின் வீதிகளில் பேரணியாக சென்றனர்.

மோர்சிக்கு எதிராக எதிர்வரும் 8 ஆம் திகதி புதனன்று நடக்கவுள்ள விசாரணையை இரத்து செய்யுமாறு அவர்கள் முழக்கங்கள் எழுப்பினர்.

இராணுவ ஆதரவுடன் நடக்கும் ஆட்சிக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பினர். தலைநகர் கெய்ரோவில் பொலிஸ வாகனங்கள மீது பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டன. நைல் நதிக்கரையில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸ் காரர் களுககு ம இடையே மோதல் ஏற்பட்டது.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் துப்பாக்கியால் சுட்டதில், கெய்ரோவில் 5 பேரும் அலெக்ஸாண்ட்ரியா உள்ளிட்ட நகரங்களில் 8 பேரும் கொல்லப்பட்டனர்.

பயங்கர ஆயுதங்களு டன் பேரணியாக வந்த 120 பேர் கைது செய்யப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது.

கடந்த மாதம் கெய்ரோ பொலிஸ் தலைமையகத்தில நடந்த கார்க்குண்டு வெடிப்பில் 15 பேர் கொல்லப்பட்டனர்.

இதனை தொடர்ந்து மோர்சியின் முஸ்லிம் சகோதரத்துவ கட்சியை தீவிரவாத இயக்கமாக எகிப்தின் தற்போதைய அரசு அறிவித்தது.

இந்த குண்டு வெடிப்பிற்கு அல்கொய்தா ஆதரவு இயக் கம் ஒன்று பொறுப்பேற்ற நிலையில், அரசுக்கு எதிராக மோர்சியின் ஆதரவாளர்கள் போராட்டத்தை தீவிரப்படுத்தியுள்ளனர். (2)

அடுத்த பிரதமர் வேட்பாளர் யார்?

## விவாதம் நடத்தும் கட்சிகளுக்கு டில்லி முதல்வர் கண்டனம்



பொது மக்களின் அன்றாட பிரச்சினைகள் பற்றி கவலைபடாமல், நாட்டின் அடுத்த பிரதமர் வேட்பாளர் யார் என்பது பற்றி விவாதம் நடத்தும் அரசியல் கட்சிகளுக்கு டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கண்டனம் தெரி வித்துள்ளார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் செய்தி யாளர்களை சந்தித்த மன்மோகன் சிங் 3 ஆவது முறையாக தாம் பிரதமராகும் எண் ணம் இல்லையென்று கூறி னார்.


பிரதமர் பதவியேற்று நாட்டை வழிநடத்தும் தகுதி காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்திக்கு உள்ளது என்று அவர் கூறினார்.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள கெஜ்ரிவால், நாட்டு மக்கள் நாள்தோறும் சந்திக்கும் இன்னல்களை தீர்க்க அரசியல் கட்சிகள் முன்வர வேண்டும்.

ஆனால் அடுத்த பிரதமர் வேட்பாளர் யார் என்ற விவாதத்தில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டு வருவதாக அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இதனிடையே எதிர்வரும 17ஆம் திகதி நடை பெறவுள்ள காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில், அக் கட்சியின பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தி அறி விக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. (2)

## ஜி.எஸ்.எல்.வி-டி5 ராக்கெட் விண்ணில்பாயும்



ஜி.எஸ்.எல்.வி-டி5 ராக்கெட் இன்று மாலை விண்ணில் செலுத்தப்படவுள்ளதாக இஸ்ரோ தலைவர் ராதா கிருஷ்ணன தெரிவித்துள்ளார்.

ஜிஎஸ்எல்வி-டி5 ராக்கெட ஒகஸ்ட் 19ஆம் திகதிமாலை விண்ணில் செலுத்தப்பட இருந்தது. அதில், ஜி-சாட் 14 என்ற தகவல் தொடர்பு செயற்கைக் கோள் செலுத்தப்பட இருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் ராக்கெட்டின் 2 ஆவது நிலை எஞ்சினில் இருந்து திரவ எரிபொருள் கசிவு கண்டுபிடிக்கப்பட்டது.


இதனால் ராக்கெட்டை விண்ணில் செலுத்தும் திட்டம் நிறுத்தி வைக்கப் பட்டது.

ஜி.எஸ்.எல்.வி-டி 5 ராக்கெட் மூலம ஜிசாட் செயற்கைக் கோள்இன்று விண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ தலைவர் அறிவித்தார்.

அதன்படி, இன்று மாலை 4.18 மணிக்கு ஜி.எஸ்.எல்.வி-டி5 ராக்கெட் விண்ணில் செலுத் தபபடவுள்ளது.

கடந்த 2004இல் விண்ணில் செலுத்தப்பட்டு பூமியை சுற்றி வரும் எஜூசாட் என்ற செயற்கைக் கோளுக்கு மாற்றாக ஜிசாட் செயற்கைக் கோள் விண்ணில் செலுத்தப் படவுள்ளது.

இந்த செயற்கைக்கோளில் தகவல் தொடர்புகளை அளிக்கும் வகையில் 6 கே.யு டிரான்ஸ பாண்டர்கள், 6 இ.எக்ஸ்.டி, சி பாண்டு டிரான்ஸ் பாண்டர்கள், கே.ஏ பாண்டர்கள் பொருத் தப்படடுள்ளன. (2)



துருக்கி நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள லிபியா பிரதமர் அலி ஜெய்டான், இஸ்தான்புல் நகரில் வைத்து துருக்கி பிரதமர் ரெசெப் தய்யீப் எர்டாகனை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

## இஸ்ரேலின் ஏவுகணை சோதனை

இஸ்ரேலின் கொல்லும் வண்டிகள் என்றழைக்கப்படும் ஏவுகணைகள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஈரான், சிரியா மற்றும் லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளிடமிருந்து தங்களுக்கு அச்சுறுத்தல்கள் இருந்து வரும் நிலையில் அந்நாடுகளுக்கு எதிராக அமெரிக்க ஆதரவுடன் தற்காப்பு நடவடிக்கைகளை இஸ்ரேல் எடுத்து வருகிறது.

இந்நிலையில் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும் ஏவுகணையை தடுத்தழிக்கும் அம்பை இஸ்ரேல் சோதனை செய்து வருகிறது. நேற்று முன்தினம் இரண்டாவது முறையாக தனது மேம்படுத்தப்பட்ட அம்பை எய்து வெற்றிகரமாக இஸ்ரேல் சோதனை செய்துள்ளது.

மத்திய தரைக்கடல் பகுதியின் மேல் பறந்து சென்ற இந்த அம்பு, வெற்றிகரமாக இலக்கை எட் டிய தாக இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தாக்க வரும் ஏவுகணைகளை பூமியின் வளிமண்டலத்தின் மேலேயே தடுத்து நிறுத்தி அழிக்கும் இந்த ஏவுகணைக்கு கொல்லும் வண்டிகள் என பெயரிடப்பட்டுள்ளது. (2)

## வங்கதேச தேர்தலை புறக்கணிக்க எதிர்க்கட்சி அழைப்பு விடுப்பு

வங்கதேச தேர்தலைப் புறக்கணிக்க எதிர்க்கட்சி அழைப்பு விடுத்துள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள வங்கதேசப் பொதுத் தேர்தலை மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று முக்கிய எதிர்க்கட்சியான வங்கதேச தேசியவாத கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக 18 கட்சிகளின் கூட்டணிக்கு தலைமை வகிக்கும் குறித்த கட்சியின் தலைவர் கலீதாஜியா நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கூறியுள்ளதாவது, ஷேக் ஹசீனா தலைமையிலான அரசு நடத்தும் சட்ட விரோதமான தேர்தலை உள்நாட்டினரும், வெளிநாட்டினரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

ஜனவரி 5ஆம் திகதி கறுப்பு நாளாக அனுசரிக்கப்படும். சனிக்கிழமை காலை 6 மணி முதல் 48 மணி நேரம் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்படும். இந்தக் கேலிக்கூத்தான தேர்தலை வங்கதேச மக்கள் புறக்கணிக்க வேண்டும என்று தெரிவித்துள்ளார்.

வங்கதேசத்தில் 147 தொகுதிகளுக்கு இன்று தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலை எதிர்க்கட்சிகள் ஏற்கெனவே புறக்கணித்ததால் 153 தொகுதிகளில் வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள வங்கதேசத்தின் அரசியல் நிலவரம் கவலை அளிப்பதாக இருக்கிறது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, அமெரிக்க வெளியுறவுத் துறையின் துணை ஊடகத் தொடர்பாளர் மேரி ஹார்ப் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் சுமுகமாகத் தீர்க்க அரசியல் கட்சிகள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

தேர்தலை நியாயமாகவும் நேர்மையாகவும் நடத்துவதில் பிரதான கட்சிகளிடையே இதுவரை ஒருமித்த கருத்து எட்டப்படாதது அமெரிக்காவுக்கு வருத்தம் அளிப்பதாகவுள்ளது என்றார். (2)

## அமெரிக்காவில் பனிப்புயல் தாக்கம்-9பேர் உயிரிழப்பு

உலக நாடுகள் பலவற்றிலும் பனிப்புயலின் தாக்கம் அதிகரித்துள்ளது. அமெரிக்கா, கனடா, பிரித்தானியா உட்பட பல நாடுகளில் பனி அதிகமாக காணப்படுவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பனிப்புயல் தாக்கத்திற்கு 9 பேர் பலியாகினர்.

அமெரிக்காவின் பல இடங்களில கடும் குளிரும், பனிப் பொழிவும் காணப்படுகிறது. மேலும், பல பகுதிகளில் சீதோஷ்ணம் மைனஸ் அளவில் இருந்தது. அத்துடன் நாடுமுழுவதும் பயணிகளும் 2 ஆயிரத்து 300 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளது.

நியூயோரக் நகரத்திலும் அதன் வடக்குப் புறநகர்ப் பகுதிகளிலும் குளிர்காலப் புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து லாங் தீவிலிருந்து அல்பானி வரை செல்லும் மூன்று முக்கிய நெடுஞ் சாலைகள் மூடப்பட்டன.

இதனை தொடர்ந்து நியூயோர்க்கில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கனடாவின் றொறண்ரோவில் கடும் குளிர் நிலவும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

மேலும குளிர் காற்றானது 30 முதல் 40 வரையில் வீசும் எனவும், இத்தகைய குளிர்காற்றானது மனிதர்களின் தோலினை பாதிக்கும் தன்மை வாய்ந்தது எனவும் எச்சரிக்கை விடுத்துளது.

இந்நிலையில் ஒன் ரோறியாவின் நெடுஞ்சாலைகளில் 30 வீதி விபத்துக்கள் நடந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

வாகனச் சாரதிகளை முடிந்தளவு மெதுவாகவும் மிகவும் அவதானமாகவும் வாகன்ங்களை ஓட்டும்படி பொலிஸார் கேட்டுள்ளனர்.

பிரித்தானியாவின் தெற்கு மற்றும் மேற்கு பகுதி மாகாணங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அங்கு பலத்த காற்று வீசி வருவதால், கடல் மற்றும் ஆற்றின் பக்கம் மக்கள் செல்ல வேண்டாம் என சுற்றுச்சூழல் அமைப்பு அறிவித்துள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர்களுக்கு தேர்தல் ஆணையாளர்அறிவுறுத்தல்



எதிர்வரும் மாகாண சபை தேர்தல்களின் போது போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேசிய அடையாள அட்டையிலுள்ள பெயரிலேயே போட்டியிட முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் பொதுச செயலாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மேற்கு மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களின் போது வேட்பாளர்கள் தமது தேசிய அடையாள அட்டையில் உள்ள பெயரைக் கொண்டே போட்டியிட முடியும். தேர்தல்கள் ஆணையாளர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

வேட்பாளர்களுக்கான இலக்கங்களை முன்னுரிமை அடிப்படையில் பெறும் நோக்கிலேயே இந்த முறைமை அறிமுகப்படுத்தப்படுவதாக ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஜனாதிபதியின் ஆணைக்குழு பணிகளை ஆரம்பித்தது

யுத்தகாலத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு இவ் வருடத்தில் தனது பணிகளை ஆரம்பித்தது.

கொழும்பு 6 இல் அமைந்துள்ள ஆணைக் குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் நதிபதி மக்செல் பராக்கிரம பரணகம உரை நிகழ்த்தினார்.

அங்கு உரையாற்றிய ஆணைக் குழுவின் தலைவர் கூறுகையில்,

விசாரணைகள் பூர்த்தியடைந்ததும் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும். 30 வருட யுத்தகாலத்தில் 11 ஆயிரம் சிவில் மற்றும் பாதுகாப்புப் படையினர் காணாமற் போயுள்ளனர். கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி வரை வடக்கு-கிழக்கிலிருந்து பல முறைப் பாடுகளைப் பெற்றுள்ளோம்.

எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஆணைக் குழுவின் அமர்வுகள் கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெறவுள்ளது என்றும் அவர் கூறினார்.

புதுவருடத்தில் பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களான குடிசன மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் பிரியந்தி சுரஞ்சனா வித்யாரட்ன மற்றும் மனோஹரி ராமநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (அ-2)

# கனேடிய எம்.பி.ராதிகா இந்தியா பயணமானார்

(கொழும்பு)

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வருகை தந்திருந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு இந்தியாவுக்கு பயணமானதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்தது.

கடந்த 28 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்திருந்த அவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவடடங்களுக்கு விஜயம் செய்திருந்தார்.

தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டிருந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன்,

எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் நோக்கிலேயே வந்திருந்ததாகவும், நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இந்தியாவிற்கு பயண்மானதாகவும் ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சி.பாஸ்கரா தெரிவித்தார். (அ)

# இலத்திரனியல் ஆவணப்படுத்தல் முறைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இரட்டை பிரஜா உரிமை வழங்கல் மற்றும் வெளிநாட்டில் பிறந்த குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் மற்றும் விசா வழங்குதல் ஆகியவையை இலத்திரனியல் ஆவணப் படுத்தல் முறைக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அனுமதி வழங்கியுள்ளது.

இரட்டை பிரஜா உரிமை பெறவும் வெளிநாட்டில் பிறந்த குழந்தைகளுக்கு பிறப்புப் பதிவு மற்றும் விசா பெறவும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு பெருமளவு விண்ணப்பங்கள் கிடைத்து வருகின்றன.

விசா மற்றும் இரட்டைப் பிரஜா உரிமை வழங்கும் நடவடிக்கையை இலகுபடுத்தவும் முகாமைத்துவம் செய்யவும் என இலத்திரனியல் ஆவணப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (அ-2)

# தேர்தலில் போட்டியிடுவது குறித்து தீர்மானிக்கவில்லை

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தீர்மானிக்கவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் புதல்வி ஹிருணிக்கா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து சில அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடுமாறு கோரிவருவதாகத் தெரிவித்துள்ளார்.

சில கட்சிகள் தம்மை தேர்தலில் போட்டியிடுமாறு அழைத்து வருவதாகவும், இது வரையில் போட்டியிடத் தீர்மானிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### கபிரியேல் யோசப் ஞானராஜா

முல்லைத் தீவு புதுக்குடியிருப்பை பிறப்பிடமாகவும், நெதர்லாந்து பேவர்வைக்கை வதிவிடமாகவும் கொண்ட கபிரியேல் யோசப் ஞானராஜா 28 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை Begraafplaats Duinrust, Bankenlaan 174 , Beverwijk, The Nether lands என்னும் முகவரியில் நடைபெறும்.



### பாலசுப்பிரமணியம் லனதீபன்

வவுனியா சமலங்குளத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம்லனதீபன் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று காலை 10 மணிக்கு வவுனியா சமலங்குளத்தில் நடைபெறும்.



### திருமதி பூரணம் முத்துலிங்கம்

மட்டுவில் தெற்கு வேரக்கேணியை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பூரணம் முத்துலிங்கம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை காலை 9 மணிக்கு Elgin Mills Cemet ery Visitation Chapel, 1591 Elgin Mills Road East, Richmond Hill, Ontario, Canada என்னும் முகவரியில் நடைபெறும்.



### வல்லிபுரம் கணேசலிங்கம்

(முன்னாள் இலங்கை மக்கள்வங்கி முகாமையாளர் )

வடமராட்சி கரவெட்டி நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், லண்டன் Ilford ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கணேசலிங்கம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு The City Pavilion, Manhattan Suite, Collier row Road, Rom ford, RM5 2BH என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி தையல்நாயகி சிவசோமசுந்தரம்

சாவகச்சேரி நுணாவில் மேற்கை பிறப்பிடமாவும், மட்டக்களப்பு, லண்டன் Wembley ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தையல் நாயகி சிவசோமசுந்தரம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு Hendon Cemetery & Crematorium, Holders Hill Road, London NW7 1Nb, United kingdom என்னும் முகவரியில் நடைபெறும்.



### சின்னத்துரை திருச்செல்வம்

(Paris Golden Star King Security-Singa pore முன்னாள் உரிமையாளர் BEng, IAT)

மலேசியாவை பிறப்பிடமாகவும், பண்ணாகம், சிங்கப்பூர், பிரான்ஸ் ஆகிய இடங்களை வதிவிடமாகும் கொண்ட சின்னத்துரை திருச்செல்வம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று சிங்கப்பூரில் நடைபெறும்.



### மரியதாஸ் மனுவேல்பிள்ளை

சற்கோட்டை பழைய வேதக்கோயிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் மனுவேல் பிள்ளை 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.



### திருமதி. யோகம்மா மாணிக்கம்

கரணவாய் தெற்கு கரவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோகம்மா மாணிக்கம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.



### ஆசமுத்து முத்துராசா

நெடுந்தீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசமுத்து முத்துராசா 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று புங்குடுதீவு சேமக்காலையில் நடைபெறும்.



### சின்னையா பொன்னம்மா

வடமராட்சி அல்வாய் வடக்கை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பொன்னம்மா அவர்கள் முதலாம் திகதி புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 11 மணியளவில் கனடா St.John's Norway Cemetory+ Erema tori இல் நடைபெறும்.

# கடற்படை ஜீப் ரயிலில் மோதுண்டு ஒருவர் பலி; 5 பேர் படுகாயம்!

கடற்படை ஜீப் புகையிரதத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒரு கடற்படை வீரர் உயிரிழந்துள்ளார். ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

கடற்படை ஜீப் வண்டி, புகையிரதத்தில் மோதுண்டதால் விபத்து ஏற்பட்டுள்ளது. புனாவ கடற்படை முகாமின் பொறுப்பாளரது மனைவி பிள்ளைகளும் காயமடைந்தவர்களில் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுரம்- யாழ்ப்பாணம் ஹதரஸ் சந்தியின் புகையிரதக் கடவைக்கு அருகாமையில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள் ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது, மாத்தறை நோக்கிப் பயணித்த ரஜரட்ட ரஜின புகையிரதத்தில் ஜீப் வண்டி மோதுண்டுள்ளது.

புகையிரதத்தின் பின் புறத்தில் ஜீப் வண்டி மோதுண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் வியாசரே!

இன்னும் ஓர் மகாபாரதம் உம்மை எழுதச் சொன்னால் எதைக் கதைக் கருவாக வைத்து எழுதுவீர்.

*கிரு.செந்துாரன், பருத்தித்துறை*

வீதி விபத்தில் தாயும் மகளும் உடல் சிதறிப் பலி, வீடு புகுந்த திருடனின் வாள் வெட்டில் மாணவன் பலி, நண்பன் போல் ஏமாற்றி வீட்டில் இருந்தவர்களின் தங்க நகைகள் சூறை, பற்றைக்குள் சிசுவின் உடல் மீட்பு. இப்படி இன்னும் இன்னும் எத்தனை கரு (கலைப்பு)க்கள் உள்ளதே.




அன்பின் வியாசரே!

நன்கு படித்து விட்டு வீட்டில் முடங்கிக் கிடக்கும் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

*சு.ஜெயரூபன், பருத்தித்துறை*

படித்த படிப்புக்கு வேலை கிடைக்க வேண்டும் எனும் எண்ணம் ஒவ்வொருவரிடமும் இருந்தால் இந்த உலகத்தில் நெல் விளையாது. தாராளமாய் மரக்கறி வகைகளை மார்க்கட்டில் வாங்க முடியாது.

அன்பின் வியாசரே!

அனுபவக் கல்வியை புத்தக கல்வி ஈடு செய்யாத காரணத்தால் பட்டம் முடிச்சவங்கள் வேலையின்றி சாதாரண தொழில் செய்கையில் ஏதும் படிக்காதவரோ கம்பனிகளில் முதலாளியாகி மாளிகையில் வாழ்வதை கண்டுள்ளேன். இது உமக்கு வியப்பை தரவில்லையா?

*அ.அகிலேஸ்வரன், மருதங்கேணி*

பட்டம் என்பது ஒரு மனிதனுக்கான சமூக அங்கீகாரம் மட்டுமே தவிர வாழ்வில உயர்வுக்கான பதிலீடு அல்ல.அது தனிமனித முயற்சியில்தான் தங்கி இருக்கிறது.

**பள்ளியில் சொல்லி கொடுப்பவற்றை தள்ளி மெல்ல வைப்பவர்களை பற்றி உங்களின் கருத்து**




அன்பின் வியாசரே!

உண்மையான அன்பு, பாசம், நட்பு கொண்ட நண்பனின் குடும்பம் என்னை விட்டு பிரிந்தால்...?

*இரா.ஜெ.துஷ்யா, அளவாவோடை*

நிச்சயமாய் அந்தப் பிரிவு நிரந்தரமாக இருக்காது.

**A/L பரீட்சை முடிவுகள் வெளியாகி விட்டன. கடினப்பட்டுப் படித்தும் எதிர்பார்த்த முடிபுகள் கிடைக்கவில்லையே என தவிக்கும் மாணவர்களுக்கு தாங்கள் கூறும் ஆறுதல் என்ன?**

அன்பின் வியாசரே!

பெண்கள் ஆண்களுக்கு அடிமைப் பட்டவர்களா? ஆண்கள் பெண்களுக்கு அடிமைப்பட்டவர்களா?

*எஸ்.விஜிதபாமா, கோண்டாவில்*

ஆண் பெண்ணுக்கும் பெண் ஆணுக்கும் அடிமைகள் இல்லை. மனிதன் எல்லோருமே இறைவனுக்கு அடிமையானவர்கள் என்பதை புரிந்து கொண்டால் சரி.

அன்பின் வியாசரே!

உனக்கு 18 எனக்கு 20 பார்த்தீர்களா?

*மாருதா, கட்டைக்காடு*

அம்மா மாருதா படத்தைத் தானே கேட்டாய் நானும் என்னமோ ஏதோ என்று பயந்து விட்டேன்.

அன்புடன் வியாசருக்கு

A/L பரீட்சை முடிவுகள் வெளியாகி விட்டன. கடினப்பட்டுப் படித்தும் எதிர்பார்த்த முடிபுகள் கிடைக்கவில் லையே என தவிக்கும் மாணவர்களுக்கு தாங்கள் கூறும் ஆறுதல் என்ன?

*சி.லீலா, இணுவில்*

காட்டில் வாழும் சிங்கம் ஒன்று தன் காலை உணவுக்காக மான் ஒன்றை துரத்துகிறது. மானோ கணப் பொழுதில் சிங்கத்தின் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு ஓடி மறைந்து விடுகிறது. மான் கிடைக்கவில்லை என்பதற்காய் அந்த சிங்கம் மீண்டும் உணவுக்காய் முயற்சிக்காமல் இருந்தால் மதிய உணவு தேட அதனால் எழுந்து நடக்கக் கூட முடியாமல் போய் விடும். முயற்சிதான் உயிரினங்களின் உயிர் மூச்சு.

Hi Boss,

பள்ளியில் சொல்லி கொடுப்பவற்றை தள்ளி மெல்ல வைப்பவர்களை பற்றி உங்களின் கருத்தை உங்களின் வழமையான பஞ்சு டயலெக்கின் மூலம் விளக்குக?

*த.மோகனரூபன், சுழிபுரம்*

பள்ளியில் சொல்லுறத
தள்ளி வைக்கிறது
கண்ணில விழுந்த
கள்ளி மாதிரி
வாழ்க்கை போயிடும்தள்ளி
அதை அள்ளி எடுத்து
நெஞ்சில் வைத்தால்
கையில வரும் வெள்ளி
அதுதாண்டா உனக்கு விடிவெள்ளி.

# கிறிஸ்து எம்மீது ஒளிர்வித்த ஒளியைக் கொண்டு மற்றவர்களுக்கு வழிகாட்டும் விண்மீன்களாவோம்

இன்று ஆண்டவரின் திருக்காட்சித் திருவிழா. உலக மீட்பர் இயேசு பாலன் பிறந்துள்ளதைக் காண மூன்று ஞானிகள் கீழ்த்திசையிலிருந்து வருகை தந்து பெத்லகேம் மாட்டுத் தொழுவத்தில் அவரை கண்டு மகிழ்ந்து பாலகனைத் தரிசித்த தினத்தை கத்தோலிக்கத் திருச்சபை ஆண்டவரின் திருக்காட்சித் திருவிழா என கொண்டாடி வருகிறது. மூன்று இராசாக்கள், மூன்று அரசர்கள், மூன்று ஞானிகள் என்றும் பலவாறாக அழைக்கப்படும் இன்றைய விழாவின் நாயகர்கள் நமக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளீ. எந்தத் தடை வந்தாலும், எடுத்தத் தீர்மானத்தில் உறுதியாய் இருப்பதற்கு நமது வழிகாட்டிகள் இவர்கள். கிறிஸ்து பிறப்பு தினத்தில் வைக்கப்படும் பாலன் குடில்கள் மூன்று ஞானிகள் திருவிழா வரை தொடர்ந்து வைக்கப்பட்டு அதன் பின்னரே அகற்றப்படும்.

இந்த ஞானிகளின் வருகையை ஒட்டிச் சில முன்னறிவிப்புக்கள் ஊள்ளன் என்று வரலாறு கூறுகின்றது. விண்மீன்: கிறிஸ்து பிறப்பதற்கு முன் 11ஆம் ஆண்டில் ஹேலிஸ் நட்சத்திரம் தோன்றியது. கி.மு. 7ஆம் ஆண்டில் மூன்று கோள்கள்: சாட்டர்ன், ஜுபிட்டர், மார்ஸ் ஒன்றாகக் கூடிவந்து வானத்தில் விந்தை நடத்தியதாக வரலாறு கூறுகின்றது. கி.மு. 5லிருந்து 2ஆம் ஆண்டுக்கு இடையிலான காலத்தில் மெசோரி, சூரியன், டாக்ஸ்டார். என்பவை பிரகாசமாகத் தோன்றின என்பதும் வரலாறு.

இவ்வெளிப்பாட்டின் வழியாக ஒரு புதிய அரசர் தோன்றுவார் என்று மக்கள் நம்பினர். இயேசு பிறப்பதற்கு முன்னர் இஸ்ரயேல் நாட்டில் ஓர் அரசராகத் தோன்றுவார். அவர் மெசியா-அரசராக இருப்பார். அவர் மக்களை மீட்டு விடுதலை அளிப்பார் என்று மக்கள் நம்பினர். "யூதா நாட்டுப் பெத்லேகேமே யூதாவின் ஆட்சி மையங்களில் நீ சிறியதே இல்லை ஏனெனில், என் மகளாகிய இஸ்ராயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்து தோன்று வார்" என கூறப்பட்ட வேதாகம வாக்கில் நம்பிக்கை கொண்டு அவரது வருகைக்காக ஆவலோடு காத்திருந்தனர். மன்னர் பிறந்து விட்டார் என்று வான சாஸ்திரிகள் விண்மீன்கண்டு தங்கள் ஞானத்தைப் பயன்படுத்தி பாலன் இயேசுவைக் காண வந்தனர்.

இந்த ஞானிகள் விண்மீன் தோன்றியதைக் கண்டு பயணத்தை மேற்கொண்டனர். பயண வசதிகள் மிகக் குறைவாக இருந்த அக்காலத்தில் இரவில் மேற்கொள்



ளும் பயணங்கள் எளிதல்ல. அதுவும் தூரத்தில் தெரியும் ஒரு சிறு விண்மீனைப் பல்லாயிரம் விண்மீன்களுக்கு நடுவே மீண்டும் மீண்டும் அடையாளம் கண்டு அந்த விண்மீனைத் தொடர்வது அவ்வளவு எளிதல்ல. பல இரவுகள் மேகங்களும், பனிமூட்டமும் அந்த விண்மீனை மறைத்திருக்கும். அந்த நேரங்களில் மேகமும், பனியும் விலகும் வரைக் காத்திருந்து மீண்டும் விண்மீனைப் பார்த்து எத்தனை எத்தனை இரவுகள் அவர்கள் நடந்திருக்க வேண்டும்? இத்தனை இடர்பாடுகள் மத்தியிலும் ஒரே குறிக்கோளுடன் இரவின் துணையில் பல ஆயிரம் மைல்கள் பயணம் செய்த அந்த ஞானிகளின் மனஉறுதிநமக்கெல்லாம்நல்ல தொரு பாடம். இருந்தாலும் இறுதி வரை மனம் தளராமல் பயணத்தைத் தொடர்ந்தார்கள், இலக்கை அடைந்தார்கள். கடவுளைக் கண்டார்கள்.

இறைவன் தங்களுக்கு மட்டுமே சொந்தம் என்று எண்ணிவந்த யூத குலத்தவருக்கு இந்தத் திருவிழாவும், இதில் பொதிந்திருக்கும் உண்மையும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். வானதூதர்கள் வழியாக, எரியும் புதர் வழியாக மெல்லிய தென்றல் வழியாக தங்களுக்கு மட்டுமே தோன்றிய இறைவன், இன்று பிற இனத்தவருக்கும் தோன்றினார் என்பது அவர்களுககு அதிர்ச்சி யைக் கொடுத்திருக் கும் என்பதில்ஐயமில்லை. இறைவன் அனைத்து மக்களுக்கும் பொதுவானவர். யாருக்கும் தனிப் பட்ட வகையில் அவர் சொத்தாக முடியாது. இந்த உலகமே அவரது சொத்து.

உண்மையான தாகத்துடன் தன்னைத் தேடும் அனைவருக்கும் தன்னை வெளிப்படுத்தும் அழகுள்ளவர் நம் இறைவன் என்பது இப்பெருவிழா நமக்குச் சொல்லித் தரும் பாடங்களில் முதன்மையானது. இறைவனைத் தேடி ஏழு கடல்கள், மலைகள் தாண்டி செல்லத் தேவையில்லை. அவர் எப்போதும் எம்மைச் சூழ்ந்தே இருக்கிறார். அவரைக் காண நாம் மறுத்து, இதயக்கண்களை மூடிக் கொள்வதாலேயே, அவர் தூரமாய் இருப்பதைப் போல் நாம் உணர்கிறோம். தடைகள் பல எழுந்தாலும், தளராமல் விண்மீன்களின் ஒளியில் இந்த ஞானிகள் வழி நடந்தனர். இறைவனைச் சந்தித்தபின் இவர்கள் வேறு வழியாகச் சென்றனர்.

இந்த மூன்று ஞானிகள் இயேசுவைச் சந்திக்க வந்த இந்த நிகழ்வைப் பல கோணங்களில் நாம் சிந்திக்கலாம். வாழ்க்கையில் எந்த விண்மீன்களின் ஒளியில் நாம் நடக்கிறோம். இறைவனைச் சந்திக்கும் போது, சந்தித்த பின் நம் வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் என்ன. நாம் இயேசுவை ஆவலோடு தேடிச் சென்றால் அவரைக் கண்டு நாம் மகிழ்ச்சியில் ஆழ்வோம். இறைவனின் வழிநடத்துதல் என்றும் நம்மோடு இருக்கும். இயேசுவை ஆராதித்து வணங்க நமக்கு வாய்ப்பு கிடைக்கும். இறைவனே நமக்கு பரிசாக அமைவார். இயேசுவைக் கண்ட ஒருவர் மாற்றுப் பாதையில் தான் நடக்க வேண்டும். இயேசுவைப் பலர் தேடி வந்தனர். நாமும் அவரை தேடினோம் என்றால் அவரைக் கண்டடைவோம். பல சோதனைகள், வேதனைகள், துன்பங்கள் மத்தியில் அவற்றை சகித்துக் கொண்டு இயேசுவைத் தேடவேண்டும். நாம் எமது மனங்களில் எதிர்ப்பு மனப்பான்மையை கைவிட்டு கடவுளால் வழிநடத்தப்படுவதற்கு நம்மை கையளிக்க வேண்டும். உறுதியாக உண்மையானவரைக் காணவேண்டும் என்ற



விசுவாசத்தின் கண்களினாலேயே கடவுளை தேடவேண்டும் அப்போது தான் அவரைக் காண முடியும்

இந்தமூன்று ஞானிகளும் கண்டது கனவல்ல. ஒரு விண்மீன். வானில் தோன்றிய ஒரு விண்மீனை எளிதில் தங்கள் பார்வையிலிருந்தும், கவனத்திலிருந்தும் ஒதுக்கி வைத்து விட்டு, அவர்கள் தங்கள் வாழ்வைத் தொடர்ந்திருக்கலாம். ஆனால், அவர்கள் அந்த விண்மீனைத் தொடரத் தீர்மானித்தனர். எனவே இயேசுவைத் தேடி வணங்க வந்த ஞானிகளின் பயணம் இயேசுவை சென்றடையும் பாதையினை எமக்கு தெளிவாகக் காட்டுகின்றது. இவர்கள் பாதச்சுவட்டில் வீறுநடை போட்டு இயேசுவைக் காணச் செல்வோம். உலகின் எந்த விளக்கினாலும் ஒளி கொடுக்கமுடியாத உண்மையானவரின் ஒளியால் எமது பாதைகள் வழிநடத்தப்பட வேண்டுவோம். நாமும் எமக்கு அடுத்திருப்பவர்களுக்காக பிரகாசிக்கும் விண்மீன்களாக மாறுவோம். கிறிஸ்து எம்மீது ஒளிர்வித்த அதே ஒளியைகொண்டு மற்றவர்களுக்கு வழிகாட்டும் விண்மீன்களாவோம்.

ம.பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர
பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சிந்தனையை மறைக்க வேண்டாம். நேர்மையான முறையில் வெளிப்படையாகப் பேசுங்கள். – ஹோமர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மூடு மந்திரம்; மூல மந்திரம்

மூடு மந்திரம் என்று பேசிக் கொள்ளும் வழக்கம் எங்கள் சாதாரண பேச்சு நடைமுறையில் உள்ளது.

எனினும் மூடு மந்திரம் என்றால் என்ன என்பதன் பொருள் இதுவரை தெரியாத விடயமாகவே காணப்படுகின்றது.

சைவ சமயத்தில் உள்ளவர்கள் தங்களை சைவசமயிகளாகப் பிரகடனம் செய்யும் பொருட்டு முதலாவது தீட்சை என்று சொல்லப்படும் சிவ தீட்சை பெற்றாக வேண்டும்.

சிவதீட்சை பெற்றவர்கள் மட்டுமே சைவ சமயிகளாவர். சிவ தீட்சை பெற்றுக் கொள்ளாத ஒருவருக்கு அவரின் இறுதிச் சடங்கின்போது சிவக் கிரியையை செய்வது ஆகாது என்பதன் காரணமாக,

இறப்பின் பின்னாக அவருக்கு சிவ தீட்சை கொடுத்து இறுதிக் கிரியை செய்யும் மரபும் சைவசமயத்தில் உண்டு.

இப்போது அந்த மரபுகளைப் பற்றிப் பேசுவது எல்லாம் அறியாமையின் பாற்பட்டது என்று விமர்சனம் எழும் என்பதால் நாம் மௌனமாக இருப்பதே புத்திசாலித்தனம்.

இருந்தும் அறியப்படாத பொருளை இவ்விடத்திலேனும் சுட்டிக்காட்டி நம்மை ஆற்றுப்படுத்திக் கொள்ள நினைத்ததன் காரணமாக மேற்படி விடயத்தை இங்கு பிரஸ்தாபித்தோம்.

இங்கு நாம் கூற வந்ததெல்லாம் மூடு மந்திரம் பற்றியதாகும். சிவதீட்சை வழங்கும் குரு, தீட்சை பெறுபவரையும் தன்னையும் வெள்ளைத் துணியினால் மூடிக் கொண்டு தீட்சை பெறுபவரின் காதில் மூல மந்திரத்தை மூன்று முறை கூறிக் கொள்வார். இங்குதான் மூடு மந்திரம் என்பது தோற்றம் பெறுகின்றது.

மூலமந்திரத்தை உச்சாடனம் செய்யும் போது, மற்றவர்கள் கேட்காமலும் உதட்டு அசைவில் ஊகம் கொள்ளாமலும் இருக்கும் பொருட்டு வெள்ளைத்துணியால் மூடி செவிவழியாக மூல மந்திரம் உபதேசிக்கப்படுகின்றது.

இருவரைத் தவிர வேறு எவரும் அறியாததன் காரணமாக மூடு மந்திரம் என்ற தொடர் வழக்கத்தில் பேசப்படலாயிற்று.

சிவ தீட்சையில் இருந்து கூறப்பட்ட மூடு மந்திரம் இப்போது அரசியல் களத்திலும் அரங்கேறி இருக்கின்றது.

ஆம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களும் சந்தித்துப் பேச்சு நடத்தியது கூட மூடு மந்திரமே.

இருவரும் என்ன பேசிக் கொண்டார்கள் என்பது தெரியாத புராணமாயிற்று. அரசியலில் மூடு மந்திரம் தேவை என்பதை நாம் மறுக்கவில்லையாயினும்,

இது மார்கழி மாதம். மார்கழி பீடை பிடித்த மாதம் என்பர் நம்முன்னோர். எனவே 2014–ம் ஆண்டில் ஜனாதிபதியைச் சந்திக்கும் முதல்வர், பங்குனி மாதத்து சுபநாளில் அச் சந்திப்பை நடத்தியிருக்கலாம்.

பங்குனி மாதத்தில் எது சுபநாள் என்று நீங்கள் யாரேனும் கேட்டால், சோதிடத்தில் நமக்குள்ள சிற்றறிவின்படி, ஆங்கிலத்து மார்ச் மாதத்தில் ஜெனிவா மாநாட்டுக்குப் பின்னரான நாள் எதுவும் சுபநாள் எனக் கூறுவோம்.

அட! சந்திப்பு முடிந்தாயிற்று. பிறகென்ன சுபநாள் என்று விட்டுவிடாமல், இனிமேல் நடைபெறுகின்ற சந்திப்புக்களையேனும் நாம் வகுத்தநாளில் வைத்துக் கொள்ளுங்கள்.

# ராதிகாவை பின் தொடரவில்லை குடிவரவு திணைக்களம் பதிலளிப்பு

கனேடிய பாராளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசனை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது அதிகாரிகள் பின்தொடரவோ, கண்காணிக்கவோ முற்றுகையிடவோ இல்லை. முல்லைத்தீவில் வைத்து அவரை சந்தித்து தெளிவுபடுத்தல் ஒன்றினை மட்டுமே வழங்கினோம் என குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

கனேடிய எம்.பி.யான ராதிகாவை யாழ்.முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா போன்ற பிரதேசங்களிலும் கொழும்பிலும் வைத்து குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் குழு பின்தொடர்ந்ததன் நோக்கம் என்ன என அத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளரை செய்தி நிறுவனம் ஒன்று தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

கனேடிய பாராளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசனை நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின் தொடரவில்லை. அவ்வாறு கூறப்படுவதை நான் முற்றாக நிராகரிக்கின்றேன்.

உண்மையில் எங்கள் குழுவினர் ராதிகாவை சந்தித்தனர். முல்லைத் தீவில் வைத்து இந்த சந்திப்பு இடம் பெற்றது.

குறித்த கனேடிய பாராளுமன்ற உறுப்பினரை வீட்டுக்காவலில் வைத்துள்ளதாகவும் வடக்கில் பல்வேறு நடவடிக்கைகளிலும் சந்திப்புக்களிலும் அவர் ஈடுபட்டுள்ளதாகவும் கடந்த நாட்க ளில் செய்தி வெளியானது.

இது தொடர்பிலேயே நாம் அவரை சந்தித்தோம். முல்லைத்தீவில் அவர் இருக்கும் இடம் தொடர்பில் விசாரித்து அறிந்து அங்கு சென்று சந்தித்த நாம், ஊடகங்களில் வெளியான இவ்வாறான செய்திகள் குறித்து வினவினோம்.

அத்துடன் வடக்கில் சில அரசியல் தலைமைகளை அவர் சந்தித்ததாக கூறப்படுவது தொடர்பிலும் நாம் கேட்டோம்.

அப்போது அவர்கள் தனது உறவினர்கள் என ராதிகா பதிலளித்தார். அதனை நாம் எதிர்க்கவில்லை. உறவினர்களை சந்திக்க நாம் தடை விதிக்கவில்லை.

சுற்றுலா விசாவில் வந்து அரசியல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பில் நாம் அவரை தெளிவுபடுத்தினோம்.

இதுதான் நடந்தது. இதனை விட எதுவும் இங்கு நடைபெறவில்லை. நாம் அவரை ஒருபோதும் பின் தொடரவும் இல்லை.

இதனை அவர் ஏற்றுக்கொண்ட நிலையிலேயே கொழும்புக்கு திரும்பியுள்ளார் என குறிப்பிட்டார் சூலானந்த பெரேரா. (எ-11)

# 400 கிலோ போதைப் பொருள் நாடு முழுவதும் விநியோகம்

(கொழும்பு)

400 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் நாடு முழுவதிலும் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென் மாகாணத்திலிருந்து நாடு முழுவதிலும் இவ்வாறு போதைப் பொருள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

விநியோகம் செய்யப்பட்டுள்ள போதைப் பொருட்களின் பெறுமதி 400 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் ஹிக்கடுவ பிரதேசத்தில் வைத்து ஆறரை கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளின் போது, நாடு முழுவதிலும் பாரியளவில் ஹெரோயின் போதைப் பொருள் விநியோகம் செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் பங்கொங்கிற்கு தப்பிச் சென்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-11)

# திருடப்பட்ட ஆடு மீட்கப்பட்டது

(கரணவாய்)

கரணவாய்பகுதியிலிருந்து ஆடொன்றைத் திருடிக் கொண்டு செல்ல முற்பட்டவேளை நெல்லியடிப் பொலிஸாரினால் தேவரையாளிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட குறித்த நபர் மேலதிக விசாரணைகளுக்காக நெல்லியடிப் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு, திருடிச் செல்லப்பட்ட ஆடு நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் உள்ளதனால் ஆட்டின் உரிமையாளர்கள் பொலிஸ் நிலையத்தினருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (அ-9-60)

# இலங்கை மீனவர்கள் 59 பேருக்கு விளக்கமறியல்

(சென்னை)

இந்திய கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 59 பேரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு இந்திய நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.


இந்தியாவின் இராமநாதபுரம் பிரதான நீதவான் நீதிமன்று இலங்கை மீனவர்களை எதிர்வரும் 10-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

இலங்கை மீனவர்கள் இரண்டாம் முறை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் இந்திய கடற்படை அதிகாரிகளினால் இலங்கை மீனவர்கள் 59 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-2)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### பட்டது பட்டேற்றும்



தச்சன் கட்டா வீட்டிலே
தாவுபரி கட்டிவிட்டால்– தங்கம்
அச்சமினி யில்லையெடி

பிறப்பிறப் பில்லாத
பெருமான் திருவடியைத்– தங்கம்
மறக்க முடியுமோடி

# சிவ சிந்தனை மிக்க மானிடர் அமரர் வேலுப்பிள்ளை



அரிது அரிது மானிடராதல் அரிது என்ற ஔவை மூதாட்டியின் முதுமொழிக்கிணங்க மானிடப் பிறவியை எடுத்து வள்ளுவன் செப்பிய தோன்றிற் புகழுடன் தோன்றுக... எனும் குறட்பாவின் அர்த்தத்தை மெய்ப்பித்து ஒன்பது தசாப்த காலமாக இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அண்மையில் பூதவுடல் நீத்து புகழுடல் பெற்றவரே சோதிட திலகம் அமரர் வேலுப்பிள்ளை சிவராமலிங்கம் ஆவார்.

புகழ்பூத்த திருநெல்வேலி மண்ணில் சோதிடம், வானியல், கணிதவியல், புலமைத்துவம் மிக்கவராய் எளிமை, அன்பு, இரக்கம், சிவ சிந்தனை மிக்க மானிடராய் வாழ்ந்த அமரரின் இழப்பு அவர் சார்ந்த பிரதேசத்திற்கு மட்டுமன்றி யாழ். குடாநாட்டிற்கே பேரிழப்பாகும்.

## மறைந்தார் மாண்பு

புகழ்தேடி அலையும் பலர் வாழும் இக்காலத்தில் இலை மறை காயாக அமைதி வாழ்வு வாழ்ந்து அமரத்துவம் அடைந்த இவர் திருப்பாவைக் காலத்தில் திடீரென்று அமரத்துவம் அடைந்தார்.

இவ்வுலகில் 94 அகவை வாழ்வது என்பதே பெருங்கொடை.

அதனினும் இறுதிநாள் வரை கூரிய கண்பார்வையுடன் சோதிடம் கணிப்பு, வீட்டுக்கு நிலையம் எடுத்தல், நன்னாள் குறித்தல் முதலிய கடமைகளைச் செய்வது என்பது இறைவனின் கொடையே.

கீழைத் திருநெல்வேலி வாலையம்மன் தேவஸ்தானத்தினதும் அருள்மிகு வெள்ளைப்பிள்ளையாரதும் தீவிர பக்தராகவும் ஆலய வளர்ச்சிக்கு இறுதி வரை உதவியவர்.

இவ் இரு ஆலயப் புனரமைப்புக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் சோதிடத்துறையுள் ஏழு தசாப்த காலமாக தன்னை இணைத்துப் பணியாற்றி பூரண வாழ்வு வாழ்ந்த இவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போமாக.

வாலையம்மன் சனசமூக நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைச்செல்வி இளைஞர் கழகம் நடத்தும் கிரிக்கெட் இறுதிப் போட்டி



தெல்லிப்பழை கிழக்கு கலைச் செல்வி இளைஞர் கழகம் ஏற்பாடு செய்து நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி யொன்று இடம்பெற்று வருகின்றது.

அணிக்கு ஆறு பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டி யாகவே இச் சுற்றுப்போட்டி இடம் பெறுகின்றது.

இப் போட்டிகளின் இறுதிப் போட்டி தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகா வித்தியாலய மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணி முதல் இடம்பெறவுள் ளது.

இப் போட்டிகளில் கொக்கு வில் காமாட்சி விளையாட்டுக் கழக அணியும் இணுவில் கலையொளி விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

தெல்லிப்பழை கிழக்கு கலைச் செல்வி இளைஞர் கழக தலைவர் நிதர்ஷன் தலைமையில் இடம்பெறும் இவ் இறுதிப் போட்டிகளின் பிரதம விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.சுகிர்தன் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ் மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஐ.தவேந் திரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப் பழை கிழக்கு கலைச்செல்வி சனசமூக நிலையத் தலைவர் அ.சதீஸ்வரன், தெல்லிப்பழை பிரதேச இளைஞர் சேவை அதிகாரி திருமதி அன்ரனி பிரசன்னா, ஓய்வுபெற்ற தெல்லிப் பழை பிரதேச இளைஞர் சேவை அதிகாரிஎஸ்.கணபதிப்பிள்ளை ஆகி யோர் கலந்து கொள்வார்கள்.

வெற்றி பெறும் அணிக்கு பெறுமதி யான பரிசில்களும் வெற்றிக்கிண்ண மும் வழங்கப்படவுள்ளது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி; காமாட்சி, கலையொளி வெற்றி

தெல்லிப்பழை கிழக்கு கலைச் செல்வி இளைஞர் கழகம் ஏற்பாடு செய்து நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி யொன்று இடம்பெற்று வருகின்றது.

அணிக்கு ஆறு பேர் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டி யாகவே இச் சுற்றுப்போட்டி இடம் பெறுகின்றது.

இப் போட்டிகளின் இறுதிப் போட்டி தெல்லிப்பழை கட்டுவன்புலம் மகா வித்தியாலய மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணி முதல் இடம்பெறவுள்ளது.

இப் போட்டிகளில் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழக அணி யும் இணுவில் கலையொளி விளை யாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

முன்னதாக இடம்பெற்ற முதலா வது அரையிறுதிப் போட்டியில் கொக் குவில் காமாட்சி விளையாட்டுக் கழக அணியும் கொட்டடி பால்ராஜ் விளை யாட்டுக் கழக அணியும் மோதின.

நாணயற்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறை வில் 82 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழக அணி சார்பில் ரம்மியராகுலன் ஆட்டமிழக் காது 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் கொட்டடி பால்ராஜ் விளையாட்டுக் கழக அணி சார்பாக விய சன் ஒரு இலக்கினைக் கைப்பற்றினார்.

83 ஓட்டங்கள் என்னும் வெற்றி இலக்கு நோக்கி துடுப்பாடிய கொட்டடி பால்ராஜ் விளையாட்டுக் கழக அணி 5 ஓவர்களில் 69 ஓட்டங்களை மட டுமே பெற்றுக் கொள்ள முடிந்தது.

துடுப்பாட்டத்தில் கொட்டடி பால் ராஜ் விளையாட்டுக் கழக அணி சார்பில் அழகன் 39 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழக அணி சார்பாக ஜெயரூபன் 2 இலக்குகளைக் கைப் பற்றினார்.

இதன் மூலம் இப் போட்டியில் வெற்றி பெற்று கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழக அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

மற்றைய அரையிறுதிப் போட்டி யில் திருநேல்வேலி முத்துத்தம்பி மத்திய விளையாட்டுக் கழக அணி யும் இணுவில் கலையொளி விளை யாட்டுக் கழக அணியும் மோதின.

நாணயற்சுழற்சியில் வென்று திருநெல்வேலி முத்துத்தம்பி மத்திய விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பாடியது.

முதலில் துடுப்பாடிய திருநெல் வேலி முத்துத்தம்பி மத்திய விளை யாட்டுக் கழக அணிதனது 5 ஓவர்கள் நிறைவில் 40 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் திருநெல்வேலி முத்துத்தம்பி மத்திய விளையாட்டுக் கழக அணிசார்பாக வாமனன் 13 ஓட்டங் களைப் பெற்றுக் கொடுத் தார்.

பந்துவீச்சில் இணுவில் கலை யொளி விளையாட்டுக் கழக அணி சார்பாக தர்சன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

41 என்னும் வெற்றி இலக்கு நோக்கி துடுப்பாடிய இணுவில் கலை யொளி விளையாட்டுக் கழக அணி 4.3 பந்துப் பரிமாற்றங்களில் வெற்றி இலக்கினை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இணுவில் கலை யொளி விளையாட்டுக் கழக அணி சார்பாக மோகன்ராஜ் 15 ஓட்டங் களைப் பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் திருநேல்வேலி முத்துத்தம்பி மத்திய விளையாட்டுக் கழக அணிசார்பாக கோபி ஒரு இலக்கினைக் கைப்பற்றினார்.

இதன்படி மற்றைய அணியாக இணு வில் கலையொளி விளையாட்டுக் கழக அணி இறுதிக்கு தகுதி பெற் றது. (க-23)

## அஷஸ் டெஸ்ட்

## ஆஸி அபார பந்துவீச்சு; இங்கிலாந்து திணறல்



அவுஸ்திரேலிய அணி யின் அபார பந்துவீச்சின் மூலம் இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்சில் 155 ஓட்டங்களுக்குள் ஆட்டமி ழந்துள்ளது.

இங்கிலாந்து - அவுஸ்தி ரேலியா அணிகள் மோதும் அஷஸ் 5 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் நடைபெற்று வருகிறது. அவுஸ் திரேலியா முதல் இனிங்சில் 326 ரன்கள் குவித்து **ஓல்அவுட** ஆனது. சுமித் சதம் (115 ரன்கள்) அடித்தார்.


பின்னர் முதல் இனிங்சை விளையாடிய இங்கிலாந்து நேற் றைய முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் ஒருவிக்கெட் இழப்புக்கு 8 ரன்கள் எடுத்து இருந்தது. கப்டன் கூக் 7 ரன்களிலும், ஆண்டர்சன் 1 ரன்னிலும் களத்தில் இருந்தனர்.

நேற்று (சனிக்கிழமை) 2 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. இங்கிலாந்து அணி தொடர்ந்து விளையாடியது.

அவுஸ்திரேலிய வீரர்களின் அபாரமான பந்து வீச்சால் இங் கிலாந்து அணி விக்கெட்டுகளை இழந்து திணறியது.

125 ரன்களில் அந்த அணி 9 விக்கெட்டுகளை இழந்து பரிதாப நிலையில் இருந்தது. பென் ஸ்டோக்ஸ் ஒருவர் மட்டுமே சமாளித்து ஆடினார். அவர் 47 ரன்களில் ஆட்டம் இழந்தார்.

இங்கிலாந்தின் கடைசி விக் கெட்டான ஸ்டூவர்ட் பிராட், ரன் கின் ஜோடி போராடியது. இங்கி



லாந்து அணி 155 ரன்களில் சுருண்டது. கடைசியாக ரன்கின் 13 ரன்களில் ஆட்டம் இழந்தார். பிராட் 30 ரன்களில் ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

ஹாரிஸ், பீட்டர் சிடில், ஜான் சன் தலா 3 விக்கெட்டுகள் கைப்பற்றினார்கள். 171 ரன்கள் முன்னிலையில் அவுஸ்திரே லியா 2 ஆவது இன்னிங்சை விளையாடி வருகிறது.

பின்னர் தனது இரண்டாவது இனிங்சை விளையாடிய அவுஸ் திரேலியா அணி நேற்றைய ஆட்ட நேரமுடிவில் 4 விக்கெட் கள் இழப்பிற்கு 140 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் ரோஜ ர்ஸ் ஆட்டமிழக்காமல் 73 ஓட்ட ங்களை பெற்றார். (க)

## நியூசிலாந்து வெற்றி

வெஸ்ட் இண்டீஸ்க்கு எதிரான ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து டக்வோர்த் லூவிஸ் முறைப்படி 58 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நியூசிலாந்து- வெஸ்ட் இண் டீஸ் அணிகள் மோதும் 4ஆவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நேற்று நடந் தது. 'டொஸ்' வென்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத் தாடியது. நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் அந்த அணி 6 விக்கெட்டுகள் இழப் புக்கு 285 ரன்கள் குவித்தது.

தொடக்க வீரர் மார்ட்டின் குப் தில் 81 ரன்களும், ரோஸ் டெய்லர் 49 ரன்களும், வில்லியம்சன், டைரடர் தலா 47 ரன்களும் எடுத் தனர். பிராவோ 2 விக்கெட்டுகளும், ஹோல்டர், பெஸ்ட், கனில்நரீன் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றி னார்கள்.

286 ரன்கள் இலக்குடன் விளை யாடிய வெஸ்ட் இண்டீஸ் 33.4 ஓவர் களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 134 ரன்கள் எடுத்து இருந்த போது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட் டது. இதன்பின் மழை தொடர்ந்து வர, டக்வோர்த் லூவிஸ் முறைப்படி நியூசிலாந்து அணி வெற்றி பெற்ற



தாக அறிவிக்கப்பட்டது.

5 போட்டி கொண்ட தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் உள் ளது. முதல் போட்டியில் வெ[illegible] டீசும், 3ஆவது போட்டியில் நியூசி லாந்தும் வெற்றி பெற்றன. 2ஆவது போட்டி மழையால் ஒரு பந்து கூட வீசப்படாமல் இரத்து செய் யப்பட்டது.

3 டெஸ்ட் கொண்ட தொடரை [illegible] கைப்பற்றி [illegible] கது. (க)

## அராலி மாவத்தை வி.க. நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளை முன் னிட்டு பல போட்டிகளை மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடாத்தி வருகின்றது.

இதன் ஒரு அங்கமான வலிகாம லீக்கிற்குட்பட்ட அணிகளிற்கிடை யிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் காலிறுதிப் போட்டிகள் ஆரம்பமாகின் றன.

இதன்படி 3.30 மணிக்கு இடம் பெறவுள்ள முதலாவது காலிறுதிப் போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து நவாலி சென் பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

தொடர்ந்து 4.30 மணிக்கு இடம் பெறவுள்ள 2ஆவது காலிறுதிப் போட்டி யில் அராலி அன்னா விளையாட்டுக் கழக பீ அணியை எதிர்த்து தெல்லிப் பழை நாமகள் ஏ அணி மோத வுள்ளது.

நாளை திங்கட்கிழமை இடம் பெறவுள்ள மற்றைய காலிறுதிப் போட்டிகளில் 3.30 மணிக்கு இடம் பெறும் போட்டியில் அராலி அன்னா விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து இளைவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழக அணியும் மோத வுள்ளது.

4.30க்கு இடம்பெறவுள்ள மற் றைய காலிறுதியில் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளது. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிதரன் வீட்டில்...

வீதியில் நீண்ட நேரம் தரித்து நின்றதுடன் பலமுறை வீட்டை மோட்டார் சைக்கிளில் வட்டமிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சுமார் இரவு 8.00 மணி வரை எம்.பியின் வீடு உள்ள பகுதியில் குறித்த மர்ம நபர்களை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாக குடும்பத்தினரும் அயலவர்களும் தெரிவித்தனர் .

இது தொடர்பில் குடும்பத்தார் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு தெரியப்படுத்தியதை அடுத்து இவ் விடயம் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியு மான சுமந்திரனின் கவன த்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (எ-11)

## துப்பாக்கி...

பின்னர் இறந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த பாதாள உலகக் குழுவின் தலைவர் பல குற்றச் செயல்களுக்காக பொலிஸாரால் தேடப்பட்டு வந்துள்ளார். (எ-11)

## கருத்துக்களை...

கருத்துக்கள் என்று தவறாக புரிந்து கொள்வார்கள் என கண்டிப்புடன் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

பாரிய ஹெரோயின் போதைப் பொருள் அடங்கிய கொள்கலனை மீட்பதற்கு பிரதமரின் செயலாளர், ஊடாக கடிதம் ஒன்று சுங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஹெரோயின் போதைப் பொருள் கடத்தலுடன் பிரதமர் டி.எம்.ஜயரத்னவிற்கு தொடர்பிருப்பதாக செய்திகள் வெளியாகின.

இது தொடர்பாக பிரதமருக்கும், ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையில் கருத்து மோதல் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (எ-11)

## மன்னார் மனித...

மேலும் 4 மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த மனித எலும்புக் கூடுகளில் உள்ள மண்டை ஓடுகள் சிலவற்றின் மேல் பகுதியில் துவாரங்கள் காணப்பட்டன. இந்நிலையில் தற்போது மீட்கப்பட்டுள்ள மனித எலும்புக் கூடுகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தர விட்டுள்ளார்.

இலங்கையில் போர் இடம் பெற்ற காலங்களில் படைத்தர ப்பினரால் கடத்தப்பட்டு காணாமல் போன தமிழ் உறவுகளின் எலும்புக் கூடுகளே திருக்கேதீஸ்வரம் பகுதியிலிருந்து மீட்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டிருந்த மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப், இந்த மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை உடன் தேவை என்றும் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பொறுப்புக் ...

ஆராய்ந்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, தண்டனை விதிக்கப்படுவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என கடந்த வருட நடுப்பகுதியில் இன்னர் சிற்றி பிரஸ் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வியின் போது இவர் வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன், இவ்விவகாரம் தொடர்பில் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பது குறித்து முடிவு செய்வதற்காக அரசாங்கத்தை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் இச்செவ்வியின் போது சுட்டிக்காட்டியிருந்தார். (எ-11)

## இராணுவ அடக்குமுறையின்றி ...

அமைச்சர்களின் செயலாளர்கள் மற்றும் மாகாண சபையின் பிரதம செயலாளரின் நியமனம் தொடர்பில் முதலமைச்சருடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினையும் முன்வைத்திருந்தோம்.

இக் கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தியதோடு இவற்றிற்கு தீர்வு காண்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் பரிசீலனை செய்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

குறிப்பாக வடமாகாணத்திற்கான செயலாளர் நியமனம் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த கால கட்டத்தின் போது அநாவசியமாக கைது செய்யப்பட்ட தமிழ் கைதிகளை வரும் தைப் பொங்கல் தினத்திற்கு முன்னதாகவே விடுதலை செய்யக் கோரியிருந்தோம்.

ஜனாதிபதி என்ற வகையில் அவரால் தமிழ் கைதிகளை விடுதலை செய்ய முடியும். அந்த நம்பிக்கையினாலேயே கைதிகள் தொடர்பிலும் ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தோம்.

இவை சட்டச் சிக்கல்கள் உள்ளது. மற்றும் நீதி முறையின்படி செயற்பட வேண்டும். எனினும் இவர்கள் விடயத்தில் விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் ஜனாதிபதி எமக்கு தெரிவித்தார்.

அத்தோடு வட மாகாணத்தை கட்டுப்படுத்தி தமிழர்களை அடக்கி ஆட்சி நடத்த அரசாங்கம் ஒரு போதும் விரும்பவில்லை. அவர்களுக்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் செய்து வருகின்றது. தமிழர்கள் தொடர்பிலும் கவனத்திற் கொண்டு செயற்படுவோம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதேபோல் யுத்தத்தின் பின்னர் வட மாகாண மக்கள் ஓரளவு அமைதியான வாழ்க்கையினை வாழ்ந்து வருகின்றனர். வடக்கு மக்களின் வாழ்க்கையில் நிரந்தரமான தீர்வொன்றினைப் பெற்றுக் கொள்ளவே நாம் போராடி வருகின்றோம்.

இராணுவ அடக்கு முறைகள் கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டு ஏனைய மாகாண மக்கள் வாழ்வதைப் போல் வடக்கு மக்களும் வாழ வேண்டும் என்பதனையே வட மாகாண முதலமைச்சர் என்ற வகையில் விரும்புகின்றேன்.

எனவே வட மாகாண சபை தொட ர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான பேச்சுவார்த்தை திருப்திகரமாகவும் வெற்றிகரமானதொரு பேச்சுவார்த்தையாகவும் அமைந்துள்ளது வெகுவிரைவில் வட மாகாண மக்களுக்கான தீர்வினை எதிர் பார்க்கின்றோம் எனவும் விக்னேஸ்வரன் தெரிவித்தார். (எ-11)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurii@yahoo.com,
valampurijaffna@gmail.com

## யுத்தத்தை நோக்கிய...

பகுதி யென்பதனால் இங்கு இக்கட்டான சூழ்நிலை காணப்பட்டிருந்ததோடு மக்களிற்கும் பல தேவைகளும் இருந்தன.

நான் கடமையேற்ற போது இங்கு நான்கு இராணுவ பிரிவு காணப்பட்டதோடு அதில் 27 ஆயிரத்து 600 பேர் அங்கத்தவர்களாகவும் இருந்தனர்.

இவ் இராணுவ பலத்தினை வைத்து மக்களின் தேவைகளினை நிறைவேற்ற எண்ணியிருந்ததோடு வலுவான சக்தியினூடாக அபிவிருத்தியினை கட்டியெழுப்ப வேண்டுமெனவும் எண்ணியிருந்தேன்.

எனினும் இராணுவத்திற்கும் பொது மக்களிற்கும் இடையிலான உறவு பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது.

இறுதிக் கட்டப்போரின் போது தமிழீழ விடுதலைப்புலிகளினை நாம் எதிர்த்து போராடியிருந்தோம். இதன்போது பொது மக்களும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இராணுவம் தமக்கு எதிரானவர்களுடன்தான் போராடியது. இராணுவம்தான் எமக்கு கேடு விளைவித்தது என மக்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளினை அறிந்து அவர்களுடனான உறவினை வலுப்படுத்த எண்ணியிருந்தோம்.

தென்னிலங்கையிலிருந்து இங்கு வந்து உறவினை கட்டியெழுப்புவது என்பது கடினமான தொன்றாகும்.

ஆனால் பொது மக்களினை தொடர்பு கொள்ளக் கூடிய அலுவலங்களினை அமைத்து அத்தொடர்பினை வலுப்படுத்தி வருகின்றோம்.

உங்களுடைய சொத்துக்களை யாழ். மாவட்டத்தின் பல இடங்களிலும் இராணுவத்தினர் பயன்படுத்தி வருகின்றோம்.

இங்கு தற்போது 13 ஆயிரத்து 150 பேர் இராணுவ அணியாகவுள்ளனர்.

இராணுவ அணிப்பிரிவுகளும் எண்ணிக்கையும் நாளாந்தம் படிப்படியாக குறைக்கப்பட்டு வருகின்றன.

52-வது இராணுவ பிரிவின் கட்டுப்பாட்டிலுள்ள காணி எதிர் வரும் 8-ம் திகதி விடுவிக்கவுள்ளோம்.

கடந்த காலங்களினை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள் இனியும் எமக்கு அது வேண்டாம்.

இனிவரும் காலப்பகுதியில் எமக்குள் பிணக்கு ஏற்பாட்டால் அது பாரிய அழிவாக இருப்பதோடு இலங்கை முழுவதிலும் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும்.

கடந்த வருடம் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றிருந்தது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றியீட்டியிருந்தது.

மாகாண சபையினை கைப்பற்றிய அக்கட்சி அபிவிருத்தியினையும் சமத்துவத்தினையும் நோக்கி பயணிக்க வேண்டும்.

அரசியல் நோக்களிற்காக மீண்டுமொரு யுத்தத்தினை நோக்கி வடக்கு மாகாண சபை செல்லக் கூடாது.

கொழும்பு, யாழ்ப்பாணம் எனப் பிரித்து பார்க்காமல் தர்க்க ரீதியில் பேசாமல் ஐக்கியமாக அனைவரும் இருக்க வேண்டும் என்றார்.


இப்பிரிவுபசார விருந்தில் ஈழத்தின் முன்னணி பாடகர்களில் ஒருவரான எஸ்.ஜி.சாந்தனின் இசை நிகழ்ச்சியும் நடன மங்கையரின் நாட்டியமும் கலந்து கொண்டோருக்கு காண்பிக்கப்பட்டது. (எ-4)

## மீட்கப்பட்ட...

இது தொடர்பில் வல்வெட்டித் துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதுடன், அங்கு வந்த பொலிஸார் இராணுவத்தினருக்கு தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்தே அந்த குண்டு மைதானத்தில் வைத்தே செயலிழக்க செய்யப்பட்டது. (எ-11)

## கண்ணீர் காணிக்கை



அமரர்

**பொன். தெய்வேந்திரம் அவர்கள்**

யாழ்ப்பாணம் உரும்பிராய் கருணை இல்லத்தின் ஸ்தாபகரும் தமிழ் அநாதைகள் நம்பிக்கை நிதியத்தை உருவாக்கியவரும் எமது மகாதேவா ஆச்சிரம இல்லக்குழந்தைகள் மீது அன்பு கொண்டு அடிக்கடி சுகம் விசாரித்து கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக எமது இல்லக் குழந்தைகளுக்கு உதவியவருமான அமரர் **பொ. தெய்வேந்திரம்** அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம்.

இவர்தம் பிரிவால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி எமது மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று 05.01.2014 மதியம் 12.00 மணிக்கு இடம்பெறும்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

இவ்வண்ணம்
தலைவர் தி. இராசநாயகம், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள், இல்லக் குழந்தைகள்,
மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம்.

(C-6110)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் நலன்புரிச் சங்கத்தினால் அபிவிருத்தி நிதிக்காக 01.01.2014-ம் திகதி (புதன்கிழமை) அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நடத்தப்பட்டது.

இச் சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு:

1-ம் பரிசு: இல.09124
2-ம் பரிசு: இல.13106
3-ம் பரிசு: இல.09528

ஆறுதல் பரிசுகள் :

1-ம் ஆறுதல் பரிசு: இல.17405
2-ம் ஆறுதல் பரிசு: இல.12493
3-ம் ஆறுதல் பரிசு: இல.18620
4-ம் ஆறுதல் பரிசு: இல.04059
5-ம் ஆறுதல் பரிசு: இல.05995
6-ம் ஆறுதல் பரிசு: இல.18338
7-ம் ஆறுதல் பரிசு: இல.03075
8-ம் ஆறுதல் பரிசு: இல.13456
9-ம் ஆறுதல் பரிசு: இல.15722
10-ம் ஆறுதல் பரிசு: இல.19283

வெற்றியாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் கடமை நேரத்தில் செம்மணி வீதி, நல்லூரில் அமைந்துள்ள கல்வி அமைச்சில் சங்க தலைவர்/செயலாளரிடம் இருந்து பரிசு களை பெற்றுக் கொள்ளமுடியும். 31.01.2014-ம் திகதிக்கு முன்னர் பரிசில்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NEW SCIENCE CENTRE
Jaffna

**CHEMISTRY**

திரு.அ.சேந்தன்

**A/L 2016**

(C-6083)

ஆரம்பம் :

05.01.2014 (2.00 Pm)

A/L 2014, 2015 DAY CLASS

வகுப்புக்கள் நடைபெறுகின்றன

## A/L DAY CLASS
### வரலாறு

ஆசிரியர் :- S.S. தாஸ் BA (Hons)

2014 :- NEC - யாழ்நகர்
வீனஸ் - கிளிநொச்சி
HAC - சித்தன்கேணி

குறிப்பு: 2013
18"A" தர சித்திகள்
16"B" தர சித்திகள்
20"C" தர சித்திகள்
100% பெற்ற எனது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்

(5233)

## வேலைவாய்ப்பு

இன்றே பதிவுக்கு முந்துங்கள். ஜேம் / கோடியல் / சோஸ் / சோய்ஸ் / நூடில்ஸ் / டயர் / கிளவுஸ் / பிளாஸ்டிக் / அலுமினியம் / பிறிண்டிங் / தேங்காய்ப்பால் / கோழி இறைச்சி / ரின் பிஸ் / Cargills (Keels Delivery) * உற்பத்தி உதவியாளர் * லேபல் * பொதியிடல் பிரிவுக்கு 18-50 ஆண் பெண் தேவை. கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் உணவு & தங்குமிடவசதிகள் குறைந்த விலைகளில். சம்பளம் 18000/- - 32000/-

தொடர்பு : 0778430179 (C-6104)

## நிரந்தர வேலைவாய்ப்பு

உங்கள் வாழ்க்கைக்கு நிரந்தர தொழில் ஒன்று தேவையா? அப்படியானால் அழையுங்கள். எம்மிடம் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் கோழி இறைச்சி / தண்ணீர் போத்தல் / சொக்லட் / பிஸ்கட் / காமெண்ட் / தூரிகை / பெயிண்ட் / தேயிலை / Cargills / Keels / குளிர்பானம் / Mycola / இன்னும் பல தொழிற் சாலையில் தயாரிப்புக்கு உற்பத்தி உதவியாளர் * லேபல் * தரம்பிரித்தல் * பொதியிடல் பிரிவுக்கு 18-50 ஆண் பெண் தேவை. உணவு & தங்குமிடவசதிகள் குறைந்த விலைகளில். சம்பளம் 20000/- - 32000/- வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு.

தொடர்பு : 0775561883 (C-6106)

## இந்தியாவில்...

பி.சம்பத், செயற்குழு உறுப்பினர்களான பி.செல்வசிங், க. கனகராஜ் மற்றும் மாநிலக்குழு உறுப்பினர்களான ஏ.ஆறுமுக நயினார், ஆர்.கோவிந்தராஜன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது வட மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னரான நிலைமைகள், ஈழத்தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகள் மற்றும் இனப்பிரச்சினைகான அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைபாடு என்பன தொடர்பில் சம்பந்தன் விளக்கியதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-11)

## O/L பரீட்சைக்குத் தோற்றிய A/L பெறுபேறுகள் பெற்ற அனைவரது எதிர்காலத்துக்கும் இதோ எங்கள் தெரிவுகள்!



France, Switzerland, New Zealand, Cyprus, Australia, Canada வுக்கான
**Student Visa ஏற்பாடுகள்**

மிகக் குறைந்த கட்டணத்துடன் MBBS, Engineering, Business Management, Computing & IT, Travel & Tourism, LAW
இன்னும் பல **வெளிநாட்டுப் பட்டக்கல்வி ஏற்பாடுகள்**

**மாதம் 50,000/- வருமானத்துடனான வெளிநாட்டு தொழிற்பயிற்சி**

முற்பதிவுகளுக்கு: Call / SMS Your Name & Address to 077 36 16 798

Bahrain, Quatar, U.A.E. உள்ளிட்ட நாடுகளில்
**தொழில்வாய்ப்புக்கள்**

தொழிற்திறன் விருத்திப் பயிற்சி & ஆங்கிலக் கற்கைநெறியுடன்
**உள்நாட்டு தொழில்வாய்ப்புக்கள்**

என்னென்ன உங்களுக்கு வேண்டுமோ! அத்தனையும் எங்களிடமே உண்டு!!

மேலதிக விபரங்களுக்கு:
**www.sikaram.lk**
கல்விக்கும், தொழிலுக்கும் என்றே ஒரு இணையம்
EduSikaram

**சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி**
இல. 153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
வெளிநாட்டுக் கல்வி - வெளிநாட்டுத் தொழில் - உள்நாட்டுத் தொழில்

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

O/L பரீட்சை எழுதிய மாணவர்களினது நன்மை கருதியும்,
வருகின்ற புத்தாண்டு 2014 ற்காகவும்
விசேட கட்டணக் கழிவில் சர்வதேச தரம் கொண்ட கற்கைநெறிகள்

இன்னும் சில மாதங்களில் நீங்கள் உயர்தரத்திற்குச் செல்லலாம், படித்துப் பட்டதாரி ஆகலாம், வேறு சிலர் தொழிற்சந்தையிலே நல்ல வேலைவாய்ப்பைத் தேடலாம் அல்லது வேறு உயர் கற்கைநெறிகளைக்கற்று நீங்கள் வாழ்க்கையை முன்னேற்ற விரும்பலாம். ஆனால் இக் கனவையெல்லாம் நீங்கள் நனவாக்க வேண்டுமானால் தற்போதைய காலகட்டத்திலே ஆங்கில அறிவு மிக மிக அவசியமானது.

### Spoken English With Grammar - Quick Learning Course

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

### Diploma In English
Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

### B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

### IELTS Acadamic/General
Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

**We gurantee success rate 6.5 band and above**

### A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

- UK அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
- சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை.
- ஏனைய பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானது.

எமது நிறுவனத்தினால் 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் பரீட்சையில் சித்தி எய்தி வெளிநாடு சென்றுள்ளார்கள்

Duration: (2 Months)

**Batches Starting on**
06-01-2014 @ 9.00am
11-01-2014 @ 11.00am
15-01-2014 @ 9.00am
20-01-2014 @ 10.00am
25-01-2014 @ 9.00am

Head Office : No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel :0112500207
No.15 2/1, Sirambiyadi Lane (Off Stanley Road), Jaffna. Tel : 021-2224550
No.3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavapuliyankulam, Vavuniya. Tel : 024-3245287

Hot Lines : 0777585913, 0777222422 , 0714299935, 0777730074

## பிரத்தியேக கணனி வகுப்பு

உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

**DTP**
(Photoshop CS5, CorelDraw X4, Page Maker)
MS Office, Internet & E.mail, Web Design.

சிறுவர்களுக்கான கற்கை நெறி.

தொடர்பு: 0779672038
ஆசிரியர் : KRC

(5243)

## காவலாளி தேவை

கோப்பாய் பொலிஸ் நிலைய அண்மையில் ராசவீதியில் அமைந்துள்ள நிறுவனமொன்றின் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்ட (ஸ்ரோஸ் உட்பட) காணி ஒன்றிற்கு நிரந்தர காவலாளி உடன்தேவை. அண்மையில் வசிக்கும் 50-60 வயதிற்குட்பட்வர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0779001523

(5236)

## FRENCH LANGUAGE CENTRE

FALC யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.

## FRENCH CLASSES

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 750 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

கடந்த DELF Exam இல் வடக்கில் எம் மாணவர்கள் மட்டுமே சித்தி.....
குறுகிய காலத்தில் DELF பரீட்சைக்கு தோற்றலாம் நேரத்தை வீணடிக்காது..
எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறரர்கள்.......

| | | |
|---|---|---|
| ஆரம்பம்: 18.01.14 at 8am. No. 40, Palaly Road, ஆரியகுளம். | ஆரம்பம்: 20.01.14 at 3pm. No.181, 1st Floor, Main Street, Nelliady. | Deutsch & Sinhala வகுப்புகளும் நடை பெறுகிறது... 0779 789 456 |

## திருமறைக் கலாமன்றம்
## கலைத்தூது அழகியல் கல்லூரி

எமது கல்லூரியினால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2014ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பிரதான பாடங்கள்**

- வாய்ப்பாட்டு
- நடனம் (பரதம், கதகளி, மோகினி)
- வீணை
- வயலின்
- புல்லாங்குழல்
- மிருதங்கம்
- ஓர்கன் (கீபோட்)
- ட்றம்
- ஒக்ரோபாட்
- சித்திரம்
- நாடகமும் அரங்கியலும்

**சிறப்புப் பாடங்கள்**

- கூத்து
- கண்டிய நடனம்
- யோகாசனம்
- அழகுக்கலை (முக ஒப்பனை, தலையலங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம், தையல்)
- பண்பாடு (கிறிஸ்தவக் கலைகள், சைவ சித்தாந்தம்)

**துணைப் பாடம்**

- ஆங்கிலம்

**இப் பாடங்களைப் பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து 14-01-2014 செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.**

மேலதிக விபரங்களுக்கும், தொடர்புகளுக்கும்
அதிபர்,
கலைத்தூது அழகியல் கல்லூரி
இல. 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 9419

(C-6084)

## IELTS Special Class

March - 8ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வீசேட வகுப்புகள் திங்கள் தொடக்கம் வரை காலை 7 மணி முதல் 8.30 மணி வரை 3 மணி - 5 மணி வரை நடைபெறும்

ஆரம்பம் 06-01-2014




- INDIVIDUAL TRAINING
- UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
- WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
- MORE THAN 10 YEARS EXPERIENCE
- VOCABULARY and GRAMMAR
- EXTENDED SPEAKING PRACTICE

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

## BRITISH COLLEGE OF ENGLISH

No. 192, Navalar Road, Jaffna (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel 0755435089 0778803887

(C-6088)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.